# என் [illegible]

இரசிகமணி
கனக செந்திநாதன்



உ

# என் கதை

முதலாம் பகுதி


(எழுத்தாளர் ஆவதற்கு முன்)

## பாலைவனமும் - பசுஞ்சோலையும்

இரசிகமணி
கனக. செந்திநாதன்

## தீதிவெண்பா

காண்வருஷம் பிங்களத்தின் கார்த்திகையொன் ருயபுதன்
பூண்கந்த ஷஷ்டிவளர் பொன்னேணம் — சேண்கொள்
கனகசெந்தில் நாதன் கதியடைந்தான் சோதி
வனஜசெந்தில் நாதனடி வாய்த்து.



**05 - 11 - 1916 — 16 - 11 - 1977**

# பதிப்புரை

'இரசிகமணி' என்றும் 'இலக்கியச் செல்வர்' என்றும் கற்றறிந்த வல்லுநர் போற்றுமளவுக்கு, கலை, இலக்கியம், கல்வி, சமயம் போன்ற நற்றுறைகளில், அரியநற்பணிகள் புரிந்தவர் எமது தந்தை கனக. செந்திநாதன் (திருச்செவ்வேல்) அவர்கள். தான் பிறந்த குரும்பசிட்டிக் கிராமத்தைப் பொன்னெனப் போற்றினார். அதன் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டார். தமிழ் படித்து, சாதாரண தமிழாசிரியராகத் தன் வாழ்வை மேற்கொண்டார். ஆனால், அவரது சிந்தனையும், எழுத்தும் அகலமாக, ஆழமாக, வேகமாக, சுவாரஸ்யமாகத் தொழிற்பட்டன. இவரது சிந்தனைக்கரு வூலங்கள், எழுத்தோவியங்கள் ஈழத்து ஏடுகள் எல்லாவற்றையும் அணிசெய்தன. சில வானொலி மூலம் ஒலிபரப்பாயின; சில நூலுருப்பெற்றுப் பாராட்டுக்களைப் பெற்றன. ஆயிரம் ஆயிரமாக இவருக்கென ஒரு ரசிகர் வட்டம் உருவாகியது. பள்ளிகளில் இருந்தும் பல்கலைக் கழகங்களில் இருந்தும் எமது தந்தையைத் தரிசித்துக் கலந்துரையாட வந்தோர் அநேகர். தென்னகத்தில் இருந்தும் ஈழத்துக்கு வந்த எழுத்துலகப் பெருமக்கள் பலர் தந்தையாரைச் சந்தித்து உரையாடிக் கருத்துப்பரிவர்த்தனை செய்ததுண்டு. கடிதத் தொடர்பு வைத்த பேரறிஞர்களும் உளர். இந்த அளவுக்கு எழுத்துத் துறையிற் கணிசமான சாதனை புரிந்த தந்தையார் நோயுற்ற வேளை தனது எழுத்தோவியங்கள் எல்லாம் நூல்வடிவம் பெறவேண்டுமென விரும்பினார். இந் நிலையில், இவரது உற்ற நண்பர்கள் பலர் தந்தையாரைச் சந்தித்து அவர் தமது வாழ்க்கைக் குறிப்புக்களை அடக்கிய நூலொன்றை எழுதி வெளியிடுவது அவசியம் என வற்புறுத்தினர். உளநூல் ஆராய்ச்சிக்கும், வருங்கால இளைஞர் தம் வாழ்வுக்கு வழிகாட்டியாய் அமையவும் இத்தகைய முயற்சி நற்பயன் தருமென்றனர். இதனால் உந்தப்பட்ட தந்தையார் 'என் கதை' என மகுடமிட்டு 'பாலைவனமும்

பசுஞ்சோலையும் என்ற தனது சுயசரிதையின் முதலாம் பகுதியை எழுதினார்கள். தொடர்ந்து இரண்டாம் பகுதியை எழுதுவதற்கு முன், நோயில் ஏற்பட்ட வேகமான மாற்றங் காரணமாக இவ்வுலக வாழ்வை நீக்க நேரிட்டது.

தமது எழுத்தால் தமிழ்ப்பணி புரிந்து எமது குடும்பத்துக்கு மாபெரும் பெருமைதேடித்தந்த தந்தையை, தமிழ் கூறுநல்லுலகம் போற்றும் எமது அருமைத் தந்தையை, நினைவுகூருமுகமாக, அவர் ஆத்மசாந்திக்காக அவர் கரத்தால் இறுதிக் காலகட்டத்தில் தீட்டப்பட்ட ‘என் கதை’ என்ற தலைப்புடைய ‘பாலைவனமும் பசுஞ்சோலையும்’ என்ற நூலைப் புத்தகவுருவிற் கொணரக் குடும்பத்தினர் அனைவருமே பேராவல் கொண்டோம். எமது விருப்பு நிறைவேறிய நிலையில் இந்நூலினைத் தங்கள்முன் சமர்ப்பிக்கின்றோம்.

இந்த நூல் சிறந்த வடிவில் உருவாக எமது அன்புக்குரிய உறவினரும், தனலக்குமி புத்தகசாலை அதிபருமான திரு. மு. சபாரத்தினம் அவர்களும், தந்தையாரது உற்ற உறவினர்கள், நண்பர்கள் சிலரும் நல்கிய ஆலோசனைகளுக்கு நாம் என்றும் கடப்பாடுடையோம். துரிதமாகத் தொழிற்பட்டுச் சிறந்த முறையில் அச்சேற்றி உதவிய காங்கேசன்துறை சந்திரா அச்சகத்தாருக்கும் எமது நன்றிகள்

எமது தந்தையாரின் பிரிவின்போது ஈமக்கிரியை, அந்தியேஷ்டி என்பவற்றில் பெருமளவிற் பங்குகொண்ட, எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், பெருமக்கள், ஊரவர்கள், மாணவர்கள், சுற்றமித்திரர்கள் அனைவர்க்கும் எமது பணிவான நன்றிகள்.

வணக்கம்

‘பராசக்தி நிலையம்’
குரும்பசிட்டி.
தெல்லிப்பழை.
16-12-77

தி. குகானந்தன்
(மகன்)

# முகவுரை

## ஏன் எழுதுகிறேன்?

'பாலைவனமும் பசுஞ்சோலை'யும் என்ற தலைப்பில் என் இலக்கிய வாழ்க்கையை (குடும்பவாழ்க்கையை) அன்று எழுதவேண்டும் என்று நினைத்ததற்கு ஒரே ஒரு காரணம் தான் உண்டு. எனது உற்ற நண்பரும் பிரபல கவிஞருமாகிய க. சச்சிதானந்தன் 1968 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்து ஒருநாள் இரவு எட்டு மணிக்கு என் வீட்டுக்கு வந்தார் "இந்த இரவு நேரத்தில் நான்கு மைல் தூரமுள்ள மாவிட்டபுரத்தில் இருந்து வருகை தந்திருக்கிறீரே, முக்கிய காரணம் என்னவோ?" என வினவினேன். அவர் மிகச் சாதாரணமாக, "நான் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையை (அவர் நான்கு வருடமாகச் சமூக சம்பந்தமான உளவியல் நூலொன்றை எழுதி வந்தார்.) முடித்து இன்றுதான் அனுப்பினேன் மிகப்பெரிய வேலை முடிந்துவிட்டது. ஆறுதலாக யாருடனேனும் சம்பாஷிக்க வேண்டும்போலிருந்தது, உம்முடைய நினைவுதான் வந்தது; உடனே வந்துவிட்டேன்" என்றார் தொடர்ந்து இலக்கிய சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்தோம். இடையில் அவர் என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். "நீர் ஆசிரியராவதற்குத்தானே படித்தீர்? அதோடு இந்த எழுத்தாள வாழ்க்கையை ஏன் மேற்கொண்டீர்?" என்பதுதான் அக்கேள்வி அதோடு அவர் விடவில்லை, ஒரு தொழிலில் இருந்துகொண்டே வேறொரு முயற்சியை (பணம் சம்பாதிப்பதற்காகவன்று) மேற்கொள்ளும் பலபேரைக் குறிப்பிட்டு "அதற்கு ஏதாவது உளவியல் சம்பந்தமான தொடர்பு இருக்கத்தான் வேண்டும். அப்படிப்பட்டவர்கள் தங்கள் சுயசரிதத்தைச் சுருக்கமாக எழுதிவைத்தால் உளவியல் சாஸ்திரகாரருக்கு நிச்சயம் பயன்படும். நீர் உமது இலக்கிய வாழ்க்கை சம்பந்தமாகச் சிறிய குறிப்புக்களாவது எழுதிப் பாரும்" என வற்புறுத்தினார்.

ஒரு சில வருடங்களுக்குமுன் ஒரு பிரபல தமிழ் வாரப் பத்திரிகையின் ஆசிரியர் என் இலக்கிய வாழ்க்கை சம்பந்தமாக எழுதும்படி கேட்டும் நான் சம்மதிக்கவில்லை. என் இலக்கிய நண்பர்கள் எனக்கு ஒரு மலர்மாலை (இரசிகமணி மலர்மாலை)யை எனது ஐம்பதாவது வயதில் வெளியிட்டார்கள். அதுவே பரமதிருப்தி என்று இருந்துவிட்டேன். நண்பர் சச்சிதானந்தன் கூறிய வார்த்தைகள் மனதை அரித்துக்கொண்டிருந்தன. எழுதிப் பார்க்கலாம் என்று மனம் ஏவும். என்ன பிரயோசனம் என்று கை சோரும். எனினும் ஒரு மன உந்துதலில் — என்மன நிம்மதிக்காகவும் தான் — இதை எழுத முடிவுசெய்தேன். மகாத்மாகாந்தி சத்திய சோதனையை எழுதியதனால் எத்தனையோபேர் சீர்திருத்த வாழ்க்கையை மேற்கொண்டனர். வாழ்க்கைத் தூய்மையையும் பெற்றனர். நேரு அவர்களின் சுயசரித்திரம் ஆங்கில இலக்கியத்திலேயே சிறந்தது என்றும் உலக அரசியலை அறிய அதைப் படிக்கவேண்டும் என்றும் கூறுகிறார்கள். தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதையர் அவர்களது 'சுயசரித்திரம்' 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்த தமிழ் நாட்டையே நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது. கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி., டாக்டர் ராஜன், திரு. வி. க. என்போரது சுயசரிதங்களும் ஒவ்வொரு வகையில் உயர்வானவையே.

சாதாரண தமிழ் எழுத்தாளனாகிய என் வாழ்க்கைச் சரிதம் யாருக்குப் பயன்படப்போகிறது? இந்த நியாயமான கேள்விக்கு என்னிடம் விடையில்லை. வாசக நேயரே! உமக்கு ஏதாவது பயன்படுமா? எனக்குத் தெரியாது. வாசித்துவிட்டு 'ஒரு பிரயோசனமும் இல்லை' என்று நீர் முணுமுணுத்தால் அம்முணுமுணுப்புக்குரியவர் கவிஞர் க. சச்சிதானந்தம் தான். ஓ! பரவாயில்லை என்று நீர் நினைத்தால் அதற்கும் உரியவர் அவரே. என் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது வாசிக்கத் தொடங்கிவிட்டீரா? நல்லது ஈழத்து இலக்கிய வானில் ஒரு சிறு மின்வெட்டையாவது காண்பீர். இது உண்மை.

# 1. அன்னையின் அரவணைப்பில்...

''புழுதி துடைத்து நீருமாட்டிப் பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதுமென்னை அணைத்துத் தாங்கும் அம்மா''
— வித்துவான் க. வேந்தனார்.

அம்மா என்ற சொல் எத்தனை இனிமையானது. அது வெறும் மூன்றெழுத்தாலாகிய பிற சொற்களைப் போல்வதன்று. அதை ஒவ்வொரு மனித இதயமும் நினைக்கும்போது எழும் களிபேருவகை, ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்று, வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் வைத்துக் காப்பாற்றிப் பசிக்கும்போது பால்தந்து நோய்வந்தபோது மருந்தூட்டிக் காப்பாற்றியவள் அவள். அவளை நினைக்கும்போது... என்தாயை எண்ணும்போது... அவள் ஒரு தெய்வம்!

எல்லோருக்கும் அன்னை தெய்வம்தான். உமக்கு மாத்திரந்தானோ? என்று கேட்கிறீர்களா? இல்லை. ஆனாலும் என் அன்னையை நினைக்கும்போது... அவள் பட்ட துன்பச்சுமைகளை எண்ணும்போது .. என்னை வளர்த்து ஆளாக்க அவள் பட்ட கஷ்டங்களை உணரும்போது .. அவள் எனக்குப் பூசிக்கக்கூடிய பேசும் தெய்வம்தான்! சந்தேகமேயில்லை.

அந்த மனித தெய்வத்தின் பெயர் பொன்னம்மா. ஐந்து ஆண் சகோதரர்களுக்கிடையில் பிறந்த ஒரே ஒரு பெண். அவர்களில் இருவர் அக்காலத்திலேயே (1900 — 1925) கொழும்புக்குப் போய் பொலீஸ் பகுதியில் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தனர். இன்னுமொருவர் கொழும்பிலேயே சிறு உத்தியோகத்தில் இருந்தார். இந்த இடத்தில் முதல் கூறிய இருவரைக் குறிப்பிட்டுக் கூறவேண்டுவதவசியம். ஏனெனில் என் பிற்கால இலக்கிய வாழ்க்கையில் முக்கிய இடத்தை வகித்த சபாரத்தினம் (திருமகள் அழுத்தகம், தனலக்குமி புத்தகசாலை, வட — இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம் என்பவற்றின் மனேஜராயிருப்பவரும்,

'தக்ஷகாண்டம்', 'மட்டக்களப்புத் தமிழகம்', 'கண்ணகி வழக்குரை' முதலிய பிரசித்தமான நூல்களைக் கண்கவர் வனப்பில் அருமையாக அச்சிட்டுப் புகழ்பெற்றவரும், சாந்தம் பொறைதயை அடக்கம் உடையவருமாகிய குணக்குன்று அவர்களின் தந்தையார் முத்தையா. யாழ்ப்பாணத்தைப் புகையிரதம் எட்டிப்பார்க்காத அந்த நாளையிலேயே சாதாரண கிராமமாகிய குரும்பசிட்டியில் இருந்து துணிவோடு கப்பலில் கொழும்பு சென்று பொலிஸ் பகுதியில் உத்தியோகம் வகித்தவர், ஈழகேசரி நா. பொன்னையா அவர்களைச் சிறுவயதில் கொழும்புக்குக் கூட்டிச் சென்று வாழ வழி வகுத்தவர். மற்றவர் வேதாரணியம். பண்டிதர் வ. நடராஜனின் மாமனார், (மனைவியின் தகப்பனார்) அவரும் துப்பறியும் பொலீஸ் பகுதியில் கடமை ஆற்றியவர், என்தாயின் இளைய சகோதரர்.

ஐந்து சகோதரர்கள்; ஒரே ஒரு சகோதரி. இப்படிப் பிறந்ததினால் என் தாய்க்கு இயற்கையாகவே ஒரு துணிவு ஏற்பட்டிருந்தது. அவரது எந்த முடிவையும் யாரும் ஆட்சேபித்துச் சொல்லமுடியாது. என்னை யார் அசைக்க முடியும்? என்ற அவரது மனோநிலையைக் கடவுள் நெடுநாள் நீடிக்க விடவில்லை. என் அன்னையார் என் தந்தையாரை இழந்து கிட்டத்தட்ட முப்பத்தைந்தாவது வயதில் கைம்பெண் ஆனார். ஆம். நான் பிறந்து ஆறு மாதத்துக்கிடையில் என்தந்தை அமரராகிவிட்டார்.

எனக்கு மூத்தவராக ஓரேயொரு சகோதரி. $2\frac{1}{2}$ வயதுடைய மீனாக்ஷி. இருவரும்தான் என் அன்னையாருக்குள்ள குழந்தைகள். முப்பத்தைந்து வயதிலே ஒரு ஆண், இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை, மனைவி இறந்துவிட்டால் குழந்தைகளைப் பராபரிக்கும் சாட்டில் மறுவிவாகம் செய்திருப்பான். ஆனால் பெண்...? இந்தக்காலப் பெண்களைப் பற்றிச் சொல்லவில்லை. அந்தக்காலப் பெண்? .. அவள் தெய்

வம். அவள் என் அன்னை. துன்பச்சுமையைச் சுமந்து கொண்டே தொடர்ந்து நடக்கத் துணிவு கொண்டாள்.

என் தந்தையார் பெயர் கனகசபை. கனக. செந்தி நாதனில் உள்ள 'கனக' என்பது தந்தையாரின் பெயரான கனகசபை என்பதில் உள்ளதுதான். சிலர் இதைச் சரியாக விளங்காமல் — பல எழுத்தாளர்களுந்தான் — கனக செந்திநாதன் ஒரே பெயர் என எண்ணி என் தகப்பனுர் பெயரைக் குறிக்கும் 'இன்னிசல்' முதல் எழுத்து என்ன என்று கேட்டிருக்கிறுர்கள். இன்னொரு புதினம் எனக்கு என் தந்தையார் இட்ட பெயர் திருச்செவ்வேல். பதிவுப் பெயர்கூட அதுதான். முக்கியமான அரசாங்க அலுவல்களுக்கெல்லாம் அப்பெயராலேயே கையெழுத்திடுகிறேன். இந்த அருமையான பெயர் எனக்கு இருப்பதாகப் பல வருடங்கள் எனக்கே தெரியாது. ஆசிரிய கலாசாலைக்குச் சேர வேண்டிய சந்தர்ப்பத்தில் பிறப்புச் சாட்சிப் பத்திரம் எடுக்கும் போதுதான் அறிந்தேன். ஓரளவு வாய்க்குள் நுழையாத இந்தப் பெயரை மாற்றிச் செந்திநாதன் என வைக்கவே விரும்பினேன். ஆனுல் என் மதிப்புக்குரியவரும் சிந்தனைச் செல்வருமான உப அதிபர் பொ. கைலாசபதி அவர்கள் அப்படியே இருக்கட்டும் என்று கூறிவிட்டார்கள். அம்மகான் கூறிவிட்டால் அதில் ஏதோ பொருள் இருக்கத் தானே வேண்டும்? அப்படியே விட்டுவிட்டேன்.

தந்தையாரைப் பற்றிக் கூறவந்து பெயர் வைத்ததில் இறங்கிவிட்டேனே? இருக்கட்டும் என் சரித்திரந்தானே பொறுத்துக் கொள்ளுங்கள்.

என் தகப்பனுர் நான் பிறந்து ஆறுமாதத்தில் அமரத்துவமாகிவிட்டார். என் சாதக பலன் என்று சோதிட வல்லுநர் கூறியதாக அன்னை அடிக்கடி கூறுவது வழக்கம். அவ்வளவு மோசமான சாதகமா? சோதிட வல்லுநர் பார்க்கட்டும். இதோ என் கிரகநிலை:

| | | | |
|---|---|---|---|
| | வியா | சந் | கேது |
| | கிரகநிலை | | ல சனி |
| | | | |
| ராகு | செவ் | சூ புதன் | வெள் |

நளவருடம் ஐப்பசி மாதம் 26ஆந் திகதி சனிக்கிழமை இரவு நான் பிறந்தேன். நட்சத்திரம் ரோகிணி. தகப்பனைக் கொன்ற மகன் என்று பிறந்த உடனேயே பெயரெடுத்துவிட்டேன். தகப்பனாரைப் பற்றி என் தாயாரும் ஊரவர்களும் கூறியது இப்படித்தான். கனகசபையா? அவர் ஒரு அப்பாவி 'கோயில் குளம்' என்று திரிந்தவர். இப்போதிருக்கும் அம்பாள் ஆலயத்திற்குத் தென்புறமிருக்கும் (வைரவகோவில் என்று பொதுமக்கள் சொல்கிறார்கள். உண்மையில் அது நடராஜர் ஆலயம்) சிறிய கோவிலைக் கட்ட உதவியவர். அக்கோவிலைக் கட்டுவித்த சதாசிவ தேசிகரின் உற்ற நண்பர். 1916ஆம் ஆண்டுக்குமுன் கால் நடையாகக் கதிர்காமம் சென்று திரும்பியவர். (இது அந்தக்காலத்தில் ஒரு புதுமை) பழையகால ஆட்டக்கூத்தில் நாட்டமுள்ளவர். பிரபலமான சில வேடங்களைப் போட்டு ஆடியவர்.

இப்படிப்பட்ட தந்தைக்கும் தாய்க்கும் பிறந்ததினாற் போலும் என்னிடத்தும் சில குணங்கள் விஞ்சி நிற்கின்றன. அவைகளைப்பற்றிப் பின்னால் நீங்களே அறிவீர்கள். இப்போதைக்கு அப்பனை இழந்து அன்னையின் அரவணைப்பில் வாழத்தொடங்கிய ஒரு குழந்தை நான் என்பதைத் தெரிந்துகொண்டாற் போதும். அப்படிப்பட்ட ஒரு குழந்தை கிராமத்தில் எப்படி வாழும்? அடுத்த அத்தியாயத்தை வாசியுங்கள்.

# 2. ஆரம்பக் கல்வி

தூண்டு நூற்கணத் தோடு தனியனாய்த்
தோழமை பிறிதின்றி வருந்தினேன் — *பாரதி*

குரும்பசிட்டிக்கு அந்தக் காலத்தில் ஒரு பெருமை இருந்தது என்றால்—ஏன் இப்போதும் இருக்கிறதென்றால்—அதற்கு ஒரு முக்கிய காரணம் அவ்வூர் முழுவதும் சைவ நன்மக்கள் இருப்பதுதான். ஒரு கிறிஸ்தவரையும் அவ்வூரிற் காணமுடியாது. அதற்கான பெருமை அவ்வூரில் உள்ள மகாதேவ வித்தியாசாலையையும், அதை 1900 ஆம் ஆண்டிலே கட்டி மிக உன்னதமான முறையிலே நடாத்திய தலைமை ஆசிரியர் பொன். பரமானந்தர் அவர்களை, யுமே சாரும். அந்தப் பாடசாலையிலேயே நான் ஆரம்பக் கல்வி கற்றேன்.

தந்தையை இளமையிலே இழந்த எனக்குத் தந்தைக் குத் தந்தையாய் இருந்தவர் என் அப்பா. சின்னட்டியார் என்றே கூப்பிட்டனர். அவர் எனது தாயின் தகப்பனார். சின்னத்தம்பி என்பதன் மரூஉவாக அப்பெயர் இருக்கலாம். ஐந்து ஆண்மக்களைப் பெற்றிருந்தும், கைம்பெண்ணை என் தாய்க்குத் துணையாக அவர் எங்கள் வீட்டிலேயே தங்கியிருந்தார். ஒரே ஒரு பெண் ஆனபடியால் தன் சொத்து முழுவதையும் என் தாய்க்கே சீதனமாக அவர் கொடுத்திருந்தார். 40 பரப்புக் காணி – சாதாரண வீடு என் தாய்க்குச் சொந்தமாக இருந்தது. இச்சொத்துக்களைப் பாதுகாப்பதில் 'அப்பா' கவனமெடுத்தார். என் தாயும் சும்மா இருக்கவில்லை. கடைசிவரைகூட ஒருபரப்புக் காணியை அவர் விற்கவில்லை. தன் கையாலேயே உழைத்தார். நெல்லுக் குற்றி விற்றார். அப்பம் பிட்டு அவித்து விற்றார். ஆடு கோழி வளர்த்தார். அயராது பாடு பட்டார். அழுதுகொண்டு மூலையில் இருக்கவில்லை. 'முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்' என்பதை உணர்ந்தார். எங்களை வளர்த்தார்.

என் அப்பாவிடம் இருந்து சிறுவயதில் நான் கற்றுக் கொண்டது ஆலய வழிபாடு. இப்போது பல சபைகளில் என்னை அறிமுகம் செய்யும் பலர் 'இந்த ஒல்லியான ஆசிரியர்' என்றும், 'ஒடிந்துவிழும் ஆசிரியர்' என்றும் சற்றுக் கேலியாகவே என்னைக் குறிப்பிடுகிருர்கள். நண்பர் தி. ச. வரதராசன் என்னைப்பற்றி எழுதிய கட்டுரையொன்றில் 'பூ' என்று ஊதினல் விழுந்துவிடக்கூடிய மனிதன் என்று குறிப்பிட்டிருக்கிருர். உண்மை நான் மிக மெல்லிய ஆள் தான். சிறுவயதில் மிகமிக மெல்லிய பையன். என்னை யாரும் விளையாடச் சேர்ப்பதும் இல்லை. விளையாடவும் கூச்சம். எனவே என் அப்பாவோடுதான் ஒட்டிக்கொண்டு இருப்பேன். அவர் ஒவ்வொருநாளும் மாலை நாலுமணிக்குக் குளிக்கவார்த்து, தானும் மிக ஆசாரமாக என்னைக் கூட்டிக் கொண்டு எங்கள் ஊரிலுள்ள ஆறு சிறிய ஆலயங்களுக்குச் செல்வார். பிள்ளையார், அம்பாள், காளி, வைரவர் ஆலயங்களில் எல்லாம் ஆறுதலாகத் தேவாரம், புராணம் படிக்கச் சொல்வார். பாரதியார் தனது சுயசரிதையில் ''வேண்டுதந்தை விதிப்பினுக் கஞ்சி நான் வீதியாட்டங்கள் யாதினும் சேர்கிலேன் தூண்டு நூற்கணத் தோடு தனியனாய்த் தோழமை பிறிதின்றி வருந்தினேன்' என்று பாடியுள்ளார். அதேபோல என்னேடு ஒத்த சிறுவர்கள் வீதியாட்டங்களிலே — விளையாட்டுக்களிலே மூழ்கியிருக்கும்போது நான் ஆலயங்களுக்கு முன்னல் அப்பாவோடு தேவாரம் ஓதிக்கொண்டு நிற்பேன். மிகச் சிறு வயதிலேயே முப்பதுக்கு மேற்பட்ட தேவார திருவாசகங்கள் எனக்கு மனப்பாடம். 'குன்றமெறிந்தாய்' முதலிய திருமுருகாற்றுப்படையின் பின்னுள்ள பாடல்கள், வெள்ளை மணற் குன்றும், கோலமாமயில் அலங்காரமும், வேலவனை வேங்கை மரமாக்கி வைத்தாய் (சனிதுதி), 'நீயேதுணையென்று நானிருந்தேன்' (இப்போதுகூட இவை எந்த நூலில் உள்ளவை என்று எனக்குத் தெரியாது) முதலிய பாடல்களும் அவர் சொல்லித்தந்து நான் பாடமாக்கிய

வைகளே. மாலே நாலு மணிக்குத் தொடங்கும் ஆலய வழிபாடு ஏழு மணிக்குத்தான் முடியும். ஆகா! அந்த இனிய காட்சி, பசுமையான நினைவு! ஆனால் இப்போது நாமென்ன செய்கிறோம்? எனக்கு ஐந்தாவது வயதிலே ஏடு தொடக்கினார்கள். இப்போதைய பெற்றோர் அதை சுபகருமமாக நினைப்பதில்லை. சில வருடங்களுக்கு முன்னால் விஜயதசமித் தினத்தன்றாவது பள்ளியிற் சேர்த்தார்கள். இப்போது அதுவும் இல்லை அரசாங்க சட்டங்கள் நெருக்கிய நெருக்கத்தினாலே சில ஆசாரங்களைக்கூட இழந்து வருகிறோம். எனக்கு ஏடு தொடக்கிய வைபவம் இன்றும் ஞாபகம் இருக்கிறது. எனது தகப்பனார் கட்ட உதவிய அந்த நடராஜர் கோவிலிலே — அம்பாள் ஆலய தென்பக்கத்தில் உள்ளது — எனக்குப் பெயர் சூட்டிய நாவலர் போன்று வாழ்ந்த தேசிகர் அவர்களைக் கொண்டே அப்பா எனக்கு அக்ஷராரம்பம் செய்வித்து வைத்தார். தட்டத்திலே பச்சையரிசி, அர்ச்சனைப் பூசைப் பொருட்கள், தட்சிணைப் பணம் இவற்றோடு கோவிலுக்குச் சென்று அங்கே அரிசியின் மேலே 'அ' எழுதி ஏட்டிலே உயிரெழுத்து மெய்யெழுத்துப் படித்துத் தட்சிணை நல்கி அர்ச்சனை முடித்து, பக்கத்திலுள்ள ஆலயங்கள் எல்லாவற்றையும் வணங்கி, —எனக்கு 'நன்றாகப் படிப்பு வரவேண்டும் என்று வேண்டி — பாடசாலைக்குக் கொண்டுபோய் விட்டார்கள். படிக்கத் தொடங்கினேன்

அந்தக்காலப் படிப்பைப்பற்றி இந்தத் தலைமுறையில் உள்ளவர்கள் அறியவேண்டும். ஆங்கிலக் கல்லூரிப் படிப்பைப் பற்றி எனக்குத் தெரியாது. தமிழ்ப் பாடசாலையின் படிப்பைப் பற்றியே கூறுகிறேன். 1920 — 1930 ஆம் ஆண்டுக் கிடையில் நடந்த படிப்பைப்பற்றிக் கூறுகிறேன்; எங்கள் ஊர் மகாதேவ வித்தியாசாலையில் எமக்கு ஊட்டிய கல்வியைப் பற்றிக் கூறுகிறேன்.

திண்ணைப் பள்ளிக்கூட முறைமாறி, எச்சமயத்தவரும் தத்தமக்காகப் பாடசாலை கட்டலாம் என்ற சலுகை

பெற்றதனுற் கட்டிய பாடசாலை எங்கள் பாடசாலை. அதற்குமுன் 'மேரி பள்ளிக்கூடம்' என்ெருரு பாடசாலை — கிறிஸ்தவப் பாடசாலை —இருந்ததாம். இந்தச் சைவப் பாடசாலை தொடங்கியதுமே அது தொலைந்துவிட்டது. அரசாங்க உதவி நன்கொடைப் (கிறுண்ட்) பணம் வருடமொருமுறைதான் கிடைக்கும்: பாடசாலை கட்டிய மனேஜர்மார் மாதாமாதம் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்துவிட்டு வருட முடிவில் அரசாங்கம் கொடுக்கும் நன்கொடையைப் பெறவேண்டும்; நடைமுறையில் உள்ள ஒழுங்கு இது. எனினும் காரியத்தில் இது நடைபெறுவதில்லை. உதவி நன்கொடைப்பணம் வந்தபிறகே — வருடத்துக்கொருமுறை எல்லாரும் சம்பளம் பெற்றனா பெற்றதை என்பதை விடப் 'பகிர்ந்தனர்' என்பதே சரி. அப்படிப் பகிர்ந்த குறைந்த சம்பளத்திலும் அவர்கள் செய்த சேவை மகத்தானது; புனிதமானது.

வருடாந்தச் சோதனை என்றுல் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஒரே பயம். சோதிக்கவருகிற வித்தியாதரிசியைக் கண்டாலே நடுக்கம். வகுப்புக்குள் அவர் காலடி பட்டதுமே மாணவர்கள் எல்லாரும் எழுந்து 'நமஸ்காரம், என்று ஏககுரலில் கத்தவேண்டும். அல்லாதுவிட்டால் அவர் கோபிப்பார். இதற்கான ஒத்திகையை வகுப்பாசிரியரே இரண்டு மூன்று நாட்களாக நடாத்துவார். வாசிப்பு. எழுத்து, எண் என்ற மூன்று பாடத்திலும் பரீக்ஷை நடக்கும். அம்மூன்று பாடத்திலும் ஒவ்வொரு மாணவனும் சித்தி எய்திஞல்தான் ஆசிரியருக்குச் சம்பளம். 'கிறுண்ட்' கிடைக்கும். எனவே ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் 'சொல்லாமற் கொல்லுவார்.' தாய்தந்தையரும் 'சட்டம்பியார்! என்ரை மகன்ரை கண்ணை மாத்திரம் விட்டுவிட்டு மற்றப்படி தோலை உரியுங்கோ' என்றுதான் கூறுவார்கள். ஆசிரியர் வாயும் ஒரே மந்திரத்தைத்தான் உச்சரிக்கும். அது 'அடியாத மாடு படியாது' என்பதாகும். அப்போதைய

படிப்புக்கு ஒரே வரியில் வியாக்கியானம் செய்யவேண்டுமானுல் 'கல்வி என்னும் பயிருக்குக் கண்ணீர் என்னும் மழை வேண்டும்' என்பதுதான். எங்களூர் மகாதேவவித்தியாசாலையில் இந்த அடித்தல், படித்தல், கண்ணீர், அழுகை எல்லாம் ஒருபடிமேல். ஏனென்ருல் அதன் தலைமையாசிரியர் பரமானந்தர், ஆசிரியர்களுக்குள் தனி ரகம். என் இளமைக் காலத்தை உருவாக்கியவர்களுள் அவர் ஒருவர். அப்படிப்பட்ட மகானைப்பற்றி ஒரு அத்தியாயம் எழுத வேண்டாமா?

## 3. பொன் பரமானந்தர் அவர்கள்

எழுபத்தைந்து வருடங்களுக்கு முன் ஒரு கிராமப்புறத்துத் தமிழ் பாடசாலையின் தமிழாசிரியர் எப்படியிருப்பாரென இந்தத் தலைமுறையினருக்குத் தெரிய வேண்டும். இதோ குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலை தலைமையாசிரியர் பொன். பரமானந்தர்.

'சைவமெனும் பயிர்தழைக்கத் தமிழ்ப்பள்ளிக் கூடமதைத்
தானே யாக்கி
செவ்வியதாய் மாணவரைத் திறம்படவே பயிற்றிநன்கு
சிறக்கச் செய்தோன்
பவ்வியநற் பெயர்கொள்பர மானந்தர் எனும்பெரியார்
பாதம் தன்னில்
நல்லிதயத் தாமரையாம் நறுமலரால் அர்ச்சித்து
நாம்உய் வோமே'

நாவலர் என்ற சொல் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் எப்படி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைக் குறித்ததோ அப்படியே உபாத்தியாயர் என்ற சொல் எம் ஊரிலும் அயற் கிராமங்களிலும் பரமானந்தர் அவர்களையே குறிப்பதாயிற்று. உண்மையில் அவர் ஒரு உதாரணங்களில் காட்டக்கூடிய உபாத்தியாயர். ஆசிரியர் தொழிலுக்காகவே பிறந்த ஆசிரியர். எழுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் (1900ம் ஆண்டு) இவர் ஒரு சைவத் தமிழ் ஆசிரியர் என்று சொன்னல் அது ஒரு மலையில் மருந்து (பூண்டு); தேடக் கிடைக்காத திவ்விரு பொக்கிஷம். ஆம் எங்கும் கிறிஸ்தவ மயம்; கிறிஸ்தவனுகாமல் ஒரு சைவ ஆசிரியர் இருந்ததில்லை.

இப்படிப்பட்ட நிலையில் சமய மாற்றத்தை விரும்பாத பரமானந்தர் அவர்கள் (யாழ்ப்பாணத்தில் பல கிறிஸ்தவ ஆசிரிய கலாசாலை பல இருந்தும் அவற்றிற் சாராமல்) கொழும்பு போய் ஆசிரியர் பயிற்சி பெற்ருர். இது அந்தக் காலத்தில் எவ்வளவு கஷ்டமான காரியம் என்பதை நாம் உணருதல் வேண்டும்.

இதோடு நில்லாமல் 1900 ஆம் ஆண்டு எங்கள் ஊரில் ஒரு சைவப் பள்ளிக்கூடத்தைத் தானே கட்டி, சைவத்தை யும் தமிழையும் வளர்த்து வந்தார். அவர் துணிவு இருந்த படி என்ன! இவரால் ஸ்தாபிக்கப்பட்ட மகாதேவா வித்தியாசாலை அக் காலத்தில் வெகு பிரசித்தி பெற்றிருந்தது. முதலாம் வகுப்புத் தொடக்கம் மாணவ ஆசிரியர் (அந்தக் காலத்தில் இருந்த மிக உயர்ந்த வகுப்பு) வகுப்பு வரை பாடசாலையில் வகுப்புக்கள் இருந்தன. அயலூர்களிலும், மட்டுவில் போன்ற தூர இடங்களிலும் இருந்து மாணவர்கள் வந்து படித்தனர். ஓர் உயர்தரக் கலாசாலை போன்று அது விளங்குகிறது.

''பொ. ப.'' அவர்களுடைய உருவம் தமிழாசிரியர் வர்க்கத்துக்கே எடுத்துக்காட்டு. எடுப்பான தோற்றம்; நிமிர்ந்த நடை; எப்பொழுதும் நெற்றியில் திரிபுண்டரம்; நடுவில் அழகான சந்தனப்பொட்டு; அதிகாரத்தைப் பிரதிபலிக்கும் குரல்; பாடசாலை வாசலில் ஆசிரியரது முகம் தெரிந்தாற் போதும்; ஒரே அமைதி. குண்டூசி விழுந்தாலும் சத்தம் கேட்கும்.

இக் காலத்திற் பல ஆசிரியர்கள் தராதரம் பெற்ற அன்றே படித்தது போதுமென எண்ணி அறிவுச் செல்வத்தை அப்பால் தேடுவதில்லை. ஒரு ஆசிரியரது வீட்டுக்குப் போனால் வாசிக்க ஒரு சிறு புத்தகமோ மாதசஞ்சிகையோ கூடக் கிடையாது. பேசுவது வெங்காயம், மிளகாய்ப் பேச்சாகவே இருக்கும். சரஸ்வதியைப் புறக்கணித்துவிட்டு இலட்சுமியைத் தேடி ஓடுகிறார்கள். காலம் அப்படி. ஆசிரியர் பரமானந்தர் உப தொழிலாக ஒன்றுமே செய்யவில்லை. மாறிவரும் பாடங்களுக்கேற்பத் தன்னைத் தயார் செய்து கொண்டார். சதா படித்தார். புதியபுதிய பாடங்களைக்கூட அவர் படிப்பித்தார். இது அவரது விசேட அம்சம்.

அவர் பாடசாலையில் வெறும் பாடங்களை மட்டும் படிப்பிக்கவில்லை. எதிலும் ஒரு சுத்தம், ஒழுங்கு இருக்கவேண்டும்

என வற்புறுத்துவார். எழுத்துப் பாடத்தில் அவர் காட்டிய அக்கறையினுல் அவரிடம் பயின்றவர்களின் எழுத்து அழகாக இருக்கிறது. செய்கின்ற வேலை சிறிதாக இருந்தாலும் கூடிய கவனம் எடுத்துச் செய்யும் குணம் அவரிடமிருந்து வந்த சொத்து.

கோலாட்டம் என்ற கலையை அதிலும் கயிற்றிலே உறி, கூடை, சங்கிலி, துலாக்கொடி, அரைஞாண்கயிறு என்பவற்றைப் பின்னும் கலையை — அண்ணுவி கந்தப்பிள்ளையின் துணைகொண்டு தாமே பாடல்களை இயற்றி — செய்வித்து எங்கள் ஊருக்குப் புகழ் ஈட்டியவர் அவர். என்ன துரதிஷ்டம்; அந்தக் கலையே இப்போது மறைந்த பண்டமாகிவிட்டது. சைவம் என்னும் பயிர் தழைக்கத்தான் தமிழ்ப் பள்ளிக்கூடம் கட்டியவர் பொ. ப. அதற்காக அவர் என்ன செய்தார்? நாவலரது சைவவிஞவிடையை மூன்ரும் வகுப்பிலிருந்தே மனப்பாடம் செய்வித்தார். புராணங்களில் உபயோகமானவற்றைச் சொல்லிக் கொடுத்தார். விபூதி பூசாது வரும் மாணவர்களைக் கடுமையாகத் தண்டித்தார். ஏழாம் எட்டாம் வகுப்புக்களில் திருவாதவூரடிகள் புராணத்திலிருந்து சில பகுதிகளை உரை சொல்லும் முறைப்படி படிப்பித்தார். தானே அம்பாள் கோவிலில் உரை சொன்னதோடு தமது மாணவர்களுக்கும் பயிற்றுவித்தார்.

தமது பாடசாலையில் இந்து வாலிபர் சங்கமொன்றை அமைத்து மாதந்தோறும் பூரணைத் திருநாளில் அக்காலத்தில் பிரபலமாக விளங்கிய சமய அறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவு செய்வித்தார். இதனுல் பெரும் பயன் விளைந்தது. சமய தீட்சை பெறுதல், கொல்லாமை, புலால் உண்ணுமை, கோவில் வழிபாடு, கோவில் திருத்தொண்டு என்பவற்றையே அக்காலத்திற் பொருளாகப் பேசப்பட்டன. இதனுல் இவை இளம் உள்ளங்களிலே நின்று நிலைத்தன.

இவை மாத்திரமல்ல மாணவர் சங்கக் கூட்டங்களாலே தருமிக்குப் பொற்கிளி அளித்தமை, துருவன், மார்க்கண்டேயர், பிரகலாதன் முதலிய சமய நாடகங்களை உதவி ஆசிரியர் துணைகொண்டு பயிற்றுவித்து மேடையேற்றினர்.

சைவம் தமிழ் என்று சொல்லிக்கொண்டு அவர் மூலையில் இருந்துவிடவில்லை. பொதுமக்களுக்கு வேண்டிய பணிகளிலும் இவர் ஈடுபட்டார். மயிலிட்டிக் கிராம சங்கத்தில் பல வருடங்கள் அங்கம் வகித்துத் தொண்டாற்றினர். சிறு சிறு எல்லைப் பிரச்சினைகள், மனஸ்தாபங்களைத் தீர்த்து வைத்தார். சில வருடம் ஐந்துபேர் கொண்ட ஊர்ப் பஞ்சாயத்து ஒன்றை பாடசாலையில் நிறுவினர். 1932ஆம் ஆண்டளவில் பணக்காரப் புள்ளிகளின் கைகளிலிருந்து ஏழைகளை விடுவிக்க ஐக்கிய நாணய சங்கம் ஒன்றை நிறுவினர். அவரைப்பற்றி எவ்வளவோ எழுதலாம். இவ்வளவும் போதும். அவரது நினைவு என்றும் நிலைக்க அவர் கட்டிய பாடசாலைக்குப் பொன். பரமானந்தர் பெயர் இடப்பட்டிருக்கிறது. ஐ. நா. சங்கம் இன்றும் நடந்துகொண்டிருக்கிறது. புராண படனம் ஒலிக்கிறது. குரும்பசிட்டி இன்னும் ஒரு கிறிஸ்தவரும் இல்லாத சுத்த சைவ ஊராக விளங்குகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக அவரிடம் படித்த ஐம்பது ஆசிரியர்களுக்கு மேலானோர் அவர் நினைவை இன்றும் நினைக்கின்றனர். ஆம்; இதுபோதும் அவர் சேவைக்கு.

# 4. படிப்பு - படிப்பு - படிப்பு

இந்த ஆசிரியர் தலைமையாசிரியராய் இருந்த பாட சாலையில் எங்கள் புண்ணிய வசத்தால் அரிவரி தொடக்கம் எட்டாம் வகுப்பு (அந்தக் காலத்தில் V. S. L. C.) வரை இருந்தது. 1932ஆம் ஆண்டில் S.S.L.C.யும் வைத்தார்கள். எனவே தொடர்ந்து படிக்க வசதி ஏற்பட்டது. நான்காம் வகுப்புச் சித்தியடைந்தவுடன் ஆங்கிலம் படிக்க ஆசைப் பட்ட என்னை மகாஜனாக் கல்லூரி தாபகர் தெ. அ. துரை யப்பாபிள்ளை அவர்களிடம் என் அப்பா ஒருநாள் அழைத் துச் சென்று சம்பளம் கட்டாமல் இனமாகப் படிப்பித்து விடமுடியுமா? என்ற கேட்ட ஞாபகம் இப்போதும் என் மனத்திரையில் நிழலாடுகிறது. அந்தச் சந்தர்ப்பத்தை இறை வன் எனக்கு அளிக்கவில்லை. இது நல்லகாலமோ கெட்ட காலமோ? எனக்குத் தெரியாது.

6ஆம் வகுப்புப் படிக்கத் தொடங்கிய போது இரவும் பகலும் பாடசாலையே இருப்பிடமாயிற்று. எங்கள் பாட சாலையில் 24 மணி நேரத்தில் 6 மணித்தியாலங்களைத் தவிர்ந்து — அவை உறங்கும் நேரம் — படிப்புத்தான். ஒரு வாரத்தில் சனிக்கிழமை தவிர ஆறு நாளும் படிப்புத்தான். காலை 5 மணிக்கே சமீபத்தில் உள்ள மாணவர்கள் பாட சாலைக்கு வந்து படிப்பார்கள். 7 மணிக்கு வீட்டுக்குப்போய் 9 மணிக்கு வருவார்கள். பாடசாலை 2 மணிவரை நடை பெறும். பின்பு வீட்டுக்குப் போய் 3 மணிக்குப் பின்னேரப் பாடசாலைக்கு வருவார்கள். மாலை $5\frac{1}{2}$ மணிவரை பாடசாலை நடக்கும். மேல் வகுப்பு (S. S. L. C.) மாணவர்கள் இரவில் 10 மணி வரை தலைமை ஆசிரியர் வீட்டிற் படித்துவிட்டுப் பாடசாலையில் உறங்குவார்கள். இதை நான் புளுகுக்காக எழுதவில்லை; உண்மை. இந்த 'உபத்திரவ'ப் படிப்பை நான் அநுபவித்திருக்கிறேன். இந்தக்காலத்து மாணவர்கள் பாக் கியம் செய்தவர்கள்!

அந்தக் காலத்து ஆசிரியர்கள் மாணவர்களை ஒரு பெரிய நீர்த்தொட்டியென்றும் தாமெவ்வளவைச் சொல்லிக்கொடுத்தாலும் அந்தத் தொட்டி கொள்ளவேண்டுமென்றும் நம்பினார்கள். மனப்பாடம் எல்லா வகுப்புகளிலும் — எல்லாப் பாடங்களிலும் — முக்கியம். கணித வாய்பாடு முதல் நன்னூற் சூத்திரங்கள் வரை மனப்பாடம் செய்தல் வேண்டும். ஆசியாவின் மலை ஆறு; கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை புகையிரத ஸ்தானங்கள்; நளவெண்பா பாடல்கள்; பூவின் பகுதிகள்; இரத்தச் சுற்றோட்டம் எல்லாம் மனப்பாடமாக ஒப்புவித்தல் வேண்டும். 'பிரித்தானிய சக்கராதிபத்தியச் சரித்திரச் சுருக்கம்' என்ற சரித்திர நூலைக் கூடப் பக்கம் பக்கமாக மனப்பாடம் செய்வித்தார்கள்! இப்படியான படிப்புக்கு காலை, மாலை, இரவு எப்போதும் படிக்கத்தானே வேண்டும்.

இந்த மனப்பாடம் சில விடயங்களுக்கு நல்லது என்றே கருதுகிறேன். இலக்கியப் பாடல்கள் பிற்காலத்தில் கட்டுரைகள் எழுத உதவும். சொற்பொழிவுகளுக்கு வாய்ப்பாகும். எந்த நூலைக் கண்டும் மாணவனுக்குப் பயம் ஏற்படாது. பிற்காலத்தில் நல்ல பாடல்களை மனப் பாடம் செய்ய உதவும். எனது நினைவில், இளமைக் காலத்தில் இப்படியாகப் பல நூற்றுக்கணக்கான பாடல்களையும், பிற விடயங்களையும் மனப்பாடம் செய்தது நினைவில் நிற்கிறது. பரமானந்த ஆசிரியரின் 'பிரப்பம்பழம்' — அடி — என் முதுகில் ருசிபார்க்காமலேயே ஒவ்வொரு வகுப்புக்களிலும் சித்தியெய்தி வந்திருக்கிறேன் நெடுநேரம் படிப்பது என் தேக நிலைக்கு ஒத்துவராத சங்கதி. ஆனால் இரண்டொருமுறை படித்ததை — கேட்டதை — அப்படியே ஒப்புவிக்கும் சக்தி அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது.

எங்கள் மகாதேவ வித்தியாசாலையில் எழுத்து, சித்திரம், வாசிப்பு (சொல் உச்சரிப்பு), இலக்கண இலக்கியம் அன்று தொடக்கம் இன்றுவரை உச்சம். எழுத்துப்பாடம்

மிகமிக உச்சம். இந்தப் பாடசாலையிற் படித்த மாணவர்களில் 100 பேர் வரை — எங்கள் ஊரிலும் அயல் ஊர்களிலும் உள்ளவர்கள் — ஆசிரியர்களாய் இருக்கிறார்கள். எல்லோருமே அழகாக எழுதுவார்கள். எழுத்து — அழகு — சுத்தம் மூன்றின் வடிவம் பரமானந்த ஆசிரியர். இன்றும் அப்பாடசாலையில் எழுத்துப் பாடம் உச்சமாகவே இருக்கிறது. சிறு குழந்தைகள் கூட அழகான கையெழுத்தில் எழுதுகிறார்கள். கணிதமும் சங்கீதமும் இந்த ஊருக்கு ஒத்தாத சங்கதிகள்.

சித்திரம் இந்த ஊரின் வரப்பிரசாதம், இரத்தத்தில் ஊறிய பண்டம். கையெழுத்தில் வெளிவந்துகொண்டிருந்த 'சன்மார்க்க தீபம்' என்ற பத்திரிகையிற் சிறுவர்கள் கையினுற் கீறப்பட்ட சித்திரங்களைப் பார்த்து வியப்புருதவர்களேயில்லை. அநேகமாக எல்லா ஆசிரியர்களும் சித்திர பாடத்தில் தராதரப் பத்திரம் பெற்றவர்களாகவே இருக்கிறார்கள். இந்தப் பாடத்திற்கு அத்திவாரம் இட்டவர் ஆசிரியர் வ. பொன்னுக்குமாரு அவர்கள். அவர் ஒரு சகலகலா வல்லவர். இருபத்தெட்டு வயதில் அமரராகிய அவர் செய்த தொண்டு மகத்தானது. என் வாழ்க்கையை உருவாக்கியதில் அவர் பெரும்பங்கு வகிக்கிறார். சிறு வயதிலேயே என்னை ஊக்கிப் படி படி என்று சொன்னவர். நல்ல பல நூல்களை அறிமுகம் செய்துவைத்தவர் அவர். ஆசிரியகலாசாலைக்குப் போகப் பணக்கஷ்டம் ஏற்பட்டபோது ஒரு வருடத்துக்கு வேண்டிய பணத்தைத் தந்தவர் அவர். அவர் என் ஆதர்ச புருஷர்

என்மனதில் இடம் பெற்ற இன்னொருவர், நண்பர் சுந்தரமூர்த்தி அவர்கள். அவரும் ஒரு இலட்சிய புருஷர். தேசப்பற்று மிக்க அவரது கூட்டால் கதர் அணிய ஆரம்பித்தேன். 1940ஆம் ஆண்டு நான் மணவினைக்காக மணமகன் கோலத்தில் இருக்கும்போதுகூட கதர் வேட்டி, சட்டை, சால்வை அணிந்திருந்தேன் தலைப்பாகைக்குப் பதிலாக நான் அணிந்திருந்தது நாலணவுக்கு வாங்கிய கதர்க் குல்லா. இவை எல்லாம் நண்பன் சுந்தரமூர்த்தியால் ஏற்பட்ட மன எழுச்சி.

## 5. ஒரு கிராமம் கண்முன் விரிகிறது

கும்பிடச் சைவக் கோவில்
கூடியே படிக்க நல்ல
செந்தமிழ்ப் பள்ளி ஊரார்
சேர்ந்துநல் உழைப்பு நல்க
முன்திண்ணை உடைய வீடு
முள்பற்றை குறுக்கொ ழுங்கை
விந்தைசேர் சந்தை எல்லாம்
மேவிய ஊர்நம் மூரே

அன்பான வாசக நேயரே, பிறந்த ஊர் அதன் சிறப்பு, அதன் தாழ்வு இவைபற்றி ஒன்றுமே சொல்லாமல் உடனே அன்னையின் அரவணைப்பில் என்று தொடங்கிவிட்டீரே! இது என்ன நியாயம்? என்று நீர் மனதில் முணுமுணுப்பது எனக்குத் தெரிகிறது. நான் என்ன நாட்டுப்படலம் நகரப்படலம் எழுதிக் காவியம் செய்ய வந்தவனா? இல்லையே. எனவே வேண்டிய இடத்தில் எனது ஊரைப்பற்றிச் சொல்லலாம் என்று இருந்தேன். இதோ அந்த இடத்துக்கு உம்மை அழைத்து வந்திருக்கிறேன். இதோ! என்னுடன் வாரும். எங்கள் ஊர்க் கதையைக் கேளும்.

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திலிருந்து புறப்படும் 770 நம்பர் பஸ் சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, குப்பிளான் முதலிய ஊர்களைத் தாண்டி — முப்பத்திரண்டு வளைவுகள் வளைந்து — எங்கள் ஊராகிய குரும்பசிட்டிக்கு வருகிறது. இதில் ஏறினால் நாரியே முறிந்துவிடும் என்று பயப்படுகிறீரா? சரி விட்டுவிடும். அடுத்த பஸ்சில் ஏறிப் பாரும். நம்பர் 764; பலாலி ஊடாக கீரிமலை செல்லும் வண்டி இது. ஜோராக ஏறி இரும். வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தடியில் இறங்கும். மேற்காக வாரும். குரும்பசிட்டி அழகாகத் தோற்றமளிக்கும்.

அழகாக என்ற சொல்லை மேல் வசனத்தில் எழுதியிருக்கிறேன் கவனித்தீரா? நான் அதைச் சும்மா எழுதவில்லை. அல்லது பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் — கிராமமுந்தான் — நற்றவ வானிலும் நனிசிறந்தனவே எனப் பாரதியார் பாடியுள்ளார். அந்தக் கிராமப்பற்றினாலும் நான் சொல்லவில்லை. உண்மையாகவே காண்போர் பிரமிக்கத்தக்கவாறு ஒரு குட்டி நகரமே என்று சொல்லும்படியாக அது வளர்ந்துவிட்டது. மாடமாளிகைகள், கல்வீடுகள், நீள்மதில்கள், தார் வீதிகள், மின்சார ஒளிவிளக்குகள், சபைகள், வாசிகசாலைகள், தபாற்கந்தோர், வானொலிகள், கூட்டங்கள், பேச்சுகள், நாடகங்கள், அரசியல்சர்ச்சைகள், என வளர்ந்துவிட்டது. காலத்துக்கேற்ற வளர்ச்சி. ஆனால், நண்பரே, இதைக் கண்டு நீர் என்ன நினைக்கிறீர் என்பது எனக்குத் தெரிகிறது. நல்ல பணக்கார ஊர். சண்டைசச்சரவு இல்லாதஊர். கொழுத்த சீதனம் வாங்கக்கூடிய ஊர். யாதொரு குறைவுமின்றி இருக்கும் ஊர் என்று நினைக்கிறீர். இவை உண்மையாய் இருக்கலாம். ஆனால் நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா? குரும்பசிட்டியின் உண்மையான ஆத்மராகங்கள் இவைதானா? ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்த அந்த ஆத்மராகங்களை எப்படி இழந்து வருகிறோம். இதை எடுத்துச் சொல்லலாமென நினைக்கின்றேன்.

"கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற் கைகொட்டிச் சிரியாரோ" எனப் பாரதியார் பாடினார். அதன் பொருள் கிராமங்கள் எங்கும் வந்துவிட்டது; ஒற்றுமை, அன்பு, பரஸ்பர உதவி, ஏழைகளுக்கு இரங்கும் தன்மை எல்லாம் போய்விட்டன. ஐம்பது வருடங்களுக்குமுன் கடும்பாய் இருந்த நெஞ்சங்கள் இன்று இரும்பாய் மாறிவிட்டன.

ஒரு காட்சி — ஐம்பது வருடத்துக்கு முன் நடந்த காட்சி. எங்கள் வீட்டு மூலையில் இருந்த பலாமரத்தில் ஒரு பழம்பழுத்துத் தொங்குகிறது. அதை எனது தாய் பிடுங்கி ஆறாகக் கீறுகிறாள். ஒரு துண்டை மாத்திரம் எடுத்து

இருக்கிறாள். மிகுதி ஐந்து துண்டையும் என்னிடம் கொடுத்து ஒவ்வொரு மாமன் வீடுகளுக்கும் அனுப்புகிறாள். ஊரிற் பல இடங்களிலும் இருக்கும் இனசனம் எனக்குத் தெரிகிறது. அவர்களுக்கு ஒரு துண்டு பலாப்பழம் பெரிதல்ல; அதன்மூலம் வரும் சகோதரியின் அன்புதான் பெரிது. இப்போது என்ன நடக்கிறது: 'கதவை மூடு. மற்றவர்க்குக் காட்டாதே. தனியே போய் இருந்து சாப்பிடு' என்கிறார்கள். தங்கள் தரத்துக்குக் குறைந்த சகோதரர் வீடாயிருந்தால் முகத்தில் அடித்தாற்போல் திருப்பி அனுப்புகிறார்கள். கிராமத்தின் அன்பு எங்கே? நாங்கள் மூன்றாம் வகுப்புப் படிக்கும்போது பாடசாலை, கிராமம் என்பவற்றின் மாதிரிப் படங்களை வரைவோம். அப்போது என் கிராமம் என் மனக்கண்முன் விசாலிக்கும். ஒவ்வொரு குச்சொழுங்கையும், வைரவர் கோவிலும், வற்றாத பேய்க்கிணறும், அரிதான கல்வீடுகளும், குளிர்மையான மண் திண்ணைகளும், கேணியும், அருகில் இருந்த பின்னேரச் சந்தையும், அண்ணமார் கோவில் ஆலமரமும், காளிகோவில் அரசமரமும் எங்களோடு பேசும் - மானசீகமாக வாயாடும். ஒவ்வொரு நாகதாளியும், கற்றாளையும் வாவா என்றழைக்கும். நாகதாளிப் பழத்தின் சிவப்புத்தான் கோலாட்டம் அடிக்கும் தடிக்குப் பூசும் மை; சிவப்பென்றால் சிவப்பு. நாயுருவியும், குதிரைவாலியும் தேகத்தைப் பதம்பார்க்கும். அவைகள் இப்போது...? நாகதாளியும் கற்றாளையும் நாயுருவியும் குதிரைவாலியும் எருக்கலையும் ஆமணக்கும் போய்விட்டன; போகட்டும். அதோடு போகவேண்டாத சூக்மராகம் ஒன்றும் போய்விட்டது.

இதோ, பாடசாலைக்குப் பக்கத்தில் உள்ள விநாயகர் ஆலயத்தைப் பார்க்கிறேன். அதன் தெற்கேயுள்ள மடப்பளியும் தெரிகிறது. ஐம்பது வருடத்துக்கு முன் கோவிலைக் கட்டிய பெரியவர் சின்னத்தம்பி (சின்னர் சட்டம்பியார் என அழைப்பர்) அவர்கள் வேதாரணியத்திலிருந்து ஒரு குருக்கள் ஐயா அவர்களைக் கூட்டிவந்து குடியிருத்தினர்.

எங்கள் காலத்தில் இருந்தவர் சிவஸ்ரீ. சொக்கநாதக்குருக்கள் நல்ல உயரம்; கழுத்திலும் தலையிலும் உருத்திராக்கம்; தூய வெண்ணீறு திரிபுண்டரக் குறிகள்; குமிழி மிதியடியில் அவர் உலா வரும்போது அவரிடம் மரியாதை செலுத்தத் தோன்றும். அவர் வீடுவீடாகப் போய் விபூதி கொடுத்து ஆசீர்வாதம் செய்வார்; சுகசேமம் விசாரிப்பார். எந்த வீட்டில் ஏழு வயதுப் பையன் இருந்தாலும் 'சிவதீஷை பெற்றுயா? ஏன் பெறவில்லை. கட்டாயம் தீஷை பெறவேண்டும்' என வற்புறுத்துவார். ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தில் பலருக்கும் தீக்ஷை வைத்து மந்திரம் உபதேசித்து நாவலரது நித்திய கருமவிதிப் புத்தகத்தைப் பாராயணம் செய்வித்துப் புலாலுண்ணுமை, கொலை செய்யாமையை வற்புறுத்திவிடுவார். இது வெறும் தட்சணைக்காக நடைபெறும் விஷயமல்ல. இது தங்கள் முக்கிய கடமை என எண்ணி அவர்கள் நடந்தார்கள். பொதுமக்களும் யாதொரு குறைவுமின்றி அவர்களை ஆதரித்தார்கள். இப்போதைய குழந்தைகளின் ஆன்மஈடேற்றத்திற்காக யார் என்ன செய்கிறுர்கள்?

அடுத்த காட்சியைப் பாருங்கள். இது நடந்து முப்பது வருடம்கூட ஆகவில்லை. அப்போது கூட்டிறைப்பு நடைமுறையில் இருந்தது. அப்படி என்றால் என்ன? நான்கு பேர் சேர்ந்துதான் இறைக்கிற காலம். இருவர் துலா மிதிப்பார்கள். ஒருவர் பட்டை பிடித்து துலாக்கொடியால் இறைப்பர். இன்னொருவர் தண்ணீர் கட்டுவார். அருமையான சோஷலிசம், கூட்டுமுயற்சி. ஒரு காட்சியில் – வாழையடி வாழை நாடகத்தில் – இதை நான் பாடலாகவே எழுதியிருக்கிறேன்.

''அந்நாளில் நாங்கள் அரிசிதனைச் சோறுக்கித்
தின்றதே யில்லை இனிசாமை, நற்குரக்கன்
பிட்டும் மரவள்ளியும் பிடித்துவிட்டுச் சாமமது
தொட்டு விடியும்வரை துலாஉழக்கி வாழ்ந்திருந்தோம்.''

இந்த நாலுபேரில் துலா உழக்கும் இருவர் கூலிப் பிழைப்பு மக்கள்; பகல் முழுவதும் கொந்தாலி காவி கிணறு

வெட்டிவிட்டு சாமத்தில் துலாவில் ஏறியவர்கள்; விடிய விடிய இறைத்து ஆயிரங் கன்றுதான் பாய்ச்சினுர்கள்.

மெல்லென விடிகிறது நல்ல கோவில்மணி நாதம் நாலாபுறமும் இசைஒலி எழுப்ப எல்லோர் வாயும் 'தாயே' என்று ஏககாலத்தில் சொல்கிறது. இறைப்பு நிற்கிறது. ஆயாசம்தீர அந்த வாலிபர்கள் துண்டை விரித்து பக்கத்து அட்டாளேயிற் படுக்கிருர்கள்.

'இறைத்த கமக்காரனு'க்குக் குரக்கன்பிட்டு வருகிறது. அவர் அட்டாளேயில் படுத்திருந்தவர்களே எழுப்பி, 'ஏய் பிட்டுக் கிடக்கு சாப்பிடுங்களேன்' என வினவுகிருர். அவர்களும் அட்டாளேயில் உள்ள பிளாவில் அதை வாங்கிச் சாப்பிடுகிருர்கள். அப்போது முருகர் ஒரு காரியத்தை மெல்லென வெளியிடுகிருர்:

இங்கை பார் மாணிக்கன், வீரன் நீயும் கேள்; "எங்களோடை கூட்டிறைப்பு இறைக்கும் வைத்திலிங்கத்தாருக்குச் சுகமில்லே. சுன்ஞகம் முத்துக்கிட்டினர் வீட்டிலேயாம். அவற்றை ஆயிரங் கண்டு குரக்கன் குடல் பருவம். இன்டைக்கு நாளேக்கு இறையாட்டி அவ்வளவும் பாழாய் விடும். பாவம்! பத்துப்பறை குரக்கன் தேறும். ஒரு வருசத்துக்கிருந்து சாப்பிடப் போதும். நாங்கள்தான் இறைத்து அதைக் காப்பாற்ற வேணும்" என்கிருர். மாணிக்கன் சொல்கிருன், "ஓம் கமக்காரன் பஞ்சியைப் பாராமல் அதையும் இறைப்போம். பயிர் பச்சை எரிவதை — காய்வதை — கண்ணுலே பார்த்துக்கொண்டிருக்க முடியுமா?" இந்த வார்த்தைகேட்டு நிலமகள் புன்னகை செய்கிருள்.

முப்பது வருடங்கள் போய்விட்டன. கூட்டிறைப்பு மறைந்து விட்டது. பட்டை, துலாக் கொடி பதுங்கிவிட்டன. எங்கும் நீரிறைக்கும் யந்திரங்கள், தனிமுயற்சி; எதற்கும் கூலி. செய்யும் தோட்டமோ அபரிமிதம். வெண்காயம், மிளகாய், உருளேக்கிழங்கு, புகையிலே எனப் பணம் புரள்கிறது. ஓரளவு சுபீட்சமான நிலேதான். சந்தேகமில்லே.

ஆனல் முன் பட்டை பிடித்து இறைத்த முருகர் தன் மகனைப் பார்த்துச் சொல்கிறர் "எட மோனே, எங்கடை தோட்டத்துக்குப் பக்கத்திலே தோட்டம் செய்யிற கண பதிப்பிள்ளை ஆஸ்பத்திரியிலேயாம். மெஷினுக்கு மண் ணெண்ணெய் வரத்துமில்லாமல் அவன்ரை மனுஷி ஓடித் திரியுதாம். பாவம் இரண்டாயிரம் கண்டு மிளகாய் பழாய்ப் போகுதாம். உன்னட்டைத்தான் மெசின் கிடக்குதே எண் ணெயும் அடித்து வைத்திருக்கிறய் ஒருக்கால் இறைச்சு விடேன்."

மகன் சொல்கிறன்! "உம்நீ பேசாமற் கிட. அவரைப் பற்றி எனக்குத் தெரியும். என்னைக்கொண்டு இறைப்பிக்கப் பணச்செலவு எண்டு மெசின் எடுத்தவை; அவன்ரை மிள காய் சாம்பலாய்ப் போனல் எனக்கென்ன?"

முருகர் வாய் முணுமுணுக்கிறது. "சீ! நீயும் ஒரு கமக் காரன்; ஒரு பெடியன் சொல்லும் வார்த்தையா இது" நிலத்தாய் இதைக் கேட்டு அழுகிறள்.

மூன்று சிறு நிகழ்ச்சிகள்

ஒன்று — பகுத்துண்டு இனசனம் பேணல்
இரண்டு — சமயத்தின் அடிப்படை பேணல்
மூன்று — மற்றவனுக்கு உதவி புரிதல்

இவை உதாரணங்கள். இப்படிக் கிராமங்களின் அடி நாதமே மாறிவிட்டது. இதைக் கிராமத்து எழுத்தாளர்கள் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். இவற்றில் நல்லனவற் றிற்கு எழுத்தால், பேச்சால் உயிர்கொடுக்க வேண்டும். இது எனது ஆசை.

இவை மட்டுமல்ல இன்னும் பல விடயங்கள் இருக் கின்றன. அடுத்துவரும் அத்தியாயங்களில் அவற்றைப் பாருங்கள்.

# 6. துண்டு துணுக்குகள்

1. பொற்கொடியாள் நாடகம்
2. ஆட்டக் காவடி
3. புராணப்படிப்பு
4. ஈற்றயல் எழுத்துக்கவி

## பொற்கொடியாள் நாடகம்

ஆண்டு சரியாக ஞாபகம் இல்லை. 1925 ஆக இருக்கலாம். எங்களூரில் குரும்பசிட்டியில் முதல் முதலாக நான் ஒரு நாட்டுக்கூத்தைப் பார்த்தேன். அந்தப் பசுமை நினைவு இன்னும் என்நினைவில் இருக்கிறது. முதல் தமிழில் வெளிவந்த பேசும்படமாகிய வள்ளிதிருமணம் தொடக்கம் இப்போது ஓடிக்கொண்டிருக்கும் இராசராசசோழன் வரை அநேகமான தமிழ்ப் பேசும் படங்களையும் வாரம் தவறாமல் ஓரிரு ஆங்கிலப் படங்களையும் பார்த்தவன் நான் (ஒரு பத்திரிகை என்னைப்பற்றிச் சிறிது கேலியாக — நான் ஆங்கிலப் படம் பார்ப்பதைக் குறிப்பிட்டு எழுதியிருக்கிறது). இத்தனை படங்களையும் அநேக நாடகங்களையும் பார்த்தபிறகும் கூட எம் கிராமத்தில் அக்காலத்தில் நடந்த பொற்கொடியாள் நாடகம் காலத்தோடு ஒட்டிப் பார்க்கும்போது உயர்வாகவே படுகிறது.

கிராமங்கள் கமத்தை நம்பி (நெல்வயலை அல்ல) இருந்த காலம். குரக்கனும் சாமையும் மரவள்ளியும் பயறும் புகையிலையும் அமோகமாக விளைந்து — (பணமில்லாது விட்டாலும்) உணவுக்குக் குறைவென்பதே இல்லாத காலம். பாலும் மோரும் கருப்பநீரும் (பதனி) பனங்கட்டியும் 'கால்வழி கைவழி' சிந்தியகாலம். ஓய்வுகால முசுப்பாத்தியாகக் கூத்தாடினர் மக்கள். கலை என்பது இருக்கட்டும். கிராமத்தின் கட்டுக்கோப்புக்கு உதாரணம் அந்த நாடகம். இளம் தலை

முறையினரும் நகர எழுத்தாளர்களும் உணர — சற்று விரிவாக — எழுதுகின்றேன்; 43 வருடங்களுக்கு முந்திய ஒரு சம்பவத்தை இரைமீட்டு எதுகின்றேன்.

அண்ணாவி கந்தப்பிள்ளை அந்தக் காலத்திற் பெயர்பெற்ற அண்ணாவியார். ஆவரங்காலை இருப்பிடமாகக் கொண்டவர். அவரே **பொற்கொடியாள்** என்ற நாடகத்தை எழுதிப் பாட்டுக்களும் போட்டுக் கூத்தைப் பழக்கியவர். எனது மாமனார் (எனது மனைவியின் தகப்பனார்) சின்னப்பு கூத்து நடாத்தும் மனேஜர். இருபத்தைந்து பேருக்குமேல் எங்களூர் வாலிபர்கள் — சிலர் விவாகம் செய்தவர்கள் — கூத்துப் பழகினார்கள். எடுப்பான சாரீரம் கொண்டவர்கள் உரத்துப் பாடினால் அரை மைலுக்காவது கேட்கும். (ஒலிபெருக்கி இல்லாத காலம் அது) கூத்துப் பழகுமுன்னமே நூறுரூபாவுக்கு ஒவ்வொருவரும் — இடையில் குழப்ப மல் இருப்பதற்காக — 'பொறுப்பு'க் கொடுத்திருந்தார்கள்.

அம்மன் கோவிலுக்கு முன்னாலே இருந்த ஒரு பெரும் வெளியிலே அந்தக் கூத்து நடந்தது. ஒரு வாரம் இரண்டு வாரமல்ல **பத்து வாரங்கள்**. ஒவ்வொரு வாரத்திலும் வரும் வெள்ளிக்கிழமை இரவு கூத்து நடந்தது; இரவு எட்டு மணிக்குத் தொடங்கி விடியும்வரை நடந்தது. பத்தாம் வாரம் முடிய அண்ணாவியார் கூத்தாடிய வாலிபர்களை எல்லாம் அந்தந்த உடுப்புக்களுடனே பெரிய பணக்கார வீடுகளுக்கும் உறவுமுறையான வீடுகளுக்கும் கூட்டிச் சென்று சன்மானம் வாங்கியது இப்போதும் என் ஞாபகத்தில் இருக்கிறது. அண்ணாவி கந்தப்பிள்ளையின் கூத்து எப்படி நடந்தது. அதன் விபரங்கள் என்ன? என்பதை அப்படியே படம்பிடித்த மாதிரி **கூத்து** என்ற சிறுகதையில் வர்ணித்திருக்கிறேன். வாசித்துப்பார்க்கப் பிரியமானவர்கள் வாசித்துப் பார்க்கலாம்.

அந்தக் கதையில் வர்ணியாத ஒரு இடத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்தக் காட்சியை இப்போது நினைத்

தாலும் தேகம் புல்லரிக்கிறது. அக்கால கிராமத்து மக்களின் இரசனையை எண்ணி அகம் மகிழ்கிறது. பூலோகத்து அரசனை மயக்கத் தேவ உலகத்திலிருந்து மேனகை வருகிறாள். தாமரைப் பூவிலே அவளை மேலே இருந்து கயிறு மூலம் இறக்குகிறார்கள். ஒவ்வொரு தாமரைப்பூ இதழிலும் — பெரிதாக அட்டையில் செய்தது — விளக்குகள், மேலே இருந்து அவள் இறங்க அரைமணித்தியாலம் ஆகும். ஒவ்வொரு அடி இறங்க இறங்க தாமரை இதழ்கள் விரியும். ஆ! அந்த அற்புதக் காட்சி, மேனகையாக வந்த அந்த வாலிபரின் — பொன்னம்பலம் — அழகுக்கு உண்மையான மேனகை பிச்சை வாங்கவேண்டும்.

மேலே இருந்து மேனகை இறங்கும் காட்சியைப் பார்ப்பதற்காகவே பத்துப் பதினைந்து மைல் தூரத்திலிருந்து சனங்கள் வருவார்கள். சுமார் மூவாயிரம் சனங்கள் வாய் பிளந்தபடி அக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

இந்த மேனகை ஆகாயத்திலிருந்து பூமியை நோக்கி வருவதாகக் கற்பனை. கற்பனைக்கேற்றபடி தாமரைப்பூவில் இறங்கும் நடிகர், இறங்குமிடத்தில் பெரிய பூமி — சீமந்தியாலோ அல்லது மரத்தாலோ செய்ததென்பது ஞாபகமில்லை — வைக்கப்பட்டிருந்தது அதில் மேனகை கால்வைத்து உருட்டியபடியே மேடை முழுவதும் 'நாட்டியம்' ஆடிய காட்சியைப் இப்போது நினைத்தாலும்... அதை வர்ணிக்க வார்த்தைகளே யில்லை. அதன்பிறகு அந்த மேனகை வட்டியில் நடனமாடுவாள். (ஏதோ குச்சுப்புடி நடனம் என்று இப்போது பிரமாதப்படுத்துகிறார்களே அதுதான்) செம்பு நடனம், வட்டிலில் நடனம், கைகளில் மெழுகுதிரி கொளுத்திய வட்டமான தட்டுகளை வைத்து நடனம் என்றெல்லாம் அண்ணாவி கந்தப்பிள்ளை பிரமாதப் படுத்திவிட்டார்.

ஒவ்வொரு நடிகரும் தத்தமக்கு வேண்டிய உடுப்புக்களைத் தேடி எடுக்க எவ்வளவு செலவு செய்தார் என்று

இப்போது நினைக்கும்போது — ஆகா, அப்போதைய குரும்ப சிட்டி மக்களை நினைக்கும்போது — பெருமைப்படாமல் இருக்க முடியாது.

தாளக்காவடி

'வேலுடையான் அன்பர் வினையுடையவே மிதிக்கும் காலுடையான் பன்னிரண்டு கண்ணுடையான்' — ஆம். சன்னதி முருகன் கோவிலிற் கொடியேற ஒரு மாதத்துக்கு முன்னமேயே எங்களூர் அண்ணுவி வைரவன் தாளத்தைக் கையிலெடுத்துவிடுவான். சிறுவர்களும், பெரியவர்களும் கிழவிகளும், குமரிகளும் ஒரு வேப்பமரத்தடியிலே கூடியிருக்க ஊமை நிலவிலே அந்த ஆட்டக்காவடி நடக்கும். தங்கள் சாதியிலே வெகு சுட்டிப் பையன்களாக மூன்று பேரைப் பொறுக்கி எடுத்துத் தோளில் குறுந்தடியைக் கொடுத்து

தா. அருளைத் தருணமின் றடியவர்க்கு – செல்வச்
சந்நிதியிலே யமரும் பன்னிருகை வேலவனே
தா. அருளைத் தருணமின் றடியவர்க்கு

என்ற பல்லவியைப் பலவிதமாகப் பாடி வைரவன் ஆட்டும் காட்சி இருக்கிறதே அதை வாழ்நாளில் மறக்க முடியாது. இந்தக் காவடிஆட்டக் காட்சியைக் கருப்பொருளாக வைத்துத்தான் சமர்ப்பணம் என்ற கதையை எழுதியுள்ளேன். 'வெண்சங்கு' என்ற என் சிறு கதைத் தொகுதியில் உள்ள சிறந்த கதைகளில் 'சமர்ப்பணம்' என்பதும் ஒன்றாகும். இந்தக் காவடிஆட்டக் காட்சியைத் தொடக்கம் முதல் சன்னதி கோவில் தேர் அன்றிரவு எடுக்கப்படும் காவடி ஆட்டம் வரை — அச்சுவேலிச் சந்தியில் கள் அருந்திவிட்டு சீழ்க்கை அடித்து முசுப்பாத்தி பண்ணும்வரை — இரசித்த கிராமத்து மகனுக்குத்தான் அந்தக் கதையின் அருமை பெருமை விளங்கும். கிராமத்திலே உள்ள வேளாளர் — ஹரிசனர் உறவு, அன்புமுறை இந்தக் காவடியாட்டம் போன்ற நிகழ்ச்சிகளால் ஏற்படும்

பிணைப்பு எல்லாம் இப்போது எங்கே? என்று கேட்கத் தோன்றுகிறது. நகரங்களில் பேச்சு மேடையில் ஒன்றும் தெரியாமல் உரக்கக் கத்திய நிலப்பிரபுத்துவம், அடக்கு முறை, போராட்டம் என்ற சொற்கள் கிராமங்களிலும் கேட்கத் தொடங்கிவிட்டன. முன்னேற்றம்! ஆச்சரியமான முன்னேற்றம்!!

புராணப் படிப்பு

மார்கழிமாதத் திருவெம்பாவைக் காலத்திலே எங்க ளூர் அம்பாள் ஆலயத்தில் திருவாதவூரர் புராணபடனம் நடைபெறும். நானறிந்த காலம் தொடக்கம் ஐம்பது வருட மாக இது நடைபெறுகிறது. கந்தபுராணப் படிப்புப் போல மாதக் கணக்காக நடைபெறும் படிப்பல்ல. பத்து நாட்களுக்குள் முடிவுபெறும் படிப்பு. மிக இளமையிலேயே பொருள் விளங்காத நிலையிற் கூட மிக ஆசார சீலத்துடன் இதை நான் ஒழுங்காகக் கேட்டேன். ஏழாம் எட்டாம் வகுப்புப் படிக்கும்போதே — யாராவது வாசிப்பவர் வராதுவிட்டால் — நானே வாசிக்கத் தொடங்கிவிட் டேன். தொடர்ந்து நாற்பது வருடங்களாக இதைச் செய்து வந்திருக்கிறேன். இந்தப் படிப்பால் கவிதையின் பல வகைச் சந்தம், வாசிக்கும் முறை — (இராகங்கள் அல்ல) பொருள் தெளிவு என்னும் பயன்களை நான் பெற்றேன். ஒருமுறை அருணசல புராணத்தை வாசிக்க கேட்ட ஞாப கங் கூட இருக்கிறது. இந்த அருட்டுணர்வு என்நெஞ்சத் தடத்தில் ஊறியிருந்தப்டியாலேதான் பிட்டு என்ற கதையை உருவாக்கினேன். பிரபல விமர்சகர் எஸ். பொ. அக்கதையை நுட்பமாக ‘வெண்சங்கு’ என்ற என் சிறு கதைத் தொகுதியில் விமர்சித்திருக்கிறுர். கூத்து, சமர்ப் பணம், பிட்டு என்ற மூன்று கதைகளுக்கும் என் இளமை வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பைத்தொட்டுக்காட்டியிருக் கிறேன். இப்படியே நிலாவரை என்ற இடத்தில் அக்காலக் திலே வாராவாரம் நடைபெற்ற வண்டிச் சவாரிக் காட்சி

யையும் 'மத்தாப்பு' என்ற நாவலில் (ஐந்துபேர் எழுதியது) கொண்டுவந்திருக்கிறேன். என்வீட்டுக்குப் பக்கத்தே ஒரு சுருட்டுக் கொட்டில்; பாடசாலை நடைபெருத நாட்களில் அதில் முசுப்பாத்திக்காக — இளமையில் — 'வால்சுத்து'க் கட்டிப் பழகினேன். அப்படிக் கட்டிப் பழகிய நான் படிப்போடு ஓரளவு நன்ருகச் சுருட்டவும் பழகிக் கொண்டேன். இதனுல் சுருட்டுத் தொழிலாளர் பலர் என் நண்பர்களாயினர். இப்போதும் என் கிராமத்தில் சுருட்டும் பலர் தங்களில் ஒருவராகவே என்னை நினைக்கிருர்கள். உண்மை. நான் ஆசிரிய உத்தியோகம் பார்த்திராவிட்டால் கை தேர்ந்த சுருட்டுத் தொழிலாளியாகியிருப்பேன். மிகச் சந்தோஷமாக அந்தத் தொழில் செய்திருப்பேன். அந்தச் சுருட்டுக் கொட்டில் என், பட்டத்தின் முச்சை அறுந்துவிட்டது என்ற வானெலிக் கதையிலும் 'சுருட்டுக் கைத்தொழில்' என்ற நூலின் அணிந்துரையிலும் விழுந்திருக்கிறது.

மேல்தட்டு வாழ்க்கை வாழ்ந்து கற்பனைக் கதைகள் எழுதுவோர் நாங்கள் என்ற பிரமையை வாசகரிடத்து ஏற்படுத்தச் சிலர் படாதபாடுபட்டு வருகிருர்கள். அவர்களை நினைக்கச் சிரிப்புத்தான் வருகிறது. கிராமத்தில் பிறந்து வாழ்க்கையில் கீழ்த்தர மக்களுடன் நேசமாகப் பழகித் தொழிலாளர்களுடன் அன்புகொண்டு வாழ்ந்து, வறுமையில் உழன்று, பல மேடு பள்ளங்களைக் கண்டு வாழ்க்கை முழுவதும் — இன்னுந்தான் சாதிமதம் பாராது சரிசமமாக வாழ்ந்துவரும் என்னை — முற்போக்காளர் என்று பம்மாத்துக்காட்டும் எழுத்தாளர் சிலர் தாங்கள்தான் வாழ்க்கையை அப்படியே காட்டும் எழுத்தாளர் என்ற நினைப்பில் — கேலி செய்யும்போது சிரிக்காமல் இருக்க முடியுமா? சிரித்துக்கொண்டேயிருக்கிறேன்.

**ஈற்றயல் எழுத்துக்கவி**

ஆரும் வகுப்புத் தொடக்கம் பாடசாலையிலே எங்கள் வாழ்க்கை கழிந்தது. இரவில்கூட அங்கேதான் படுப்போம். வெறும் வாங்குகளில் தலையணை ஒன்று மின்றிப் படுத்துக்கொண்டிருக்கும்போது நித்திரை வரும் வரையும்

ஈற்றயல் எழுத்துக்கவி சொல்லுவோம். இது என்ன கவி என்கிறீர்களா? அது ஒரு வேடிக்கை விளையாட்டு. படித்திருப்பவர்கள் இரு பகுதியாகப் பிரிந்துகொள்வோம். ஒரு பகுதியார் ஒரு கவிதையைச் சொல்லுவார்கள். அந்தக் கவிதையின் கடைசி எழுத்தை — அல்லது அடுத்த எழுத்தை — முதலாகக் கொண்ட கவிதையை அடுத்த பகுதியார் சொல்லவேண்டும். உதாரணமாக, 'பாலும் தெளிதேனும்" என்ற பாட்டை ஒரு பகுதியார் தொடங்கி வைப்பார்கள். அதன் கடைசி வரி 'சங்கத்தமிழ் மூன்றுந் தா' என்பதாகும். அடுத்த பகுதியார். 'தா' என்பதை முதலாகவுடைய, 'தாந்தாம் முன்செய்த வினை' என்ற பாடலையோ 'தாமரை பொன்முத்து' என்ற பாடலையோ சொல்வார்கள். இப்படி இது தொடரும். ஞாபகசக்திக் கேற்ற போட்டி எத்தனையோ கவிதைகளை இதற்கென்றே மனப்பாடம் செய்து வைத்திருப்போம். மனப்பாடம் செய்வதென்பது அக்காலத்தில் கஷ்டமாக இருக்கவில்லை. சரித்திர, பூமிசாஸ்திர பாடங்களையே மனப்பாடமாகச் சொன்ன எங்களுக்குக் கவிதைகள் ஒரு பொருட்டல்ல. எட்டாம் வகுப்பைத் தாண்டுமுன்னரே நானூறு, ஐந்நூறுபாடல்களுக்கு மேல் எனக்கு மனப்பாடமாய் விட்டது. இந்த ஈற்றயல் எழுத்துக் கவிப் போட்டியில் என்னைத் தங்கள் பக்கத்துக்கு வரும்படி ஒவ்வொரு பகுதியாரும் அழைப்பார்கள். ஒருமுறை படித்ததை அப்படியே மனதில் வைத்திருக்கும் சக்தி அன்றும் எனக்கு இருந்தது. இன்றும் ஓரளவு இருக்கிறது. பிற்காலத்தில் இது எனக்கு பெரும்பயன் அளித்தது. கவிதை மாத்திரமல்ல, சிறுகதை, கட்டுரை, நாடகம் என்பவற்றைக்கூட — அது யார் எழுதியது — எந்தப் பத்திரிகையில் வந்தது — எந்த ஆண்டில் வந்தது — என்பதை என்னால் சொல்ல முடிந்தது. ஆனால், இந்தக் காலத்து மாணவர்கள் பாடபுத்தகத்தில் உள்ள பாடல்களைக் கூட மனனம் செய்கிறார்கள் இல்லை. தேவார, புராணங்களைக்கூட மனனம் செய்கிறார்களில்லை. இதனால் வாழ்க்கையில் அமைதி இல்லை கட்டுரைகளில் சுவையில்லை. சொற்பொழிவுகள் வெறும் சொல்லலங்காரமாகவே இருக்கின்றன.

# 7. குழந்தை விளையாட்டுக்கள்: முசுப்பாத்திகள்

காமாட்சி சுந்தரத்தின் கரவேகத்
தவில்ஒலியைக் காதாற் கேட்டும்
மாமோகம் கொண்டுஅண்ணுச் சாமிகுழல்
வாசிப்பை மாந்தி நின்றும்
நாமோடி மழைக் கொதுங்கிச்
சிறுப்பர்மடம் படுத்துறங்கி நன்னீர்ஆடிச்
சாமாதி சாமமெல்லாம் தளர்நடையிற்
திரிந்தகதை சற்றே கேளீர்.

'மாங்காய்க்குக் கல்லெறிந்து மகிழமரத் தேறிப்
பாங்கான தோழருடன் பகலிரவாய்ஊர் சுற்றித்
தூங்காமல் தூங்கிச் சுவடிகளிற் கண்ணயர்ந்து
ஆங்காலம் போக்கியநாள் அடுத்துமினி வாராதோ.

எனக் கவிஞர் யாழ்ப்பாணன் 'அந்த நாள் வாராதோ' என்ற தலைப்பில் முதுமை நினைவுகளை அருமையாகப் பாடியுள்ளார். ஐம்பது வயது சென்றபின் சோம்பேறிக் கட்டிலிலே சுகமாகப் படுத்துக்கொண்டு பழையகால நிகழ்ச்சிகளை இரைமீட்டுப் பார்க்கும் போது எழும் இன்பம் இருக்கிறதே, அது தனி ஒரு இன்பம்தான்!

சினிமாப் படங்கள் வந்து நாடக மேடைகளை ஒதுக்கிவிட்டன. வண்டிச் சவாரி ஏதோ கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய முற்றவெளிக் காட்சிப் பொருளாகிவிட்டது. தாளக் காவடியைக் காண்பதே இப்போது அருமையாகிவிட்டது. புராண படனம் சில 'கிழடு கட்டைகளு'ம் கோவில் தூண்களும் கேட்கும் பரிதாப நிலைக்கு வந்துவிட்டது. எஞ்சியிருக்கும் கோவில் திருவிழாக்களும் சுவாமி தூக்க ஆளின்றி ஒப்புக்கு — கோவில் மேளத்தின் கர்ண கடூரமான 'டும்டும்' சத்தத்துடன் — நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. கரகம், காவடி, நல்ல மேளம்,

இசை எல்லாம் போனபின் தமிழனின் பண்பாடு, கலாசாரம் என்பவற்றில் மிஞ்சி இருப்பது என்ன? என்று கேட்கத் தோன்றுகிறது.

அந்தக்காலம் — ஆமாம் — நாற்பதாண்டுகளுக்கு முன், ஆகம விதிகள் ஒருபுறம் இருக்கட்டும் — திருவிழாக்கள் நடந்த விமரிசையை நினைக்க நெஞ்சு குளிரும். இந்தத் திருவிழாக்களால் ஆசாரம், பண்பாடு, தூய்மை, ஆலய ஒழுங்கு முதலியவை கெட்டுவிட்டன என்று கண்டித்தவர்கள் பலர் இருக்கத்தான் செய்தனர். நாவலர் பெருமானே அந்தக் காலத் திருவிழாக்களைப் பற்றி மோசமாகக் கண்டித்திருக்கிறார். ஆனால் எனக்கென்னவோ அப்படியான நிகழ்ச்சிகளும் தேவை என்றுதான் இப்போதும் படுகிறது. அல்லாதுபோனால் சில கலைஞர்களுக்குப் பிழைப்பே போய் விடும் — சில கலைகள் அழிந்து இருந்த இடம் தெரியாமல் மண்ணோடு மண்ணாகிவிடும்.

நாதஸ்வரக் கலையையும், மேளக்கச்சேரியையும் எடுத்துக்கொண்டால் அது கோவில்களில் வளர்ந்த கலை என்பது புலனாகும். அந்தக் காலத்திலே அண்ணாச்சாமி நாதசுரமும், காமாட்சிசுந்தரத்தின் தவிலும் கேட்காத கோவில்களே இல்லை. குமுக்கா கணபதி, பெரியபழனி என்போரின் தவில்சமாவைக் கேட்டு எத்தனை பேர் தலை ஆட்டினார்கள்? முத்துக் கிருஷ்ணனின் வீதி வாசிப்பிலே தம்மை மறந்து இருந்தவர்கள் ஆயிரம் ஆயிரம் பேர் இருப்பார்கள்.

'சின்னமேளம்' என்று சொல்லிக்கொண்டு நாட்டியம் ஒன்றும் தெரியாத சிறுமிகளைப் பட்டாம் பூச்சி பறப்பதைப்போல ஆடுவிக்கிறார்கள் இப்போது. அதைப் பார்த்தும் சிலர் வாயைப் பிளக்கிறார்கள். இது அந்தக் காலத்தில் ஓரளவு முறையான பயிற்சியுடையோரால்தான் கையாளப்பட்டது, பார்க்கக்கூடியதாகவும் இருந்தது.

பிற்காலத்தில் சினிமாவில் பின்னணி பாடித் தன் புகழ் நிறுவிய பெரியநாயகி என்பவரின் தாயார். (பண்ருட்டி என்றே அழைத்ததாக ஞாபகம்) யாழ்ப்பாணத்

தில் பெயர் பெற்ற பாடகி. ஒலிபெருக்கி வசதி இல்லாத காலத்திலும் அவரது சாரீரம் கணீரென்று கால் மைல் தூரம் கேட்கும். ஆபாசப்பாடல் எதுவும் அவர் பாடுவதில்லை. 'மாஞடை மழுவாட' என்று அவர் பாடிய பாடலைப் போல இதுவரை நான் கேட்டதில்லை.

முத்துச் சப்பரம், கண்ணுடிச் சப்பரம், ஓலைச்சப்பரம் என எத்தனை வகை. எவ்வளவு கைவினைஞர்களின் ஒத்துழைப்பு. அதற்கேற்ப சுவாமி அலங்காரம் (சாத்துப்படி) பெரிய தீவட்டிகள்.

விடிய ஐந்து மணிக்கு வடகிழக்கு மூலையிலே அலங்காரமான முத்துச் சப்பரத்திலே அழகான சாத்துப்படி சோடினைகளுடன் சுவாமி வீதி உலா வந்து தரிக்க, தீவட்டிகளின் மங்கலான ஒளியிலே சப்பரத்துக் கண்ணுடிகள் மினுமினுக்க, பதினைந்து யார் தூரத்திலே பெரிய பழனியும், குழுக்காக் கணபதியும் காமாட்சியும் மேளச்சமாவை தடல்புடலாக நடாத்தி முடிக்க, பண்டுருட்டி அம்மாள் 'மாஞடை மயிலாட' என்று பாடத் தொடங்கும்போது தமிழனின் கலாசாரம் ஒருமித்துத் திரண்டு சங்கமித்தது போல இருக்கும்.

இதற்குள் எலிவாணம், சக்சரவாணம், காவடி வாணம், ராட்டினம், கப்பல் அவுட்டு என்றெல்லாம் வாணவேடிக்கை. பலவகை நிறத்தில் மத்தாப்பு மேலே; கீழே நில விசிறி, ஆஹா, வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது. இந்த வாணவேடிக்கையைப் பார்க்க வருடமொரு முறை முற்றவெளியில் தினகரன் விழாவுக்குப் போய் வாயைப் பிளக்கிருர்கள்! நினைத்தால் சிரிப்பு வருகிறது.

அனுவசியச் செலவு என்பவர்கள் இன்றும் இருக்கிருர்கள்! அன்றும் இருந்தார்கள்!! ஆனல் பரவலான பொருளாதார சித்தாந்தம் இதில் இருந்தது. மேளம், சப்பரம், பூமாலை, தீவட்டி, எண்ணெய், குருக்கள், எடுபிடி வேலையாட்கள் என்று எத்தனை பேர் ஊதியம் பெற்ருர்கள்; வாழ்ந்தார்கள். பரவலாகப் பணம் புழங்க இந்தத் திருவிழாக்கள் வழிசமைத்தன; கலை வளர இவை உதவி செய்தன.

இப்போது கிராமத்துப் பெரியபுள்ளி பிள்ளைத் தண்டிலே சுவாமியைச் சுற்றிவிட்டு, தூய்மை பேசி பணம் சேர்த்து தமது மகளுக்கு ஒருலட்சம் சீதனமாகக் கொடுக்கிறார். அவரே, தமிழ், தமிழ்கலைகள், பண்பாடுகள், கிராமம், கிராமசமுதாயம் வளரவேண்டுமென மேடையில் முழக்குகிறார்.

சனிக்கிழமை விடுதலை (லீவு) நாள். ஆகையால் வெள்ளிக்கிழமை இரவு எப்போது வரும் என்று நாங்கள் ஆவலோடு எதிர்பார்ப்போம். சித்திரை மாதம் தொடங்கிவிட்டால் கிராமப்புறக் கோவில்களில் திருவிழா மயம்தான், சுன்னுகம் ஐயனார் கோவில், நீர்வேலிக் கந்தசாமி கோவில், புன்னலைக்கட்டுவன் பிள்ளையார் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் இவைகளிலெல்லாம் நல்ல திருவிழாக்கள் நடக்கும். இரவிரவாக நடந்துபோய் இவற்றைப் பார்ப்போம். அடுத்தநாள் -- பாடசாலையில் மேசையெல்லாம் ஒரே தவிலடிதான்.

இந்தத் திருவிழாக் காட்சிகளை வைத்து நல்ல சிறுகதைகள் எழுதலாம்; நாவலாக உருவாக்கலாம். ஆனால் என்ன காரணமோ அந்தப்பக்கம் திரும்பிய எழுத்தாளர்களைக் காணோம். சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் வைரவர் கோவில் விளக்கு என்ற சிறுகதையில் (1938 — 39 இல் எழுதியதாக ஞாபகம்) சிறிது தொட்டுக் காட்டியிருக்கிறார். அவர் அக்கால நாதஸ்வரக் கச்சேரிகள் பற்றி விமர்சனமும் ('ஈழகேசரி'யில்) எழுதியிருக்கிறார். 'வாழையடி வாழையிலும்' இதை நான் எழுதியிருக்கிறேன்.

**கீரிமலையில் நீச்சல் பழக்கம்**

திருவிழா இல்லாத வெள்ளிக்கிழமை இரவுகளில் கீரிமலைக்கு இரவிரவாய் நடந்து போவோம். அது ஒரு முசுப்பாத்திப் பயணமாக இருக்கும். மழை, பனி இவற்றை இலட்சியம் செய்யாது ஐந்து மைல் தூரமுள்ள அந்த இடத்தை அடைந்து சிறுப்பர் மடத்தில் நித்திரை கொண்டு விடிய நான்கு மணிக்கு எழுந்து பளிங்குபோன்ற நீரிலே நீந்தப் பழகி விடியுமுன் கடற்கரையோரமாகக் காங்கே

சந்துறைக்கு வரும்போது சோகி பொறுக்கியும், ஓடும் நண்டுகளைத் துரத்தியும், அலையும் அலைகளில் கும்மாளமடித்தும், மணலில் ஓடிப் பிடித்தும் நாம் விளையாடிய விளையாட்டுகள்! ஆகா! அவை எத்தனை இன்பத்தை அளித்தன!!

ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. மாங்காய்க்குக் கல்லெறிந்தோ, காணாமல் இளநீர் பிடுங்கியோ, காவாலிகள் போல் சேட்டை செய்தோ நாம் வளரவில்லை. இவற்றிற்குப் பயம்தான் காரணம். பயமென்றால் வீட்டுப் பயமல்ல. ஆசிரியர் பரமானந்தரது பயம்தான். ஆம், அந்தக் காலத்தில் எவ்விடத்திற் குழப்படி செய்தாலும் தண்டனை பாடசாலையில்தான்.

அந்தக் காலத்திற் 'பஸ்' ஓடவில்லை. பைசிக்கிள் வண்டி அபூர்வம் ஒரிரு பெரியவர்களே ஓடிக்கொண்டிருந்தார்கள். ஒரேஒரு மோட்டார் வண்டி; மிகப் பழையது. கடாபுடா என்று தெரு அளந்தது. மாட்டுவண்டி எங்கள் மனோவேகத்துக்குத் தோதில்லை. எனவே நடைதான். எத்தனை தூரம் நடப்பதற்கும் நாங்கள் சகிப்பதில்லை. பதினெட்டு மைல் தூரத்திலிருக்கும் வல்லிபுர ஆழ்வார் கோவில் திருவிழாவுக்கு நானும் எனது இரு நண்பர்களும் வல்லைவெளிக்கூடாக யாதொரு பயமுமின்றி நடந்துபோய் அடுத்தநாட் காலையில் பருத்தித்துறைச் சந்தையைப் பார்த்து மகிழ்ந்து நெல்லியடிச் சந்தை ஊடாக வீட்டுக்கு நடந்து வந்தோம். இதை எனது மகனே இப்போது நம்ப மாட்டான். ஆனால் உண்மை.

இப்படிப்பட்ட அனுபவங்கள் அடிமனத்தில் ஆழ்ந்து இப்போது ஏதாவது கதையோ கட்டுரையோ எழுதும் போது என்னை அறியாமலே தலைகாட்டுகின்றன. இந்த அனுபவங்கள் அப்போது வெறும் பொழுதுபோக்கு. இப்போது அவையே சுவையான கதை, கட்டுரை.

# 8. திருநெல்வேலிக்குச் சென்றேன்

சொந்த ஊர்தனில் பாட சாலையிற்
செய்த குற்றமொன் றுண்டதால்
சிந்தை நொந்துஎன் அன்னை என்வழி
செல்ல விட்டனள் நல்விதி
உந்த நானிரு தோழ ரோடும்போய்
உயர்வ குப்பினிற் சேர்ந்தனன்
எந்தன் வாழ்வினில் ஓர்தி ருப்பமித்
திருநெல் வேலியிற் படித்ததே.

## கடலை சாப்பிடாமல் தண்டிக்கப்பட்டேன்

குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலையில் நவராத்திரிப் பூசை — விழாக்கள் — கோலாகலமாக அக்காலத்தில் நடைபெறும். முதல் நாளே கும்பம் வைத்து ஐயர் வந்து பூசை செய்து, விபூதி சந்தனம் கொடுத்துச் செல்வர். புற்கை, மோதகம், கடலை, வாழைப்பழம் என்பவை மாணவர்களுக்குக் கொடுப்பார்கள். ஒவ்வொரு வகுப்புப் பிள்ளைகளும் ஒவ்வொரு திருவிழாவைச் செய்வார்கள். இன்று ஐந்தாம் வகுப்பு, நாளை ஆறும் வகுப்பு, அடுத்தநாள் ஏழாம் வகுப்பு எனத் தலைமையாசிரியரே ஒழுங்கு செய்து விடுவார். ஒவ்வொரு வகுப்பாரும் மிக உற்சாகமாக வாழை கட்டி, தோரணம் தூக்கி, தாமே கடலை அவித்துப் புற்கை பொங்கி அமர்க்களப் படுத்துவார்கள். பத்துநாளும் ஒரே குதூகலம்தான். கடைசி மூன்று நாட்களும் சரஸ்வதி பூசை. புத்தகம் எல்லாம் வைத்துப் பூசை நடைபெறும். வாழை வெட்டிக் கும்பம் சரிப்பர். மாணவர்களுக்கு ஒரே கோலாகலந்தான்.

நான் அந்தப் பாடசாலையில் 1933ஆம் ஆண்டு எஸ். எஸ். எல். சியிற் படித்துக்கொண்டிருந்தேன். என்னுடன்ஏழெட்டு மாணவர்கள் படித்தார்கள். அந்த வகுப்புக்கும்

அதற்குக் கீழேயுள்ள எட்டாம் வகுப்புக்கும் (வி.எஸ் எல்.சி) கோபம். எனவே அவர்கள் நடாத்தும் பூசையிற் கலந்து கொள்வதில்லை என நாங்கள் முடிவு செய்தோம். பூசை முடிந்து கடலை முதலியன கொடுக்கும் நேரம்; நாங்கள் எல்லோரும் வெளியேறிவிட்டோம். இதைச் சாதாரண நிகழ்ச்சி என்றே நாங்கள் அப்போது கருதினோம். ஆனால் அந்த நிகழ்ச்சி பூதாகரமாய் உருவெடுத்துவிட்டது.

தங்களை அவமரியாதை செய்துவிட்டதாக எட்டாம் வகுப்பு மாணவர்கள் கருதினார்கள். தலைமையாசிரியருக்கு முறையீடு செய்தனர். பரமானந்த ஆசிரியர் இதைப் பொறுப்பாரா? இவ்வளவுகாலமும் நடவாத ஒரு நிகழ்ச்சி இது என்றே அவர் கருதினர். அடுத்தநாள்: எங்கள் வகுப்பு மாணவர்களைக் கூப்பிட்டு அவர் விளக்கம் கேட்டார். ஒவ்வொருவரும் ஏதேதோ காரணம் கூறினர். ஒருவர் வெள்ளிக்கிழமை விரதம் என்றார். மற்றவர் சுகவீனம் கடலை சாப்பிடக்கூடாது என்றார். இப்படி நொண்டிச் சமாதானங்கள் கூறினர்.

என்னுடைய முறை வந்தது. ஆசிரியப் பெருந்தகை என்னைக் காரணம் கேட்டார். என் அன்னையின் துணிவு என் இரத்தத்தில் ஊறியிருக்க வேண்டும் 'பச்சைப்படியாக'வே ஒளிவு மறைவின்றி உண்மையைக் கூறிவிட்டேன். அந்த வகுப்பில் நான்தான் 'சிறிய' மாணவன். வயதிலும் சிறியவன். ''மூத்த மாணவர்கள் ஒன்றும் சாப்பிடாமல் வெளியேறிவிட்டார்கள் எனவே நானும் அப்படிச் செய்வதுதான் முறை. அவர்களை விட்டுவிட்டுத் தனியே கடலை சாப்பிட விரும்பவில்லை. ஒருவகுப்பின் ஒற்றுமையைக் குலைக்க விரும்பவில்லை.'' என்று சற்றுத் துணிவாகவே கூறிவிட்டேன்.

பரமானந்த ஆசிரியர் பொறுப்பாரா? அதுவும் அந்காலத்தில் (1933ஆம் ஆண்டில்) ஒரு பெரிய — புகழ்

பெற்ற — தலைமையாசிரியரிடம் இப்படிக் கூறமுடியுமா? "உம். அவர்கள் செய்தால் நீயும் அப்படிச் செய்ய வேண்டுமா?" என்று கேட்டுவிட்டுத் தான் வைத்திருந்த பிரம்பால் அடித்துவிட்டார். கொஞ்சம் மோசமான முறையில் தண்டித்துவிட்டார். அதுவரை அப்படி அவர் எனக்கு அடித்தது கிடையாது. எனவே என் உள்ளம் வேதனைப் பட்டது. உண்மையைச் சொன்னதற்காக அடியா? என்று என்மனம் துன்பத்தில் ஆழ்ந்தது. அவர் "வகுப்புக்குப் போய் இரு" என்று கட்டளையிட்டார். நான் புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போய்விட்டேன்.

என்வீடு பாடசாலைக்குப் பக்கத்திலேதான் இருந்தது. நான் வீட்டுக்குப் போனதும் எனது தாயார் "என்ன சங்கதி?" என்று கேட்டார். என்னால் ஒரு வார்த்தைகூடச் சொல்ல முடியவில்லை. ஓ! என்று அழுதுவிட்டேன். என் பின்னால் என்னுடன் படித்த இரத்தினம் என்ற நண்பரும் வந்திருந்தார். அவரும் கடலை சாப்பிடாமல் ஆசிரியரால் தண்டிக்கப்பட்டவர். ஓரளவில் எனது உறவினருங்கூட. அவர் எனது தாயாருக்கு நிகழ்ந்த எல்லாவற்றையும் கூறித் தலைமையாசிரியர் அடித்துவிட்டார் என்றும் கூறினார்.

விதவையான என் தாய் — ஒரேஒரு மகனைப் பெற்ற என் தாய் — சிறிது ஆத்திரமடைந்தாலும் பரபரப்பு எதுவுமின்றி என்னை அணைத்து, "பயப்படாதே, உந்த ஒரு பள்ளிக்கூடம்தான் இந்த நாட்டில் இருக்கிறதா? நீ விரும்பிய எந்தப் பள்ளிக்கூடத்துக்காயினும் சென்று படி. செலவைப் பற்றி யோசிக்காதே. அதற்கு வேண்டியவற்றை நான் செய்வேன்" என்று கூறினார். நான் ஆறுதல் அடைந்தேன்.

பின்னர் மூன்று நாட்களாக நான் பாடசாலைக்குச் செல்லவில்லை. எனது உடன் மாணவர்களாகிய இரத்தினம், கதிரவேலு என்ற இருவரும் போகாமல் நின்றுவிட்டனர்.

மூவரும் ஆலோசனையில் இறங்கினோம். செய்வதறியாது திகைத்தோம். இந்த நேரத்தில் ஏற்கெனவே பரமானந்தர் அவர்களிடம் படித்து, பின்னர் ஆசிரியர்களாகி குப்பிழான், விக்கினேஸ்வர வித்தியாசாலையில் படிப்பித்த ஆசிரியர்கள் கோ. நமசிவாயம், வ. பொன்னுக்குமாரு என்ற இருவரும் எமக்குத் துணைசெய்ய முன்வந்தனர். கோ. நமசிவாயம் ஆசிரியர் என் உறவினர். குப்பிழான் பாடசாலையில் தலைமை ஆசிரியராக இருந்தவர். பொன்னுக்குமாரு அப்போது திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையிற் படித்துக்கொண்டிருந்தார். எனவே இருவரும் ஆலோசித்து எங்கள் மூவரையும் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிற் சேர்ப்பது என்று முடிவு செய்தனர். ஆசிரியகலாசாலைச் சூழல் பண்டிதமணி, கைலாசபதி, சுவாமிநாதன் என்பவர்களது பெருமை, அங்கேயுள்ள சாதனா பாடசாலை (முத்துத்தம்பி வித்தியாசாலை)யின் கல்வியின் சிறப்பு இவற்றை எல்லாம் அவர்கள் எங்களுக்கு எடுத்துக்கூறி விடுதியில் தங்கிப் படிப்பது செலவானாலும் அதுவே தக்கது என்று புத்திமதியும் சொன்னார்கள். நாங்கள் மூவரும் உடன்பட்டோம்.

எனினும் விடயம் அத்தோடு முடிந்துவிடவில்லை. எனது தாயாரும் மற்ற நண்பர்களது தந்தையரும் (சேட்டிவிக்கற்) விடுகைப் பத்திரம் கேட்பதற்காக ஆசிரியர் பரமானந்தர் அவர்களிடம் போனபோது அவர் பல காரணங்கள் கூறி அலக்கழிக்கத் தொடங்கிவிட்டார். விடுகைப் பத்திரம் பெறுவதே பெருஞ் சங்கடமாகப் போய்விட்டது. கடைசியாக எனது விடுகைப் பத்திரத்திலும், இரத்தினம் என்ற நண்பரது விடுகைப்பத்திரத்திலும் ''ஆசிரியருக்கு அடக்கமில்லாத (கீழ்ப்படிவில்லாத) மாணவன்'' என்று எழுதியே தந்துவிட்டார். உள்ளதை ஒளியாமல் ஓரளவு துணிவுடன் கூறிய எனக்கு இப்படி ஒரு பரிசு தலைமையாசிரியரால் தரப்பட்ட நிகழ்ச்சி என் அடிமனதில் நெடுநாளாய் உறைந்து கிடந்தது. இது இலக்கிய வாழ்க்கையிலும் எனக்கு ஏற்பட்டது. அதனால் அந்தப் புயலைக்கண்டு அஞ்சுவதே இல்லை.

எங்கள் மூவரையும் ஆசிரியர் கோ. நமசிவாயம் அவர்கள் 1933ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைக்கு அழைத்துச் சென்று அங்கே இருந்த தலைமையாசிரியர் நடராசா அவர்களிடம் நிலைமையை விளக்கிக் கூறிச் சேர்க்கும்படி கேட்டுக்கொண்டார். அவர் புன்சிரிப்போடு சிறியவனுகிய என்முதுகில் தட்டி, படித்து முன்னேறவேண்டும் என்ற ஆசியோடு "வகுப்பில் போய் இரு" என்று கட்டளை யிட்டார். மூவரும் திருநெல்வேலி சாதனு பாடசாலையிற் சேர்ந்தோம்.

நான் திருநெல்வேலியில் சேர்ந்த அன்று காலை எனது தாயார் என்னை அழைத்து, "மகனே! பக்கத்திலே பாடசாலை இருக்க ஏழெட்டு மைல் தூரமுள்ள பாடசாலைக்கு உன்னை அனுப்புகிறேன். சாப்பாட்டுக்கே ஏழரை ரூபா மாதம் கட்டவேண்டும். வேறு செலவுகளும் உண்டு. எங்கள் வாழ்க்கைநிலை உனக்குத் தெரியும். யாரும் உதவி செய்யமாட்டார்கள். அவமரியாதையோடு பாடசாலையை விட்டுப் போகிருய். இந்தக் கிராமத்தில் நாங்கள் இருக்கும் நிலையில் உன்னைப் படிக்கவிடமாட்டார்கள். சுருட்டுத் தொழிலுக்கோ — கடையில் வேலைக்கோதான் அனுப்புவார்கள். நான் அப்படிச் செய்யவில்லை. என் ஒரேஒரு ஆசை நீ படிக்க வேண்டும். நன்ருகப் படிக்கவேண்டும். திருநெல்வேலியில் இருந்து திரும்பி வரும்போது நானும் ஒரு ஆசிரியன் என்ற பெயரோடு திரும்பிவரவேண்டும். அதைக் கேட்டு நான் பெருமைப்படவேண்டும். வெறும் முசுப்பாத்திகளில் காலத்தை வீணுக்காதே போய்வா" என்று புத்திமதி கூறினுர்.

என் அன்னையின் புத்திமதி, அவர் சொல்லிய வார்த்தைகள் அந்த எளிய வாழ்க்கையிலும் அவரது துணிவு. இன்றும் அதை நினைக்க என்நெஞ்சு இனிக்கிறது. கண்களில் கண்ணீர் வருகிறது.

## 9. என் அனுபவம் விரிகிறது

தந்தைதாய் அற்ற அநாதர்கள்
    தங்கி யிருந்த விடுதியில்
பந்துகள் ஆடியும் பாடியும்
    படிப்பினில் மூழ்கியும் வாழ்ந்தனன்
எந்தன் அனுபவம் விரிந்தது
    இலக்கிய தாகம் மிகுந்தது
சிந்தையிற் பற்பல கனவுகள்
    சிறி எழுந்தன; என்சொல்வேன்

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை, இதை எழுதிக்கொண்டிருக்கும் நேரத்தில், தமிழிற் பெரிய கல்லூரியாய், சைவ அநாதர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் தங்கும் விடுதியுடையதாய்ப் பாரிய கட்டிடங்கள் கொண்டதாய் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் நடுநாயகமாய் விளங்குகின்றது. ஆனல், நான் படித்தபோது (1933-34ஆம் ஆண்டுகளில்) இந்தக் கட்டிடங்கள் இல்லை. இப்போதிருக்கும் இடத்திற் பாடசாலையே இல்லை. அப்போதைய பாடசாலை பிரபல வைத்தியர் குமாரவேலு அவர்களின் வீட்டுக்கு முன்னல் தெருவோரத்தில் ஓரளவு சிறிய பாடசாலையாக — திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை மாணவர் படிப்பித்துப் பழகும் பாடசாலையாக — இருந்தது.

பாடசாலை சிறிதாக இருந்தாலும் படிப்பித்த ஆசிரியர்கள் திறமைமிக்கோர். தலைமை ஆசிரியர் நடராசா கண்டிப்பு மிக்கவர்; எந்தப் பாடங்களையும் படிப்பிக்க வல்லுநர். அப்படியே அருணசலம், ஆழ்வாப்பிள்ளை, சுப்பையா, கதிர்காமு என்ற ஆசிரியர்களும் திறமை மிக்கவர்களே. எனவே யாழ்ப்பாணத்தின் எல்லாத் திசைகளில் இருந்தும் மாணவர்கள் உயர் வகுப்பிற் கற்பதற்காக வந்து சேர்ந்தனர். அந்தக் காலத்திலேதான் சைவவித்தியா விருத்திச் சங்கம்,

திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை பெருமைப்படும்படி நடாத்தியதோடு தாய் தந்தை மற்ற அநாதைச் சிறுவர்களுக்கான விடுதியொன்றையும் ஆரம்பித்திருந்தது. இந்த விடுதி ஆசிரிய கலாசாலையை அடுத்திருந்தது. ஏதோ விடுதி கலாசாலை என்று பெயர்பெற்றிருந்ததே ஒழிய அவை வெறும் தகரக் கொட்டில்கள். அந்த ஆசிரியகலாசாலையைப் பற்றி அடுத்துவரும் அத்தியாயங்களில் சொல்ல இருப்பதால் — அதை விட்டுவிட்டு — அநாதைச் சிறுவர்களைப் பற்றியும் அவர்களோடு நான் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றியும் இங்கு எழுதுகிறேன்.

இந்த விடுதியில் பதினொன்கு பிள்ளைகள் இருந்தார்கள். திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைக்குப் பக்கத்தே இருந்த டாக்டர் கணபதிப்பிள்ளை என்பவரே இந்தப் புண்ணியத் தொண்டை ஆரம்பித்து பிறகு சை. வி. விருத்திச் சங்கத்தாரிடம் ஒப்படைத்தார்.

அந்தப் பதின்நான்கு பிள்ளைகளின் சோக வரலாறு பல நாவல்கள் எழுதப் போதும்; ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிக் கதை.

இதோ ஒரு சிறுவனின் கதை; மன்னாரிலே இருந்து வந்த சிறுவனின் கதை. அந்தச் சிறுவனின் தகப்பன் மன்னாரிலே சிறு உத்தியோகத்தில் இருந்தார். திடீரென்று இறந்துவிட்டார். தாயாரும் அந்தச் சிறுவனும் அநாதையாகிவிட்டார்கள். சிறுவன் அங்குள்ள ஒரு பாடசாலையில் 5ஆம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான். யாழ்ப்பாணம், காரைநகரைச் சேர்ந்தவர்கள் என்பதும் தமது இனசனம் பல ஊர்களில் இருக்கிறார்கள் என்பதும்தான் அந்தச் சிறுவனுக்குத் தெரியும்.

ஒருநாள் மன்னார்ப் பகுதிப் பாடசாலைகளைப் பார்வையிட — பரீக்ஷிக்க — வித்தியாதரிசி சதாசிவ ஐயர் போயிருந்

தார். அவர் இந்தச் சிறுவன் இருந்த வீட்டின் அடுத்த வீட்டில் தங்கியிருந்தார். சிறுவன் காலை மாலை ஐயர் அவர்கள் ஏவிய சிறு வேலைகளைச் செய்து கொண்டிருந்தான். ஐயருக்கு அந்தப் பையன்மேற் பிரியம் ஏற்பட்டு விட்டது. அவர் அவனைப் பார்த்து ''உனக்குப் படிக்க ஆசையாய் இருந்தால் என்னேடு வா நான் உன்னைப் படிப்பித்து ஆசிரியர் ஆக்குகின்றேன்'' என்ருர்.

எங்கே சந்தர்ப்பம் வரும் என்று காத்துக்கொண்டிருந்த சிறுவன் தன் தாயையும் கூட்டிச் கொண்டு யாழ்ப்பாணம் புறப்பட்டுவிட்டான். சதாசிவ ஐயர் அவர்கள் தம் சொற்படியே அந்தப் பையனைச் சைவ வித்தியா விருத்திச் சங்க மனேஜர் இராசரத்தினம் அவர்களிடம் ஒப்படைத்தார். அவர் அவனைத் திருநெல்வேலி அநாதை விடுதியில் விட்டு முத்துத்தம்பி வித்தியாசாலையிற் படிக்கச் செய்தார். தாயாரையும் அப்பாடசாலைக்குப் பக்கத்தே குடியமர்த்திஞர். அந்தச் சிறுவன்தான் அங்கேயிருந்த பதின்ஞன்கு பேரிலும் சிறியவன். எல்லோரும் ஆதரவு காட்டுவார்கள். கிணற்றிலே தண்ணீர் அள்ள முடியாதவன். ஆகையிஞலே குளிக்க வார்ப்பார்கள். 'மன்ஞர்ப் பையா, மன்ஞர்ப் பையா' என்று செல்லமாய் அழைப்பார்கள். அந்தச் சிறுவன் பின்னேரம் தாயாரிடம் போய்த் தங்குவான். மாலை விடுதிக்குத் திரும்புவான். தாயாரைக்கூட எனக்குத் தெரியும். சில சமயங்களில் அவர் எனச்குத் தோசைகூடத் தந்திருக்கிருர்.

இந்தச் சிறுவன் அங்ரே படித்து S. S. L. C. சித்தி எய்தி சைவாசிரிய கலாசாலையிற் சேர்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியராஞன்.

இவ்வளவு காலமும் படிக்குஞ் செலவை சதாசிவஐயரே கொடுத்தார். அதுமாத்திரமல்ல தீபாவளி, பொங்கல், வருஷப்பிறப்பு இவற்றிற்குத் தன் மக்களைப் போலவே வேட்டி சால்வை வாங்கிக் கொடுத்தார், தாயாருக்குக கூட உதவிஞர்.

சைவ வித்தியா விருத்திச் சங்க மனேஜர் இந்தச் சிறுவன்மீது அதிக அக்கறை காட்டி ஆசிரியராக்கினூர்.

இப்போது அவர் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள உயர்தரக் கல்லூரி ஒன்றில் தமிழ்ப் பிரிவுக்குத் தலைமையாசிரியராய் இருக்கிருர். நல்ல பொதுத் தொண்டுகள் செய்கிருர். கல்லூரியை வளர்க்க முன்னின்று உழைக்கிருர்.

இந்த ஆசிரியர் நாற்பது வருடங்களின் பின் எங்கள் வீட்டுக்கு வந்தார். பிள்ளைகளின் சாதகங்களைப் பார்த்தார். கைரேகைகளைப் பார்த்து வரும் காலத்தைப் பற்றிச் சொன்னூர். பழைய வரலாறுகளைச் சொல்லி அக மகிழ்ந்தார்.

அதோடுமட்டுமன்று எனது மணிவிழா 10–11–76இல் குரும்பசிட்டியில் நடந்தபோது முன்வரிசையில் என் கண் காண அமர்ந்திருக்கிருர். நான், என்னை ஆளாக்கி ஆசிரியராக்கி, உத்தியோகம் தந்து உதவிய, சைவ வித்தியா விருத்திச் சங்க மனேஜர் அவர்களை நினைகூர்ந்து 'என்தன் வாழ்வும் வளமும் நிறைவும் அவர் தந்த பிச்சை' என்று உணர்ச்சிவசப்பட்டு கூறுகிறேன். என் கண்களில் நீர் மல்குகிறது. நேராக அந்த ஆசிரியரைப் பார்க்கிறேன். அவர் கண்ணுல் நீர் ஒழுகுகிறது.

இந்த ஆசிரியர் மாத்திரமல்ல அப்போது அந்த அநாதை விடுதியில் இருந்த பதினன்கு பேரில் பன்னிரண்டு பேர் ஆசிரியர்களாக நல்ல நிலையில் இருக்கின்றனர்.

நாற்பது வருடங்களுக்கு மேலாகியும் அவர்கள் பெயரை — ஊரை — இப்போதிருக்கும் நிலையை நான் மறக்கவில்லை. ஏனெனில் அவ்வளவு ஒட்டி, உறவாடி வாழ்ந்தோம், பழகினேம், விளையாடினேம்.

அவர்களும் என்னை மறக்கவில்லை. என் வளர்ச்சியை — புகழைக் கண்டு மகிழவே செய்தார்கள்.

இதோ ஒரு கடிதம் — எனது அறுபதாம் ஆண்டு நிறைவு விழா பற்றி பத்திரிகைகளில் வந்த புதினத்தைப் பார்த்து விட்டு அக்காலம் அந்த விடுதியில் இருந்து படித்த ஒரு அன்பரின் கடிதம் — 2 வருடங்களுக்குப் பின்பு அவர் எழுதிய கடிதம்; அந்த நீண்ட கடிதத்தின் முக்கியமான பகுதிகள் இவை.

முருகன் துணை

பரமு குட்டித்தம்பி
கரவெட்டி கிழக்கு
9-10-76

இரசிகமணியே, இலக்கியச் செல்வமே,
என் இதயத்துள் என்றும் நிறைந்துள்ள அன்பரே,

அன்று திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஒன்ருகப் படித்தோம். இருவரும் வெவ்வேறு வகுப்பில், நீங்கள் இரண்டு வகுப்புக் கூடப் படித்தீர்கள்.

எட்டு முழக் கதர் வேட்டி, கதர் சேட், ஒரு மெலிந்த உருவம். சகமாணவர்கள் உம்மைச் செந்தி என்று அழைப்பார்கள். அப்போது எனக்கு என்னவோ என்னை அறியாமற் கோபம் வரும்.

அப்போது நீங்கள் மாணவர் நேசன் என்ற பத்திரிகையின் ஆசிரியர்; இப்போது இலக்கியச் செல்வம். எல்லாம் வல்ல இறைவன் தமிழ் இனப் பண்பு அழியாவண்ணம் தோற்றுவித்த படைப்புக்களில் தாங்களும் ஒருவரே....

பத்திரிகைகளில் தங்கள் நாமத்தை இரசிகமணி கனக. செந்திநாதன் என்பதையும், பண்டிதமணி சி. க. என்பதையும் காணும்போதும் தங்கள் விடயத்தைக் காணும்போதும் வாசித்துப் பேரானந்தம் அடைவேன்.

தங்களைக் கௌரவிக்கும் கோலாகல விழாவை வாழ்த்தி இக் கடிதத்தை எழுதுகிறேன். என்னைத் தாங்கள் அறியா விட்டாலும் என் இதயத்தில் என்றும் நீங்கள் இருப்பீர்கள்

தங்களன்புள்ள
பரமு குட்டித்தம்பி

இக் கடிதத்தைக் கண்டு நான் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தேன் என்று வார்த்தைகளில் சொல்லமுடியாது.

ஒரு அன்பரின் வாழ்க்கை வரலாற்றோடும் இன்னொரு நண்பரின் கடிதத்தோடும் இந்த அத்தியாயத்தை முடிக்கிறேன்.

ஆனால், கரவெட்டி. துன்னாலை, நெடுந்தீவு, மன்னார், புங்குடுதீவு, குப்பிளான், என்ற ஊர்களில் இருந்து வந்து படித்த அந்தச் சிறுவர்கள் எல்லோரும் நல்ல நிலைமை அடைந்தார்கள். பணம் கட்டிப் படித்த அன்பர்கள்கூட ஒரு வித்தியாசமும் காட்டாமல் பழகினார்கள். இத்தச் சூழ் நிலையில் 1943ஆம் ஆண்டு நான் S. S. L. C. யில் சித்தி அடைந்தேன். வீடு திரும்பினேன்.

இடைப்பிறவரல்

இந்த அத்தியாயத்தை அடுத்து இடைப்பிறவரலாக சில வார்த்தைகள். இதை வாசிக்கும் மாணவர்களையும் பெற்றோர்களையும் பார்த்து சொல்கிறேன். எங்கள் காலத்தைப் போல கிராமங்கள் இப்போதில்லை. அவை கட்டிடங்களாக மாறிவிட்டன. ஒரு எட்டு வயசிலேயே சிறுவர் பைசிக்கிள் ஓடுகின்றனர். படம் பார்க்கின்றனர். கடிதப்

போக்குவரத்தும் செய்கின்றனர். கிட்டியடித்தல், கிளித்தட்டு மறித்தல், போர்த்தேங்காய் அடித்தல், ஊஞ்சல் ஆடுதல், கெந்தி அடித்தல் ஆகியவை மறைந்து பந்து, கிறிக்கற் அடித்தலும் நவீன விளையாட்டுக்களும் கிராமத்திற் புகுந்து விட்டன. சிறுவர்கள் ஆசிரியர்களுக்குப் பயப்படுவதில்லை. பெற்றோரையும் மதிப்பதில்லை. இந்த நிலையில் படிப்பதற்கு விடுதியிலும் விட்டால்...

அக்காலத்திலே எஸ். எஸ். எல். சி. சித்தி எய்தினல் ஏதாவது உத்தியோகம் — தமிழ் ஆசிரியர் உத்தியோகமாவது வரும் என்ற நம்பிக்கை. இப்போது எப்படி படிப்பித்தாலும் வேலையில்லை என்ற நம்பிக்கை இரப்பு .....

அரசியல் நெருக்கடி, உத்தியோக நெருக்கடி, கெடுக்க என இருக்கும் சந்தர்ப்பங்கள், படி, படி எனப் பெற்றோர் நெருக்கடி, ரியூசன் தொந்தரவு இவற்றை எல்லாம் மாணவர்கள் சிந்திக்கின்றார்கள். இந்தக்காலச் சிறுவர் சிறுமியரால் என்ன செய்வதென்றே யோசிக்க முடியவில்லை. அக்காலத்தில் அப்படியல்ல.

அநாதைச் சிறுவர்களையே ஒரு வேலையும் செய்வியாமலும் யாதொரு கட்டுப்பாடுமில்லாமலும் மனேஜர் வளர்த்தார். ஒவ்வொரு வீட்டிலும் நடப்பதைப் பார்த்து அக்கால அநாதைகளை நடாத்திய முறையைக் கண்டு அழுதிருக்கிறேன். பிரபல சிறுகதை எழுத்தாளர் சு. இராசநாயகன் 'ஈழநாடு' (பத்திரிகை) நடாத்திய நாவல் போட்டிக்காக எழுதிய பிரயாணி என்ற நாவலை — சிறுவர்களை அடிமைபோல நடாத்துவது — வாசித்து இரத்தக்கண்ணீர் விட்டிருக்கிறேன். அப்போதுதான் எங்கள் மனேஜரின் பெருமை தெரிந்தது.

ஆனாலும் பத்துப்பன்னிரண்டு வயதுக்குமேல் அதிக கட்டுப்பாடும் கூடாது அதிக சுதந்திரமும் கூடாது. விடுதியில் வசிக்கும் மாணவர்களுக்குச் சிறிது கண்டிப்பும் வேண்டும். பெரிய மாணவர்களைப் பார்த்துச் சிறியவர்களும் கெட்டுப்போவார்கள். சிலர் துர்நடத்தைகளுக்கு ஆட்படுவார்கள். எல்லோரும் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய காலம் இது.

எத்தனை பேருக்கு நான் எஸ். எல். சி. சித்தியடைந்ததில் பெரும் சந்தோஷம். மகாதேவ வித்தியாசாலைக்குச் சென்ற மூவருமே சித்தியெய்திவிட்டோம். இரத்தினம் என்ற நண்பர்—சென்ற நாற்பது வருடகாலமாக எனது வாழ்வில் ஒருவிதத்திலும் இணைபிரியாத நண்பர் - போயிட்டி என்ற ஊரிலே வேலைபார்க்கவும் தொடங்கிவிட்டார்.

நான் இனி என்னசெய்வதென்று யோசித்தேன்: இந்தக் காலகட்டத்தில் ஈழகேசரி நா. பொன்னையா அவர்களின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. இதற்குமுன் நான் அவரைத் தூரத்தே கண்டிருக்கிறேன். நெருங்கிப் பழகியதில்லை. அவர் என் வாழ்விலும், எழுத்துத் துறையிலும் முக்கிய பங்கெடுத்தவர். ஈழத்து இலக்கியத்துக்குப் பெருந்தொண்டு செய்தவர். அவரது பெயர் அழியக்கூடாது அடுத்த அத்தியாயத்தில் அவரைச் சந்தியுங்கள்.

## 10. 'ஈழகேசரி' நா. பொன்னையா அவர்கள்

''பாலர்க்கு வேண்டும் பழமொழி பாட்டு
பக்குவ மான தமிழிற் கவிதை
சாலச் சிறந்தவர் கட்டுரைக் கோவை
தமிழில் மலர்ந்த சிறுகதைச் செல்வம்
கூலிக்கு மாரடிக் காத முயற்சி
குணம்பல கொண்டு மலர்ந்த அரும்பு
போலிச் சரக்கல்ல; ஆண்மையில் வாழ்ந்த
பொன்னைய வள்ளல் அளித்து மறைந்தான்''

கவிஞர் சோ. தியாகராசன் (சோதி) அவர்களது மேற்படி கவிதை 'ஈழகேசரி' நா. பொன்னையா அவர்களை ஓரளவு படம்பிடித்துக் காட்டுகிறது. ''போலிச் சரக்கல்ல; ஆண்மையில் வாழ்ந்த பொன்னைய வள்ளல்'' என்ற தொடரைக் கவிஞர் சரியானபடி போட்டிருக்கிறார். அட்சரலட்சம் பெறும் அந்தத் தொடர் ஆணித்தரமானது; அர்த்த புஷ்டியுள்ளது.

சன்மார்க்க சபையின் தந்தையெனக் கொண்டாடப்படும் திரு. நா. பொன்னையா அவர்கள் வாழ்க்கையில் எவ்வளவோ மேடுபள்ளங்களைக் கண்டவர், வறுமையின் கோரப் பிடியிற் சிக்கித் தத்தளித்தவர். பணம் வந்து சேர்ந்தபோது அதைச் சேர்த்து வைத்துக் காக்கும் பூதம் போல் இராமல் எத்தனையோ கல்லூரிகளுக்கும், எவ்வளவோ பொதுநல ஸ்தாபனங்களுக்கும், கொள்கை வழுவாத அரசியல் வாதிகளுக்கும், துன்பப்பட்ட கல்விமான்களுக்கும், மாணவர்களுக்கும், புலவர்களுக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்தவர். அதைத்தான் கவிஞரது 'வள்ளல்' என்ற சொல் குறிப்பிட்டுக்காட்டுகின்றது.

'ஜெயமுண்டு பயமில்லை மனமே' என்ற பாரதி வாக்கையும் 'வானந்துளங்கிலென் மண்கம்பமாகிலென்' என்ற அப்பர் பாடலையும் ('ஈழகேசரி'த் தலையங்கத்தின் மேலே

அதன் குறிக்கோளாக இந்தப் பாடல் நெடுங்காலம் வெளிவந்தது.) அடிக்கடி உச்சரிக்கும் திரு. நா. பொன்னையா அவர்களின் மனத்திண்மை யாருக்குமே இருந்ததில்லை. 'தன்னால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை' என்ற மனப்பான்மை அவருடையது. வெறும் வாய்ச்சொல் மலிந்த அரசியல் வாதிகளுங் குறிக்கோள்களை மேடையில் மட்டும் உளறும் சொற்பொழிவாளர்களும், கையாற் பணம்விடாத தமிழ்த் தொண்டர்களும் நிறைந்த இந்த ஈழநாட்டிலே தனிமனிதனாய் நின்று அவர் சாதித்த சாதனைகள் எண்ணிறந்தவை; ஏடு கொள்ளாதவை. 'கூலிக்கு மாரடிக்காத முயற்சி, குணம்பல கொண்டு மலர்ந்த அரும்பு போலிச் சரக்கல்ல; ஆண்மையில் வாழ்ந்த பொன்னைய வள்ளல்' என்ற கவிஞரது வரிகளின் ஆழம் அவைதான்.

ஆங்கில மோகம் தலைவிரித்தாடிய காலத்திலே, '1930ஆம் ஆண்டில் தமிழிலே அரசியலைச் சொல்ல முடியுமா? சிறுகதை, நாவல், கட்டுரை எழுதமுடியுமா? தமிழ்ப் பத்திரிகையை வாங்குபவர் யார்? அதிலும் வாரப் பதிப்பில் என்ன இருக்கப்போகிறது?' என்றெல்லாம் பெரியவர்கள் அறிஞர்கள் உச்சரித்த காலத்திலே ஈழகேசரி என்ற வாரப் பத்திரிகையை யாருடைய துணையுமின்றித் தொடங்கி, மின்சார வசதிகளற்ற அந்நாளிலே கையாலே சுழற்றி அச்சடித்துப் பிழை ஒன்றும் இல்லாமல், இலக்கியம், சமயம், அரசியல் மூன்றையும் மூன்று கண்ணென மதித்து இருபத்தைந்து வருடம் பெரும்பொருள் நட்டத்துடன் நடாத்தினாரே, அது அவரது வரலாற்றுக் காவியம். ஈழத்துத் தமிழ் வளர்ச்சியிலே 'ஈழகேசரிக் காலம்' என்று எழுத்தாளர்கள் பெருமைப்படுகிறார்கள். அது பொன்னையா அவர்களின் இரத்தத் துளி; நெற்றி வியர்வை; நீண்ட பெருமூச்சு.

தமிழ்ச் சாகியத்தாரின் தேவைகளை, நோக்கங்களைப் பகிரங்கப் படுத்துவதற்கு அச் சாகியத்தாருக்கென ஒரு

தேசிய ஆங்கில வெளியீடு இல்லாக் குறையை நன் குணர்ந்து, தாம் நடாத்தி வந்த தமிழ்ப் பத்திரிகையால் ஏற்பட்ட பொருள் நட்டத்தையும், சிரமத்தையும் பொருட் படுத்தாது ஆசிரியப் பேரறிஞரும் அரசியல் ஞானியுமா கும், திரு. S. H. பேரின்பநாயகம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'கேசரி' (Kesari) என்னும் ஆங்கில வார இதழை அச்சிட்டுச் சிலகாலம் நடாத்தினர்.

1939ஆம் ஆண்டுக்கு முன்னே ஈழத்துப் பாடசாலை களில் மேல் வகுப்புக்களிலே படித்த புத்தகங்களில் இருந்த பாடங்கள் எங்கள் மாணவர்க்கு எட்டுணையும் பொருந் தாதவை. குற்றால நீர் வீழ்ச்சியும், மேட்டூர் அணைக்கட்டும். தளவாய் அரியநாயக முதலியாரும் தலை வேதனையைக் கொடுத்தன. நித்தில வாசகமும், பூந்தமிழ் வாசகமும் பவனி வந்தன. யுத்த காலத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு பொன்னையா அவர்கள் பாடப் புத்தகங்களை வெளியிட்டார்கள். ஐந்து வருடங்களுக்கிடையில் ஐம்ப துக்கு மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டு ஈழம், பாடப் புத்தக விடயத்தில் தமிழ் நாட்டை எதிர்பாராத நிலையை உண்டாக்கினர்கள். பாலபோதினி, இலக்கிய மஞ்சரி, தமிழ் மஞ்சரி, உரைநடைச் சிலம்பு, உபபாட நூல்கள் என அவர் வெளியிட்ட துணிவைக் கண்டு ஈழம் பிரமித்தது. அவரது இந்தத் துணிவுதான் பிற வெளியீட்டார்களுக்கும் துணிவைக் கொடுத்தது.

பாடப்புத்தக வெளியீட்டால் வரும் இலாபத்தை, பொன்னையா அவர்கள் பத்திரிகை வெளியிடுவதற்கும் நல்ல இலக்கண, இலக்கிய நூல்களை வெளியிடுவதற்கும் செலவிட்டார். தொல்காப்பியம் முழுவதையும் (கணே சையர் உரை விளக்கக் குறிப்புக்களுடன்) அழகாகப் பதிப் பித்தார். சிவசம்புப் புலவர் பிரபந்தத் திரட்டு, வசந் தன் கவித்திரட்டு, ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம், நாவலர் நினைவு மலர், கல்வி மலர் என அவை வெளி யிட்டவை ஒவ்வொன்றும் நின்று நிலைபெறக் கூடியவை. ஆனபடியாலேதான் அவர் 'தமிழ்த் தொண்டர்' பொன் னையா ஆனர்.

அரசியலில் அவர் தேசியவாதி. வகுப்புவாதத்தை அவர் எப்போதும் ஆதரித்ததில்லை. பிரபல அரசியல் வாதிகளெல்லாம் வகுப்புவாதச் சூறுவளியிற் சிக்குண்டு போர்க் குரல் எழுப்பியபோதெல்லாம் தேசிய வாதிகளுக்கு உறு துணையாய் நின்றவர் திரு. நா. பொன்னையா அவர்களே. அதனால் அவர்கள் பட்ட இன்னல்களோ பல. அவருடைய மன வைராக்கியம் அந்த இன்னல்களையெல்லாம் துச்சமாக மதித்தது.

சைவவித்தியாவிருத்திச் சங்கம், மலையாளப் புகையிலைக் கூட்டுறவுச் சங்கம், மயிலிட்டிக் கிராமசங்கம், பண்டக சாலை யூனியன், சன்மார்க்கசபை, குரும்பசிட்டி ஐக்கிய நாணய சங்கம், ஐக்கிய பண்டகசாலை, திருமகள் அழுத்தகம், தனலக்குமி புத்தகசாலை, வட—இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் என்ற பத்து ஸ்தாபனங்களுக்குமேல் அவர் முக்கிய பதவிகளை வகித்துப் பம்பரம்போலச் சுழன்று செய்த தொண்டிருக்கிறதே, அது ஒரு மகாபாரதம் ஆம். ஒவ்வொன்றும் அவர் தொண்டால் மிளிர்ந்தன. எனினும் இன்றும் அவர் புகழை உயர்த்தி ஈழம் முழுவதும் பரவச் செய்த பெருமை சன்மார்க்கசபைக்கே உரியது.

'ஈழகேசரி' நா. பொன்னையா அவர்கள் தான் பிறந்த குரும்பசிட்டி நன்கு வாழப் பெரும்பணி புரிந்தார்—அவர் சன்மார்க்கசபையை ஸ்தாபித்தவர்களில் முக்கியஸ்தராகத் திகழ்ந்தார். சமயம், இலக்கியம், கலை, கிராமத்தொண்டு என்ற நான்கு துறைகளிலும் சபைக்குத் தலைமை தாங்கி ஏறக்குறைய இருபது வருடம் பாடுபட்டுக் கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தியாக்கச் சபையுடன் ஒன்றி உழைத்தார். தான் கனவுகண்ட மாபெரும் தொழிற்சாலைகளோடு கூடிய ஸ்தாபனமொன்றுக்காக வாங்கிய பெரு நிலப்பாப்பில் மத்திய கல்லூரி ஒன்றை நிறுவி அரசாங்கத்திடம் ஒப்படைத்தார்.

# 11. குரும்பசிட்டி சன்மார்க்க சபை

நன்னெறி கொண்ட பொன்னையை வள்ளல்
  நாளும் காத்திட நீ
பன்னல மான பல தொண்டு செய்துமே
  பாரில் ஓங்கு கவே
பொன்னுக் குமரனும் சுந்தர மூர்த்தியும்
  போற்றித் துணை நிற்க
பொதுநல சேவைகள் பலபல செய்துநீ
  புகழில் ஒங்கு கவே.

திரு. நா. பொன்னையா அவர்கள் செய்த நல்லபல தொண்டுகள் இக்கால இளம் உள்ளங்கள் அறியாமல் மறைந்துவிட்டன. 1951இல் அவர் மறைந்தார். ஈழ கேசரிப் பத்திரிகை 1957இல் நின்றுவிட்டது. 1977 இல் அவர்களது திருமகள் அழுத்தகமும் கைமாறிவிட்டது. அவர் பாடுபட்டு ஆக்கிய வைத்தியசாலை பறிபோய் விட்டது. தமது நிலத்திலே அவர் கட்டிக் கொடுத்த மத்திய கல்லூரிக்கு அவர் பெயர்கூட இடப்படவில்லை. அவரிடம் பொருள் வாங்கிய ஸ்தாபனங்கள் — கல்லூரிகள் அவர் பெயரையே மறந்துவிட்டன.

ஆனல் ஈழத்து எழுத்தாளர் சமூகம் ஈழகேசரியின் தொண்டையும் திரு. நா. பொன்னையா அவர்களின் பெயரையும் மறந்துவிடவில்லை. (ஒரு சிலர் அந்தப் பொற் காலத்தைக்கூட மறக்கடிக்க முயலுகிருர்கள்.)

யார் மறந்தாலும் மறவாதுவிட்டாலும் அவர் பெயர் சொல்ல குரும்பசிட்டி; சன்மார்க்க சபை இருக்கிறது. சென்ற இருபத்தைந்து வருடமாக அவர் நினைவுநாளைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

உலகியலிலும் மெய்ந்நெறியிலும் இயன்றளவு தொண்டு செய்ய இச்சபை 1934ஆம் ஆண்டு விஜயதசமி அன்று ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தே இருந்த பல

ஆசிரியர்களின் பின்னணியுடன் திரு. நா. பொன்னையா அவர்கள் இதைத் தொடங்கினார்கள். சென்ற நாற்பது ஆண்டுகளாகச் சன்மார்க்க சபை செய்த தொண்டு அளவிடற்பாலது. (அதன் 30 ஆண்டுச் சேவையின் மகத்துவத்தை அறிய விரும்புபவர்கள் 1964ஆம் ஆண்டு வெளிவந்த அதன் அரிய வெளியீடான 30ஆவது ஆண்டு நிறைவு மலரைப் பார்த்து அறியலாம்) இந்த அத்தியாயத்தில் சன்மார்க்கசபையின் வரலாற்றைப் பேசுவது என்நோக்கமல்ல.

சாதாரண கிராமத்தில் இருந்து ஒரு எழுத்தாளன் உருவாவதற்கு இப்படியான சபைகளும் அறிஞர்களும் தொண்டர்களும் எவ்வகையில் உதவுகின்றன என்பதைக் காட்டுவதே என்நோக்கமாகும்.

ஆம் சன்மார்க்க சபை தொடங்கியபோதே ஒரு வாசிகசாலையும் (மணிவாசகர் நூல்நிலையம்) தொடங்கப்பட்டது. பலவகையான பழைய நூல்களும் நவசக்தி, கலாநிலையம், பாரதி, ஆனந்தபோதினி முதலிய பத்திரிகைக் கட்டுகளும் சேர்க்கப்பட்டன.

சன்மார்க்கசபை, மணிவாசக நூல் நிலையம் — என்பவை தொடக்கத்தில் ஒரு வாடகைக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டன. பின் 1946இலேதான் அழகான கட்டிடத்தைக்கட்டி திரு. நா.பொன்னையா அவர்கள் உதவினார்கள்.

முதலாம் வருடத்திலே 156 புத்தகங்களுடன் தொடங்கிய நூல் நிலையம் மூன்று வருடங்களுக்கிடையில் திரு. வ. பொன்னுக்குமார் அவர்கள் ஞாபகார்த்தமாகச் சேர்த்த புத்கங்களுடன் 275 புத்தகங்களைக் கொண்டதாய் விளங்கியது. சன்மார்க்க சபையின் இரண்டாவது அறிக்கையில் அப்போது வாசிகசாலைக்கு வந்த பத்திரிகைகளைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது (இக்கால எழுத்தாளர்க்கு இது அவசியம். எம்போன்றோர் எப்படி — பல அங்கம் வகித்தோம் என்பதைக் காட்ட விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்) இவை ஈழகேசரிக்கு மாற்றுப் பத்திரிகையாக வந்தவை. திரு. நா. பொன்னையா இவற்றை வாசிகசாலைக்கு உபகரித்தார்.

தினப்பதிப்பு: வீரகேசரி, தினகரன்.

வார வெளியீடு — ஈழகேசரி, இந்துசாதனம், இந்திய கேசரி, விந்தம், செட்டிநாடு, இந்துநேசன், தமிழ்மணி, நகரதூதன், ஆனந்தபோதினி, தமிழ்நாடு, தமிழ்த்தொண்டன், தனவணிகன், தேசநேசன், ஆனந்தவிகடன், சுதந்திரன்.

பஷ்ச வெளியீடுகள் — ஞானசித்தி, சோதிட பரிபாலினி, சுதேச நாட்டியம்.

மாத வெளியீடுகள், கலைமகள், தமிழ்ப்போதம், இராமகிருஷ்ண விஜயம், தமிழரசு, விநோதன், விசித்திரன், இந்துதர்மம், புதுஉலகம்
என்ற பத்திரிகைகள் வருகின்றன.

இந்த வாசிகசாலையும் சன்மார்க்கசபையும் ஒரு வாடகைக் கட்டிடத்தில் — கிடுகு வேய்ந்த கட்டிடத்தில் — நடைபெற்றன. அக்காலத்தே அரைமைல் தூரத்தில் நாமகள் வாசிகசாலை என்ற ஒன்றைச் சிலர் தொடங்கி நடத்தினர்கள். எனவே போட்டி புகைச்சல் ஆரம்பமாகிவிட்டது. இதன் காரணமாக எங்கள் கட்டிடத்துக்கும் வாசிகசாலைக்கும் ஏதாவது தீங்கு ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தில் நானும் எனது சகாக்கள் நாலைந்து பேரும் அவ்வாசிகசாலையிலே இரவிற் படுத்துறங்கினேம். ஒரு வருடம் இரண்டு வருடமல்ல நான் விவாகம் செய்யும் வரைக்கும் — நண்பர்களும் அப்படித்தான் — ஆறு வருடங்கள் அங்கேயே படுத்தேன். இதனுல் ஏற்பட்ட நன்மை என்னவென்ருல் அத்தனை புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படித்து அறிவை விருத்தி செய்து கொண்டமையே.

சன்மார்க்கசபையும், மணிவாசக நூல்நிலையமும் இருந்தபோதிலும் 1929ஆம் ஆண்டளவில் நாங்கள் நடாத்திய இளைஞர் சங்கத்தையும் நான் கைவிடவில்லை. அந்தச் சங்கந்தான் என் சொற்பொழிவுப் பயிற்சிக்குக் காரணமாயிருந்தது (ஒரு புதினம் நான் விவாகம் செய்து எனது மூத்த

மகள் பிறந்த அன்று எனது மனைவி ஆஸ்பத்திரிக்குப் போக, நான் ஒழுங்கு செய்திருந்த இளைஞர் சங்க பாரதி நினைவு விழாவில் — 1941ஆம் ஆண்டு புரட்டாதி 11ஆம் தேதி அம்பாள் ஆலய மண்டபமொன்றில் — பாஞ்சாலி சபதம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். இடையில் வைத்தே ஒருவர் இரகசியமாக உமக்குப் பெண் குழந்தை என்றார். நல்லது பாரதியின் தினம் அல்லவா? பராசக்தி என்று பெயர் வைப்போம் என்று கூறி அப்படியே செய்தேன்). நான் சன்மார்க்க சபையில் 1945இல்தான் காரியதரிசிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும் அதன் வளர்ச்சியிலும் இளைஞர் சங்க வளர்ச்சியிலும் பெரும்பங்கு கொண்டிருக்கிறேன்.

சபையின் வாசிகசாலை என் அறிவுத்தாகத்தைத் தணித்தது. நல்லதங்காள் கதை தொடங்கிப் பெரிய நாவல்கள், துப்பறியும் நாவல்கள் — கட்டுரை நூல்கள் வரை 1934—1936 இவற்றுக் கிடையே படித்து முடித்தேன். [அடுத்து, எங்கள் ஊரில் கிராமசங்கத் தேர்தல். அதில் எனக்கு நேர்ந்த அனுபவம்—இவற்றைக் காணப் போகிறீர்கள்.]

## ஒரு தேர்தல் — அதன் விளைவு

குரும்பசிட்டி — சன்மார்க்க சபையின் முதலாவது ஆண்டு அறிக்கையில் (1934 — 1935) உள்ள ஒரு விடயம் இது:— "மயிலிட்டிக் கிராமசபைத் தேர்தலில் சபைத் தலைவர் திரு. நா. பொன்னையா அவர்களைக் குரும்பசிட்டிக் கிராமத்துக்கு ஓர் அங்கத்தவராக நிற்கும்படி வேண்ட அவர் அதற்கு இணைந்து போட்டியிட்டு ஜெயம் பெற்றார்"

இதை வாசிக்கும் வாசகர்கள் இது என்ன சாதாரண நிகழ்ச்சி என்று கருதலாம். ஆனால் நாற்பது வருடங்களுக்கு முன் முதல் முதல் எனது கிராமத்தில் நடந்த

தேர்தல் இதுதான். அதற்குமுன் இரண்டு அரசாங்க சபைத் தேர்தல் நடந்தது ஞாபகம் இருக்கிறது.

எங்கள் ஊரில் கிராமசங்கத் தேர்தல் அதற்குமுன் நடந்ததில்லை. ஆசிரியர் பொ. பரமானந்தரும் வேறுசில ஆசிரியரும் ஒரு சுருட்டு முதலாளியும் கிராமச்சங்கத்துக்குப் போய் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களை எதிர்ப்பாரு மில்லை; அதில் அக்கறை செலுத்துவாருமில்லை.

சன்மார்க்கசபை கிராமசேவை செய்ய வசதியாக சபைத் தலைவர் நா. பொன்னையா அவர்களைக் கிராமச்சங் கத் தேர்தலிற் போட்டிக்கு நிறுத்தினார்கள். இதைச் சரியாகச் சொன்னால் ஒரு புதிய தலைமுறையின் எழுச்சி என்று கூறலாம்.

கிராம சங்கத் தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கிவிட் டது. அப்போது எனக்குப் பதினெட்டு வயது. சன்மார்க்க சபையைச் சேர்ந்த நாங்கள் வீடு வீடாகச் சென்று 'வோட் டர்'களைச் சந்தித்தோம். அப்போதுதான் மனிதர்களின் சுயரூபத்தை நான் அறிந்தேன். (இதை — கிராமசங்கத் தேர்தலை அப்படியே இருபது வருடங்களுக்குப் பிறகு எழு திய 'விதியின்கை' என்ற நாவலில் வர்ணித்திருக்கிறேன்)

அப்போது ஒருநாள் ஐந்து மணி — சன்மார்க்க சபை வளவிற் கைப்பந்தாட்டம் நடந்துகொண்டிருந்தது. பல வாலிபர்கள் பந்தாடிக்கொண்டிருந்தனர். நான் அதைப் பார்த்துக்கொண்டு நின்றேன்.

போட்டிக்கு நின்ற ஆசிரியர் அவர்கள் தன் வீட் டின் முகப்பில் — தெருவில் வருவது தெரிந்தது. அக் காலத்தில் இடையில் வீடுகளோ வேலிகளோ இல்லை. நான் சிறிது முகப்பாத்தியாக "அதோ! எங்களைப் படிப்பித்த ஆசிரியர் வருகிறார். நீங்கள் எல்லோரும் நன்றியில்லாத மாணவர்கள்: அவர் எவ்வளவோ பாடுபட்டு படிப்

பித்துவிட இப்ப பொன்னையாவுக்கு வேலைசெய்கிறீர்கள். உவர் எப்பவந்த பொன்னையா?'' என்று சற்று உரத்துக் கூறினேன். எனது மறைமுகமான கிண்டலை அறிந்து அங்கு பந்தடித்துக்கொண்டு நின்றவர்கள் சிரித்தார்கள். இது தெருவிற் போய்க்கொண்டிருந்த ஆசிரியருக்குக் கோபத்தை மூட்டியது.

நான் சன்மார்க்க சபை வாசிகசாலையில் இருந்து வழமைபோல இரவுச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்தேன். இரவுச் சாப்பாட்டைத் தந்து முடித்தபின் என் தாயார் என்னைப் பார்த்து "இன்றைக்குப் பின்னேரம் வாத்தியார் தெருவாலை போகும்போது நீ பகிடிபண்ணினியா?'' என்று கேட்டார். நான் நடந்ததைச் சொன்னேன்.

தாயார் சொன்னார். ''வாத்தியார் இப்பதான் இங்கை வந்து நீ பகிடிபண்ணினதாகச் சொன்னார். எனக்கு வெக்கமாகப் போச்சுது. நீ யார்? அவர் யார்? அவர் உன்னைப் படிப்பித்த வாத்தியார். அவரை அப்பிடியெல்லாம் பகிடி பண்ணலாமா? அவரைப்பற்றி உனக்குத் தெரியாது. வழி தெருவிலை கண்டாலும் நொருக்கிப்போடுவார். நான் உன்னை ஒரு அப்பாவிப்பிள்ளை என்று நினைத்தேன் நீயும் மற்றவர்களைப் போல வந்துவிட்டாய். நீ இந்தக் கிராமச் சங்கத் தெரிவு முடியும் வரைக்கும் எங்கையாவது போ இந்த ஊரில் நிற்காதே'' என்று சீறி விழுந்தார். அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. அவர் சொல்லைத் தட்டவும் முடியாது என்று எனக்குத் தெரியும். எங்கே போவதென்றும் எனக்குத் தெரியவில்லை.

விடிந்தது. என்னுடன் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் படித்த நெடுந்தீவு நண்பர் (ஆ. கணபதிப்பிள்ளை) என்னைத் தேடி குரும்பசிட்டிக்கு வந்திருந்தார். அவர் தான் நயினாதீவு தெற்கு கணேச வித்தியாசாலையிற் படிப்பிப்பதாகவும் சும்மா கண்டு பேச வந்ததாக

வும் கூறினார். அன்று என்னுடனே தங்கிய அவர் அடுத்த நாள் புறப்படும்போது எனது தாயாரிடம் என்னை யாழ்ப் பாணம் கூட்டிச்செல்வதாகவும் வசதியானல் நயினாதீவுக் குக் கூட்டிப் போவதாகவும் சொன்னார். தாயார் சம்மதித் தார். இருவரும் யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தோம். யாழ்ப்பாணம் கடற்கரையில் உள்ள சாப்பாட்டுக்கடை யில் இருவரும் உணவருந்திவிட்டு, சீமந்தால் ஆன திண்ணை யில் ஆறுதலுக்கு இருக்கும்போது தூரத்தில் ஓர் ஆசிரியர் வருவதைக் கண்டேன். நண்பர் அவர் தனது தலைமையா சிரியர் என்றார். அவர் வந்ததும் நண்பர் என்னை அறிமுகம் செய்துவைத்தார்.

செல்லையா என்ற பெயர்கொண்ட அந்தத் தலைமை யாசிரியர் என்னைப் பார்த்து ''தம்பி, உன்னைக் கூட்டிவரச் சொல்லி நான்தான் இவரை அனுப்பினேன். நயினாதீவு தெற்கிலே இருக்கிற கொட்டில் பள்ளிக்கூடத்தைக் கல் லாலே நன்றாகக் கட்டப் போகிறோம். அதற்கு எங்கள் மனேஜர் சிறிது உதவிதான் செய்வார். மிகுதிப் பணத்தை நாம்தான் சேர்க்கவேண்டும். கொழும்புக்கும் பிற இடங்கட் கும் சில ஆசிரியர்கள் போகப்போகிறோம். பிள்ளைகளின் படிப்புக் கெட்டுவிடும். நீர்வந்தால் நல்லது. சாப்பாடு பிறசெலவு எல்லாவற்றையும் நான் பொறுத்துக்கொள் வேன். வருகிறீரா'' என்று கேட்டார். அப்போது என்சூழ் நிலையில் அது எனக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இருந்தது; உடனே சம்மதித்தேன்.

யாழ்ப்பாணம் — அலுப்பாந்தித் துறைமுகத்தில் பின் னேரம் மூன்று மணியளவில் தீவுப் பகுதிகளுக்குச் செல் லும் மோட்டார் படகில் ஏறி நயினாதீவுக்கு ஐந்தரை மணிவரை போய்ச் சேர்ந்தோம். விடிந்தது. பாடசாலை யைப் போய்ப் பார்த்தேன். ஒரே நீளமான வெறுங் கொட்டில்; சுவர் என்ற பண்டமே இல்லை. ஐந்து ஆசிரிய

களும் ஒரு பெண் ஆசிரியையும் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தார்கள். தலைமை ஆசிரியர் செல்லையா புதுக் கட்டிட வேலைக்காக அங்கும் இங்கும் ஓடி ஆடித் திரிந்தார். நான் அவருடைய பாடங்களைப் படிப்பிக்கத் தொடங்கினேன்.

வீட்டு ஞாபகம் — ஊர் ஞாபகம், எதுவுமின்றிப் படிப்பிப்பதில் மூழ்கிவிட்டேன். என்சேவை எல்லோருக்கும் பிடித்திருந்தது, ஆசிரியர்மார் விடுதி நடத்திக்கொண்டிருந்தனர் ஒரு வீட்டில். நயினாதீவு தெற்கில் உள்ள அந்த வீடு இப்போதுகூட ஞாபகத்தில் இருக்கிறது. நாகமணிப் புலவரது இனத்தார் வீடு அது. அப்போதுதான் வரகவி நாகமணிப் புலவர் அவர்களைப் பற்றியும் வேறுசில இளங் கவிஞர்களைப் பற்றியும் தீவுப் பகுதியின் வாழ்க்கை முறைகளைப் பற்றியும் அறிந்தேன். பல்வகையிலும் என் அறிவு விரிந்தது. என் அனுபவமும் விரிந்தது என்ற வசனம் வெறும் வசனமல்ல பொருள் உள்ள வசனம்.

புங்குடுதீவு கிழக்கு — வல்லன் என்ற இடத்தைச் சேர்ந்தவர் தலைமை ஆசிரியர் வி. செல்லையா. விவாகம் ஆகாதவர். மற்ச மாமிசம் உண்ணாதவர். ஓரளவு காந்தீயவாதி. இவர் வாரத்தில் கடைசிநாள் வெள்ளிக்கிழமையன்று பின்னேரம் நான்கு மணிக்கு என்னையும் கூட்டிக்கொண்டு வள்ளத்தில் புங்குடுதீவுக்குப் புறப்படுவார். கரையில் இறங்கியதும் மூன்றுமைலுக்கு மேல் நடைவழியில் உள்ள பாடசாலைகள், அதனைக் கட்டிய பெருமக்கள், புங்குடுதீவு கல்விமான்கள், உழைப்பாளிகள், ஊரின் வாழ்க்கைமுறை எல்லாவற்றையும் பற்றிக் கதைகதையாகச் சொல்வார்.

இரவில் அவர்வீட்டில் தங்கிவிட்டு விடிந்ததும் யாழ்ப்பாணம் புறப்படுவோம், நடை; ஒரே நடை. அப்போது வேலணை — புங்குடுதீவுப் பாலமோ, பண்ணைப் பாலமோ இல்லை. வள்ளங்களுக்கு நெடுநேரம் காத்துநிற்கவேண்டும். அப்போது அவர் வேலணை, அங்குள்ள அறிஞர்கள், அவர்களின் பண்பாடு, அங்கு தான் படித்த விதம் எல்லா

வற்றைப் பற்றிச் சொல்லவார். இந்தக் கதைகள், எல்லாப் பயணங்கள், கடகட மோட்டார் வண்டியில் ஓட்டம், எல்லாம் புதுமை அனுபவம்.

நாலைந்துமாத இடைவெளியில் ஓரிரு முறை வீட்டுக்கு வந்து போனேன். அப்போது திரு. நா. பொன்னையா அவர்கள் 15 மேலதிக வாக்குகளால் வெற்றியடைந்தார் என்பதைக் கேள்வியுற்று அளவிலா மகிழ்ச்சியடைந்தேன்.

நயினாதீவுப் பாடசாலை கட்டி முடிந்ததும் இனி என்ன செய்வதென்று யோசிக்கும் வேளையில் திருநெல்வேலி — முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஆசிரிய தராதர பத்திர வகுப்பு நடைபெறப்போவதாக அறிந்து அதிற் படிக்க ஆசை கொண்டேன். செல்லையா ஆசிரியர் அவர்கள் என்னை வாழ்த்தி கதர் வேட்டி சால்வை எல்லாம் வாங்கித் தந்து விடைகொடுத்து அனுப்பினார்.

எனது தாயார் என்னை மேலும் படிப்பிக்க ஆசை கொண்டார். கண்டிக்க வேண்டிய இடத்திற் கண்டித்தும், உற்சாகப்படுத்தவேண்டிய இடத்தில் உற்சாகப்படுத்தியும் என்னை அவர் ஆளாக்கினார். அந்தத் தெய்வத்தின் உதாரணத்துக்கு ஒரு சான்று அடுத்த அத்தியாயம்; நெஞ்சை விட்டகலாத அத்தியாயத்தை வாசியுங்கள்.

# 12. நெஞ்சிற் பதிந்த செயற்கரும் செயல்

உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து
— திருக்குறள்

கிராமங்களெல்லாம் பட்டினம்போல மாறிப் பெரிய வீடும் நீண்ட மதிலும் இரும்புப் படலையுமாக — தார் ரோட்டும் மின் வெளிச்சமும் அலறும் வானெலியுமாகக் காட்சியளிக்கின்றன. ஆனல் ஒன்றைமட்டும் காணேம். அது கருணை. புதுமைப்பித்தன் சொன்னமாதிரி அது கிழங்காகிவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன் இப்படி நாகரிகமான ஒன்றும் இல்லே. ஆனல் கருணை — இரக்கம் — உதவி செய்யும் மனப்பான்மை இருந்தன. எங்கே இல்லாவிட்டாலும் எங்கள் ஊரில் இருந்தது.

எனது தாயார் ஒரு கைம்பெண். நாங்கள் — நானும் எனது சகோதரியும் — சிறுவர்கள். எங்களுக்கு ஊன்றுகோல் போல் இருந்த அப்பாவும் நான் நான்காம் வகுப்புப் படித்து முடிந்தவுடன் இறந்துபோய்விட்டார். எனது தாயாரின் மூன்று சகோதரர்களும் கொழும்பில் உத்தியோகத்தில் இருந்தார்கள். மூத்த தமயனர் ஒருமைல் தூரத்தில் இருந்தார். பக்கத்தில் இருந்த தமயனர் எங்களோடு கோபம். அப்படியிருந்தும் நாங்கள் மகிழ்ச்சியாகவே வாழ்ந்தோம். காரணம் சுற்றியிருந்த கமக்காரர்களின் கருணை — உதவி— இவற்றுலேதான்.

எனது சகோதரி — மீனுக்ஷி; ஏழாம் வகுப்பு வரை படித்துவிட்டு படிப்பை நிறுத்தினுர். தாயாரோடு சேர்ந்து குடும்பத்துக்கு வருமானம் வரக்கூடிய சிறுதொழில்கள் செய்தார்கள். எங்கள் வீட்டில் அவரோடு ஒத்த வயதுடைய பெண்பிள்ளைகள் கூடவே இரண்டு மூன்று பேர் எப்போதும் இருப்பார்கள். அநேகமாக எங்கள் வீட்டிலேயே சாப்பிடுவார்

கள். இரவில் அங்கேயே துணைக்குப் படுப்பார்கள். அத ஞல்தான் நான் வாசிகசாலேயிற் படுக்கையை வைத்துக் கொண்டேன். இந்தக் காலத்தில் இது வெட்கப்படும் காரி யம். அக்காலத்தில் எல்லோரும் ஒரே குடும்பத்துப் பிள்ளே கள்தான்.

ஏன் இவ்வளவையும் எழுதுகிறேன் என்ருல் இனிவரும் முக்கிய நிகழ்ச்சிக்கு இந்தப் பின்னணி தேவை. அது மாத்திர மல்ல இப்போதைய தலைமுறைக்கும் இது தேவை. ஆமாம். பெற்ற தாய்க்கே ஒருபிடி சோறு கொடுக்க மனம் வராத மனிதப் பதர்கள் மாடிவீடு கட்டி வாழ்கின்றனர். எங்கள் குடும்பத்தில் ஒரு அங்கமாக — ஆனுல் உறவுமுறையின்றி — வாழ்ந்த ஒருகுடும்பம் கந்தையா என்பவரது குடும்பம்: எங்கள் ஊரில்நடந்த பொற்கொடியாள் நாடகத்தைப் பற்றி முன்னமே சொல்லியிருக்கிறேன். அந்த நாடகத்தில் கோமாளி வேஷம் போட்டபடியால் கோமாளி - கந்தையா என்றே ஊரவர் அழைத்தனர். இயற்கையாகவே நகைச் சுவையாகப் பேசுபவர். தென்ஞலிராமன் கதைபோல் இவ ரைப் பற்றிய நகைச்சுவைக் கதைகள் அநேகம்.

இவர் ஒரு கோட்டுப்புலி. சிக்கல் நிறைந்த எந்த வழக் குக்கும் ஆலோசனே கூறுவார். பிரபல சட்டத்தரணிகள் இவருக்குப் பழக்கம். எப்போதும் மல்லாகம் — யாழ்ப்பா ணக் கோடுகளிலே இவரைக் காணலாம். தன்னுடைய கமம் செய்யும் முயற்சியை விட்டுவிட்டு ஒரு காணிவழக்குச் சம் பந்தமாக இவர் திரிந்துகொண்டிருந்தார். குடும்பம் நொடித் துப் போயிற்று. மூத்த இரண்டு பெண் பிள்ளேகளும் அநேக மாக எங்கள் வீட்டிலேயே இருப்பார்கள்.

கோமாளி - கந்தையா காணி சம்பந்தமாக வைத்த வழக்கு நீண்டுகொண்டே போயிற்று. பணம் கரைந்தது தான் மிச்சம்; இறுதியில் அவருக்கு மாருக யாழ்ப்பாணம் பெரிய கோட்டில் தீர்ப்பும் ஆயிற்று. சட்ட நுணுக்கமெல்

லாம் தெரிந்த அவர் ஏமாற்றத்துக்குள்ளானுர். அவர் தமது சட்டத்தரணியோடு யோசித்தார். அவரும் தீர்ப்பைப் பலரைக் கொண்டு வாசிப்பித்துப் பார்த்தார். நீதிபதியின் தீர்ப்பு சரியல்ல என்றே எண்ணினுர். 'அப்பீல்' எழுதத் தீர்மானித்தார்.

'அப்பீல்' எழுதுவதற்கும் பிற செலவுகளுக்கும் ஆயிரம் ரூபா வரை தேவை. ஆயிரம் சதம் கூட அவரிடம் இல்லை. அந்தக்காலத்தில் — சாதாரண கிராமத்தில் — ஆயிரம் ரூபா என்ருல் மிகப் பெருந் தொகை. யாருமே கொடுக்கமாட்டார்கள். வறுமையிலும் கலகலப்பாக இருந்த அவர் செய்வது இன்னதென்று அறியாது துக்கமே உருவெடுத்தார்.

ஆதரவற்ற அந்தக் குடும்பத்துக்கு என் தாயார் உதவி செய்ய முன்வந்தார். தனது காணி உறுதிகளை எல்லாம் கோமாளி - கந்தையா அவர்களிடம் கொடுத்து அப்பீலுக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யுமாறு சொன்னுர். இத்துணிவான செயலைக் கண்டு தாயாரது மூத்த தமையனுர் வெகுவாகக் கண்டித்தார். ''அப்பீல் தோற்றுப்போனுல் காணி பூமிகள் எல்லாம் போய்விடும். கந்தையா மீட்டுத் தருவாரா? பெண்பிள்ளையின் கதி என்ன'' என்றெல்லாம் சுற்றத்தவர் கேட்டனர். என் வீரத்தாயார் இதற்கெல்லாம் செவி கொடுக்கவில்லை. "அப்ப அவர்களுக்கு ஆர் உதவிசெய்வது? கடவுள் விட்ட வழி நடக்கும் என்றே பதில்'' சொன்னுர்.

அதிக காலம் சுணங்காமல் தீர்ப்பு வந்துவிட்டது. அப்பீலில் கந்தையா அவர்களுக்கே வெற்றி. இதைப்பற்றி ஊரில் பலர் பலவாறு பேசினுர்கள்.

இது சிலருக்குத் சிறிய நிகழ்ச்சியாகப் படலாம். ஆனுல் இது எனக்கு என்மனதில் உறைந்த நிகழ்ச்சி. எனது தாயாரது மூன்று நிகழ்ச்சி — திருநெல்வேலிக் கனுப்பிய துணிவு, உபதேசம் — ஆசிரியர் பரமானந்தருக்காக அவர் என்மேற்

காட்டிய கண்டிப்பு — ஆருமற்ற நிலேயில் பிறருக்குச் செய்த உதவி, இரக்கம் என்பன, என் மனதில் நிலேபெற்றுவிட்டன. இன்னும் அவர் வீட்டுக்கு யார் வந்தாலும் எதையாவது உண்ணக் கொடுக்கும் பரிவு, யாரையும் அணேத்துச் செல்லும் குணம் போற்றத்தக்கவை.

இதனுலோ என்னவோ யார் வீட்டுக்கு வந்தாலும் ஐந்தாவது நிமிடத்தில் என்வாய் 'நாகம்மா' என்கிறது. என் மனேவி தேநீரோடு காட்சி தருகிருர். இதைப்பற்றி கவிஞர் சச்சிதானந்தன் ஒரு கவிதைகூடப் பாடியிருக்கிருர்.

ஐம்பது வருடங்கள் ஓடி மறைகின்றன. நான் கால் இழந்த நிலேயில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்கு வருகிறேன். ஒருநாள் எனது மனேவி சொன்ன புதினம் என்னேத் திடுக்கிட வைத்தது. அந்தக் கோமாளி – கந்தையாவின் மூத்த மகள் தன்னேத் தெருவில் சந்தித்து ஐம்பது ரூபா பணத்தைக் கொடுத்து ''வாத்தியாற்றை தாய் எங்களுக்கு எவ்வளவோ செய்தவ வாத்தியாரை ஆஸ்பத்திரியில் வந்தும் பார்க்கவில்லே. இந்தா இதைக் கொண்டு போய்வாத்தியாருக்கு ஏதாவது வாங்கிக் கொடு'' என்ருராம். பணம் கொடுத்தவர் பணக்காரியல்ல; கைம்பெண்; சாதாரண வாழ்க்கை நடாத்துபவர். நாங்கள் பிறர் உதவியின்றியே வாழ்க்கை நடத்தக்கூடியவர்கள். அப்படியிருந்தும் பழையகால சம்பவங்களே — நினேந்து அன்போடு கொடுத்த பணம் அது. அது வெறும் பணமல்ல. அதற்குள் எவ்வளவோ கதை இருக்கிறது.

மனேவி அந்தப் பணத்தை என்னிடம் நீட்டி அவர் சொன்ன வார்த்தைகளேக் கூறும்போது என்கண்ணில் நீர் பனித்தது.

# 13. மீண்டும் திருநெல்வேலியில்

அன்பான உடன்பிறப்பாம் மீனுக்ஷிக்கு
அரும்கணவர் ஒருவரையே தேடிவைத்தும்
என்படிப்புக் கேற்றபல கயரியங்கள்
இசைவாக முயன்றுசுமை தாங்கிக்கொண்டும்
தன்பெரிய இரக்கமதாற் பலபேருக்கும்
தளராது உதவிபல செய்துகொண்டும்
துன்பம்எனும் ஒன்றதனைச் சிரிப்பால்தேய்த்து
சுடர்விளக்காய் என்அன்னை உலவாநின்ருள்.

என் தாயாருக்கு ஒரு மனக்குறை, இறக்கும் வரை இருந்தது. தனக்கு ஐந்து சகோதரர்கள் இருந்தும்த் னது மகளுக்கு இனசனத்துக்குள் விவாகம் பேசி விவாகம் செய்து வைக்கவில்லையே என்பதுதான் அந்தக் குறை. சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் அதை வெளிவிடுவார்.

ஈழகேசரி நா. பொன்னையா அவர்கள் தன்னுடைய புத்தகசாலையில் புத்தகம் கட்டுபவராகிய தனது பெரு மகனை — மனைவியாரின் தமக்கையார் புத்திரரை — என் சகோதரிக்கு விவாகம் பேசினுர். தாயாரும் இசைந்தார், எனக்குப் பரம சந்தோஷம். ஏனெனில் பெரிய ஆசிரியர்களாய் இருந்த பொன்னுக்குமாரு. இராமலிங்கம் என்போரின் சகோதரர் அவர். பேரம்பலம் என்பது அவர் பெயர். பண்பாடு மிக்கவர். எந்தவகையான தீய பழக்கமும் இல்லாதவர். சம்பளம் குறைவாக இருந்தாலும் என் வளர்ச்சியில் அவர் அக்கறை காட்டுவார் என எண்ணினேன்.

எங்கள் காணிபூமி வீடுவளவு முழுவதையும் என் தாயார் தனது ஒரே மகளுக்குக் கொடுத்து விவாகம் செய்து வைத்தார். இது முடிந்ததும் நான் திருநெல்வேலி முத்துத் தம்பி வித்தியாசாலைக்கு 1935 ஏப்பிரலிற் போய்ச் சேர்ந்தேன். ஆசிரிய தராதரப் பத்திர வகுப்பு அப்போது அங்கு தொடங்கியிருந்தது.

ஒரு வருடத்துக்கிடையில் அங்கே பெரும் மாற்றம் நிகழ்ந்தது. ஆசிரிய கலாசாலே புதுக்கட்டிடம் தொடங்கியிருந்தார்கள். அந்த ஆசிரியகலாசாலேக்குப் பக்கத்து வளவிலே பெரிய கட்டிடமாக முத்துத்தம்பி வித்தியாசாலே கம்பீரமாக நின்றது. நான் முன்பு படித்த பாடசாலே 5ஆம் வகுப்புவரை படிப்பிக்கும் பாடசாலேயாக மாறியிருந்தது.

எங்கள் வகுப்பில் 42 மாணவர்கள் எங்கெங்கோ இருந்து வந்திருந்தார்கள். பரீட்சைக்கு (ஆவணி) ஐந்து மாதங்களே இருந்தன. பாடவகைகளும் வேறு — அவை இரண்டு வகையாய்ப் பிரிக்கப்பட்டிருந்தன. முதலாம் பகுதியிற் கல்வி பயிற்றலின் விதிகள், கல்விபயிற்றலின் முறைகள், தேகப்பயிற்சியும் சுகாதாரமும் என்ற பாடங்கள். இரண்டாம் பகுதியில் கணிதம், இலக்கியம், பூமிசாஸ்திரம், சரித்திரம், நாட்டுச் சீவன சாஸ்திரம், வரைதல் என்பன. முதலாம்பகுதிப் பாடங்கள் முற்றிலும் புதியவை, இரண்டாம் பகுதியிலும் சரித்திர பாடம் S. S. L. C. யிலும் வித்தியாசமானது. காலமோ குறைவு. கடுமையாக முயற்சி செய்தால் சித்தியெய்தலாம் என்ற நிலே.

இரவிலே அதிகம் படியாதவன் நான். விடிய ஐந்து மணிக்கு அந்தப் பனியில் எழுந்து படிக்கவும் என்தேகம் இடம்கொடாது. ஆனலும் என்னே இடைவிடாது தூண்டிப் படிக்கவைத்த அருமையான ஒரு நண்பர் பக்கத்துக் கட்டிலுக்கு வந்து சேர்ந்தார். அந்த நண்பர் அராலியில் இருந்து வந்திருந்தார்; பெயர் நவரத்தினம். பெயருக்கேற்ற குணசாலி. அவருக்கு ஒரு கஷ்டம், எந்த நூலேயும் நெடுநேரம் வாசிக்கமாட்டார். ஒருவகை நடுக்கம். இதனல் என்னே அவர் வாசி வாசி என்று தூண்டிக் கொண்டேயிருப்பார். இந்த நண்பர் ஆசிரியகலாசாலேயிலும் என்னேடு படித்தார். மகா விவேகி. அவரது தூண்டுதல்கள் காரணமாகவே நித்திரை கொள்ளாமல் சாமம் வரை படித்தேன்.

இந்தக் காலகட்டத்தில் எங்களுக்குச் சரித்திரம் படிப்பித்தவர் எங்கள் ஊரைச் சேர்ந்த ஆசிரியர் சீ. தம்பிப்பிள்ளை. படிப்பித்தலுக்காகவே பிறந்த ஆசிரியர். உலக சரித்திரத்தையும் இலங்கையின் பூர்வ சரித்திரத்தையும் அவர் தெளிவாகப் படிப்பித்தார். இந்த ஆசையினுற் பிற்காலத்திற்கூட இலக்கிய நூல்களைப்போல சரித்திர, பிரயாண நூல்களை ஆசையோடு வாசித்திருக்கிறேன். 300க்கும் மேற்பட்ட நூலைகளைச் சேர்த்து வைத்திருக்கிறேன்.

இப்போது ஆசிரிய கலாசாலை உப அதிபர் பொ. கைலாசபதி அவர்கள் சனி, ஞாயிறுக் கிழமைகளிற் கல்வி பயிற்றல் சம்பந்தமான விதிகள், முறைகள் என்பவற்றைப் படிப்பித்து வந்தார். முன்னர் எஸ். எஸ் எல். சி. படிக்கும்போது தூரத்திலே கண்ட அந்தப் புனித உருவம் இப்பொழுது அண்மையில் — மிக அருகாமையில் — இருந்து தமது மெல்லிய குரலிற் பாடம் சொல்லித்தந்த காட்சி நாம் எவ்வளவு பேறு பெற்றவர்களாகிவிட்டோம் என்பதை இன்றும் நினைவிலிருத்துகிறது.

நானும் நண்பர் நாகரத்தினமும் பின்னேரம் நான்கு மணிக்குப் புத்தகமும் கையுமாக எங்கள் பாடசாலையிலிருந்து வடக்கே பனம் கூடல் வழியாக வாசித்தபடியே கோண்டாவில் சந்தியை அடைவோம். அங்கு ஒரு கடையிற் புகையிலை வாங்கிக்கொண்டு (நான் அப்போது சுருட்டுப் பிடிக்கும் பழக்கமுள்ளவனுக இருந்தேன்) திருநெல்வேலிச் சந்திவரை வாசித்தபடியே வருவோம். பின்னர் வீடுதிக்கு வந்து சேர ஏழு மணியாகும். அப்புறமும் படிப்புத்தான். அப்போது நான் பாடபுத்தகங்களைத் தவிர வேறு நூல்களை — பத்திரிகைகளை வாசித்தது கிடையாது.

உண்மையில் இந்த ஆசிரிய தராதரப் பத்திர வகுப்பு கடுமையான பரீட்சையாகவே தோன்றியது. இதன் கடுமையை அறிந்த பலர் இதிற் சித்தி எய்தாமலே ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீக்ஷை எடுத்து ஆசிரிர்கள் ஆயினர். இந்தப் பரீட்சையை மூன்று பகுதிகளாக நடாத்தினர்.

முதலாம் பகுதியில் கற்பித்தலின் விதிகள், கற்பித்தலின் முறைகள், தேகப்பயிற்சியும் சுகாதாரமும்; இரண்டாம் பகுதியில் கணிதம், தமிழ், சரித்திரம், பூமிசாத்திரம், நாட்டுச் சீவனசாஸ்திரம், சித்திரம் எனும் பாடங்கள்; மூன்றும் பகுதி மாதிரிப் பாடம் ஒன்று நடாத்தல். இது கிட்டத்தட்ட குருவியின் தலையிற் பனங்காய் சுமந்த மாதிரித்தான்.

1936ஆம் ஆண்டு ஆவணி மாதம் இந்தப் பரீட்சையை எடுத்தேன். பாடவகையாகிய இரண்டாம் பகுதியிற் சித்தியடைந்தேன். அதில் திருப்தியும் அடைந்தேன். அடுத்த முதலாம் பகுதியைத் தனியே எடுத்துச் சித்தி எய்தலாம் என்ற துணிவு எனக்கிருந்தது. என் நண்பர் முழுப் பரீட்சையிலும் சித்திஎய்தி என்னுடைய உதவிக்காக நன்றிக் கடன் கூறினர்.

அடுத்து என்ன செய்வது? வீட்டில் சும்மா இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. எங்கே யாவது ஆசிரியர் உத்தியோகம் பார்க்க வேண்டும். பாடசாலை கட்டி தமிழ் வளர்த்த மனேஜர்மார் பணம் பிடுங்கும் முதலைகளாகக் காணப்பட்டனர். எனவே சைவ வித்தியா விருத்திச்சங்க மனேஜர் இராசரத்தினம் அவர்களை யாதோர் சிபார்சுமின்றி நேரே கேட்பதாக முடிவு செய்தேன்.

1936ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி. எனது கிராமமாகிய குரும்பசிட்டியில் இருந்து விடியுமுன் எழுந்து பல கஷ்டங்களைத் தாண்டி, யாழ்ப்பாணம் சென்று நல்லூர் முருகனைத் தரிசித்துவிட்டு, பக்கத்தே உள்ள மனேஜர் சு. இராசரத்தினம் அவர்களின் வீட்டு விறுந்தையில் ஏறுகிறேன்.

ஒரு சாதாரண சாய்மனைக் கதிரையில் போர்த்தபடி சிறிதாகத் தொய்வும் இழுக்க, பத்திரிகை ஒன்றைப் பார்த்தபடி அவர் காட்சி அளித்தார். நான் ஒரு தூணைப் பிடித்துக்கொண்டு நிற்கிறேன்.

ஐந்து நிமிட நேரம் மௌனம்; ஒரு பேச்சுமில்லை.

என்னை அவருக்கு முன் பின் தெரியாது. எனக்கும் அப்படித்தான். திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிற் படித்துக் கொண்டிருக்கும் போது ஆசிரிய கலாசாலைக்கு அவர் இடைக்கிடை வந்து திரும்பியதைக் கண்டிருக்கிறேன்.

''நீ ஆர் காணும்?'' அவர் என்னைப் பார்த்துக் கேட்கிறார்.

நான் என்ன பிரபலமான மனிதரா? அல்லது பிரபல குடும்பத்தின் வழித்தோன்றலா? சாதாரண கிராமத்திற் பிறந்த இருபது வயதும் நிரம்பாத வாலிபன்; என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பேசாமல் நின்றேன்.

பின்பும் ஐந்து நிமிடம் கழிகிறது.

''என்னகாணும் பேசாமல் நிற்கிறீர்? ஆகாயத்தால் வந்து குதித்தனியே?'' சற்று உறுமலாகக் கேட்கிறார்.

நான் அப்போதும் பதில் சொல்லவில்லை. அமைதியாக நிற்கிறேன். ஐந்து நிமிடம் மேலும் செல்கிறது. பத்திரிகை வாசித்தபடியே சிறிது சாந்தமாக, ''என்ன காரியமாக வந்தனீர்? சொல்லுமேன்?'' என்கிறார் அவர்.

அப்போதுதான் நான் பதில் சொல்லத் தொடங்கினேன்.

''குரும்பசிட்டி எனது ஊர். எனது தகப்பனார் சிறுவயதில் இறந்துவிட்டார். மிகக் கஷ்டமான நிலையில் தாயார் என்னைத் திருநெல்வேலிக்கு அனுப்பிப் படிக்கவைத்தார். 1934ஆம் ஆண்டு தொடக்கம் அங்கேயே படித்து இப்போது ஆசிரிய தராதரம் பெற்றுவிட்டேன். இப்போது வறுமை நிலை. குடும்பத்தில் உழைப்பவர் வேறுயாருமில்லை. எனவே எனக்கு ஓர் ஆசிரியர் உத்தியோகம் தாங்கள் தர வேண்டும்.''

அவர் சொல்கிறார்:— ''இப்போது எங்கள் பாடசாலைகளில் இடமில்லை. ஆனாலும் அதோ ஒரு கொப்பி இருக்கிறது அதில் உம்மைப்போற் பதினைந்துபேர் இடம் கேட்டு

விலாசம் எழுதியிருக்கிறார்கள். நீரும் எழுதிவிட்டுப் போம். அடுத்தமாதம் வாரும் பார்த்துக்கொள்ளலாம்.''

நான் எனது விலாசத்தை எழுதிவிட்டுத் திரும்புகிறேன்.

இதுதான் எனது முதற் சந்திப்பு.

அதன் பிறகு எத்தனையோ சந்திப்புகள். திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையிற் படித்து வெளியேறிக் கால்நூற்றாண்டாக அவரின்கீழ் வேலைசெய்து எட்டுப் பாடசாலைகளிற் கடமையாற்றி முடித்தும் விட்டேன்.

இப்போது அவர் செய்த பெருந் தொண்டைப் பற்றியும் எண்ணிப் பார்க்கிறேன்.

பெரிய மனிதர்களின் துணை இன்றி, ஒரு சிபார்சுக் கடிதம் கூட இன்றி என் அசட்டுத் துணிச்சல், வறுமையின் நெருக்கடியில் அவரைச் சந்தித்ததை நினைக்கிறேன்.

என்நிலையை அறிந்து எனக்கு உதவி என்னை ஆளாக்கிய அவரின் பெருந்தன்மையை நினைக்கிறேன்.

நான் மாத்திரமா? என்னைப்போன்ற சாதாரண—மிகச் சாதாரணமான—ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நேரிடையாகவே தங்கள் கஷ்டநஷ்டங்களைப் பற்றிச் சொல்லக்கூடிய மனேஜர் — ஆறுதல் பெறக்கூடிய மனிதராக அவர் காட்சி அளித்தார்.

அவர் சாதாரண மனிதரல்ல. மிகப்பெரிய ஸ்தாபனமொன்றைச், சைவ வித்தியா விருத்திச் சங்கமென்ற ஸ்தாபனத்தை, நடாத்தியவர். இருநூறுக்கும் மேற்பட்ட பாடசாலைகளைக் கட்டியவர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களை வைத்துக் கட்டி ஆண்டவர்.

அவரைப்பற்றிச் சொல்ல வார்த்தைகள் கிடையா. ஒரு நல்ல கவிஞன் காவியமாகவே பாடக்கூடிய சரித்திரம் அது.

இதோ, எதையும் சரியான வார்த்தைகளால் அளந்து எழுதும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஸ்ரீமான் சு. இராசரத்தினம் அவர்களைப் பற்றி எழுதியிருப்பது இது:—

"சங்கத்தைச் சாட்டுக்கு வைத்துக்கொண்டு தனிமனிதரான இராசரத்தினம் அவர்கள் நினைக்கவும் எட்டாத எத்தனையோ காரியங்களை கண்மூடி விழிப்பதற்குள் செய்து முடித்தார்கள்"

அவர் செய்துமுடித்த காரியங்களை மொத்தமாக நோக்கினால் அவற்றை மூன்றாக வகுக்கலாம்.

ஒன்று ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகள்; இரண்டு சைவ ஆசிரியர்களுக்கான ஆசிரிய பயிற்சிக் கலாசாலை. மூன்று ஆதரவற்ற சிறுவர் சிறுமியர்களுக்கான அநாதசாலை.

## 14. ஆசிரிய கலாசாலையில் சேர்ந்தேன்

முன்னைக் கிரேக்க முனிவரர்போல் வாழ்ந்தமகான்
என்னையும்ஓர் பொருட்டாக ஏற்றமுற வைத்தனரே.
அன்னவர்தம் பெயர்சொல்ல அஞ்சுகிறேன்—உபஅதிபர்
என்ன அழைப்பார்கள் – இவர்தான் கைலாசபதி.
இலக்கியமே மூச்சாக இன்தமிழே பேச்சாக
நயக்கும் படிகவிதை நாள்தோறும் ஊட்டியவர்
பலர்க்கும் உதவுகின்ற பண்டிதமணி சி. க.
எனையும்ஒரு ரசிகன்என ஏற்றார் — முன் புண்ணியமே.

1936ஆம் ஆண்டு மனேஜர் அவர்களைச் சந்தித்து உத்தியோகம் கேட்டதைப் பற்றி முன் அத்தியாயத்தில் எழுதினேன். ஒருமாதம் கழித்து வரும்படி சொன்ன அவர் அடுத்த மாதம் போனதும் என்னைப் பயமுறுத்தினார்.

"ஓ! சொன்ன நாளைக்கு வந்து நிற்கிறீர் — முல்லைத்தீவு, வதுளை முதலிய இடங்களுக்குப் போய்ப் படிப்பிப்பீரோ!" என்று கேட்டார். நான் "இப்போதுள்ள சூழ்நிலையில் எங்கும் படிப்பிக்கத் தயார்" என்றேன். மனேஜர் சிரித்துவிட்டு சும்மா உன்னைக் கேட்டுப் பார்த்தேன். காலியாக ஒரு இடமும் இல்லை. "நீர் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையிற் படிக்க விண்ணப்பம் போடும் ஆசிரியர் தராதரத்தில் இரண்டாம் பகுதி சித்தி எய்தியவர்களை இரண்டு வருடப் பயிற்சிக்கு எடுக்க அரசாங்கத்திடம் உத்தரவுக்கு எழுதியிருக்கிறேன். (மற்ற ஆசிரிய கலாசாலைகளில் மூன்று வருடப் பயிற்சி) உத்தரவு வந்தாலும் வரும்; போட்டுப் பாருமேன்" என்றார்.

பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல இச் சொற்கள் எனக்கு இனித்தன. சைவாசிரிய கலாசாலையிற் பயிற்சி பெற விண்ணப்பம் ஒன்றைப் போட்டுவைத்தேன். பரீட்சைத் தினத்தன்று 42 பேர் சமுகமளித்தனர். எழுத்துப்

பரீட்சையும் நேர்முகப் பரீட்சையும் நடந்தன. அன்று மாலை பரீட்சை முடிவையும் மனேஜர் அவர்கள் கூறினார்கள்.

அது என்னைச் சிறிது கலக்கத்தில் ஆழ்த்தியது.

அவர் சொன்னார் ''இம்முறை 14 பேரை எடுக்கும்படி தான் அரசாங்கம் உத்தரவு இட்டுள்ளது. ஆனால் 24பேரை நான் எடுக்கப் போகிறேன். மிகுதி பத்துப் பேருக்கும் உத்தரவு வந்தாலும் வரலாம். விட்டாலும் விடலாம்.''

இரண்டாம் பகுதி சித்தி எய்தியவர்களிலேதான் இந்தப் பத்துப் பேரையும் எடுக்கப் போகிறேன். அவர்கள் முதலாம் பகுதி சித்தி எய்தினால் நல்லது. கரைச்சல்இல்லை.

எடுபட்டவர்கள் இந்தக் கிழமையே விடுதிப் பணம் முழுவதையும் கட்டவேண்டும்.

என்னையும் தெரிவுசெய்ததாக அறிவித்தார்கள். கடைசிப் பத்துப் பேருள் ஒருவராக.

என்னால் பணம் கட்டுவது (125 ரூபா) சிரமமாயிருந்தது; அவ்வளவு வறுமை. அதை ஆசிரியர் பொன்னுக் குமரன் காத்து வைத்தார். நான் ஆசிரிய கலாசாலையில் சேர்ந்தேன்.

என் கழுத்துக்கு மேல் மயிரிலே தொங்கும் வாள் எப்போது அறுந்து விழுமோ என்ற பயம். ஆயினும் எனக்கு வழிகாட்டும் குரும்பசிட்டி உமையம்மை என்னைக் கைவிடமாட்டாள் என்ற துணிவும் எனக்கு இருந்தது.

ஆம் நான் நினைத்தபடி தெய்வம் துணைநின்றது. ஆசிரிய கலாசாலையில் சேர்ந்த இரண்டொரு மாதங்களில் ஆசிரிய தராதரப்பத்திர வகுப்பு முதலாம் பகுதியிற் சித்தியடைந்தேன். ஒரு கண்டத்திலிருந்து தப்பிப் பிழைத்தேன். ஐந்துபேர் சித்தி எய்தவில்லை. மனேஜர், அவர்களை அடுத்த வருடம் எடுப்பதாகச் சொல்லி அனுப்பிவிட்டார்.

அப்படி இருந்தும் 19 பேர் வகுப்பில் இருந்தோம். அரசாங்கம் அசைந்து கொடுக்கவில்லை. 14 பேர் போக மிகுதி ஐந்துபேரையும் என்ன செய்வதென்றே மனேஜருக்குத் தெரியவில்லை.

எங்கள் வகுப்புக்கு முன்வகுப்பில் 35 பேரும் ஆங்கிலத் தராதரத்தோடு பயிற்சிக்கு வந்தவர்கள். ஒரே ஒருவர் தான் விதிவிலக்கு. ஒருமுறை மனேஜர் அவர்கள், அவர்களுக்கு நிலைமையை விளக்கி வயதுள்ளவர்கள் எழுதுவினைஞர் (கிளறிக்கல்) பரீட்சைக்குத் தோற்றுவது நல்லது என்று கூறினர். அப்படியே ஒருசிலர் தோற்றினர்கள். மூவர் சித்தியடைந்தனர். எனவே நானும் இன்னொரு நண்பரும் எஞ்சியிருந்தோம். மனேஜர் என்னைக் காணும்போதெல்லாம் ''பயப்படாதே அடுத்தமாதம் உன்னையும் உள்நுழைக்க வழி செய்வேன். உபாத்தியாயராகவே நீ வந்தால் நீ சங்கத்துக்கு நல்ல தொண்டுசெய்யவேண்டும்'' என்று சொல்வார். அவர் சொன்னபடி நெடுநாள் சுகவீனமாக இருந்த மாணவர் ஒருவரை வதுளைக்குப் படிப்பிக்க அனுப்பிவிட்டு என்னை அந்த இடத்திற் சேர்த்துக்கொண்டார். இரண்டாவது கண்டத்திலிருந்தும் தப்பி ஆறுதலடைந்தேன்.

ஓர் ஆசிரிய கலாசாலையிற் சேர்ந்ததைப் பற்றி இவ்வளவு நீட்டி முழக்கிச் சொல்வானேன் என வாசக நேயரே நீர் அலுத்துக்கொள்ளலாம். ஆனல் எனது சிறுவயது முதல் பாலைவனத்தைச் சந்தித்திருக்கிறேன். பசுஞ்சோலையைக் கண்டிருக்கிறேன். இரண்டும் அம்மையின் ஆடல்கள் என்பதை உணர்ந்திருக்கிறேன். நின்றும் இருந்தும், கிடந்தும் நடந்தும் நினைப்பவர்க்கு அவள் அருள்வாள் என்பதை வற்புறுத்தவே அப்படி எழுதியுள்ளேன்.

1934ஆம் ஆண்டுமுதல் 1938ஆம் ஆண்டுவரை அந்த ஆசிரியகலாசாலைச் சூழலில் வாழ்ந்தவன் நான். 1937 — 38ஆம் ஆண்டளவிலேதான் புதிய கட்டிடங்கள் படுக்கை

அறைகள் கட்டப்பட்டன. அதற்குமுன் வெறும் தகரக் கொட்டில்கள்; ஆசிரியர்களின் இருப்பிடங்கள்கூடக் கொட்டில்கள்தான். ஆனால் அதிபர் சுவாமிநாதர், உப அதிபர் கைலாசபதி, பண்டிதமணி சி. க. மற்றும் இரு ஆசிரியர்கள் படிப்பிலும் படிப்பிக்கும் ஆற்றலிலும் கைதேர்ந்தவர்கள். எந்த நேரமானாலும் எந்த விஷயமானாலும் வேண்டிய உதவிசெய்யக் காத்திருந்தார்கள். சாதாரண பாடங்களைப் படித்துப் பரீட்சையிற் சித்தி எய்துவதைக் காட்டிலும் ஒரு ஆசிரிய மாணவன் திறமையான ஆசிரியனாக — ஒரு வகுப்பைத் தன்னுடைய ஆண்மையினாலே கவரக்கூடிய ஆசிரியனாக — விளங்கவேண்டும் என்னும் குறிக்கோளே அக்காலச் சைவாசிரிய கலாசாலையில் நிலவியது.

அப்போதுதான் பண்டிதமணியவர்கள் காவிய பாடசாலையொன்றையும் தொடங்கியிருந்தார். தமிழ் சம்ஸ்கிருத பண்டித பாலபண்டித வகுப்புக்கள், சிங்கள வகுப்புக்கள் என்பவை சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நடந்தன. படிப்பு மாத்திரம் இலவசமல்ல; சாப்பாடுகூட இலவசம். அதிசயப்படாதீர்கள் உண்மை. ஒன்றல்ல பத்தல்ல நூற்றுக்கு மேற்பட்டோர் கார்களிலும் பைசிக்கிள்களிலும் வந்து கூடிப் படித்தனர் அப்போதைய திருநெல்வேலிச் சூழலை விளக்க எனக்கு எழுத்துவன்மை போதாது.

அந்த 1937ஆம் ஆண்டு இருந்த முதலாம் வருட வகுப்பில் இருந்த 14 பிள்ளைகளில் நானும் — கதிரவேலு என்ற நண்பரும்தான் அங்கே நெடுங்காலம் படித்தவர்கள் எனவே ஆசிரியர்களுக்கு ஓரளவு தெரியும்.

# 15. பண்டிதமணியின் பார்வை என்மேல் படுகிறது.

வற்று மதுரச் செந்தமிழ்ப் பாற்கடல் மதியே மத்தாக
மாயா வுணர்வே வாசுகி வடமாய் மதித்துழி யுடனுகச்
சற்றே யெனினு மூனமி லாதெழு நண்ணமு தேதேனே
தண்டேன் சுவையே சாருஞ் சுவையிற் றங்கும் சுகவிளேவே
கற்ருர் விழையுங் கற்பக தருவே தருவிற் கனிகனியே
கனியினில் ஊறும் பல்சுவை நறவே கனிநய முறுமலேயே
மற்று ரும்புகழ் மாண்புறு பண்பே மட்டுவில் வளநகர்வாழ்
வண்டமி ழிதமறி பண்டித மணியே வாழிய வாழியவே.

— சோமசுந்தரப் புலவர்

*1934 ஆம் ஆண்டு பங்குனித் திங்களில் ஒருநாள் நான் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலேயில் எஸ். எஸ். எல். சி. படித்துக்கொண்டிருந்த சமயம் எங்கள் வகுப்பிற்கு ஒரு ஆசிரிய மாணவர் ஒருவர் இலக்கிய பாடம் படிப்பிக்க வந்திருந்தார். அவர் கரும்பலகையில்*

''நரும்புகால் பொரக் கமுகின் வார்ந்ததேன்
வரம்பு மீறிடும் மருத வேலிவாய்
அரும்பு கொங்கைகள் அம்மெல் ஓதிபோல்
சுரும்பு வாழ்வதோர் சோலே நண்ணினுர்''

*என்றபாடலே எழுதிவிட்டுப் படிப்பிக்கத் தடுமாறினுர். அப்போது அவரை மேற்பார்வை பார்க்கவந்த பண்டிதமணி அவரைச் சற்றே ஒதுங்கிநிற்கச் சொல்லிவிட்டு தாமே படிப்பித்துக் காட்டினுர், நண்ணினுர் என்பதிலிருந்து வினுவிடை மூலம் படிப்பித்தார். பாடம் அழகாக — ஆணித்தரமாக — மனதில் பதிந்தது. அன்றே பண்டிதமணியும் என்மனதில் வைகினுர். அவரிடம் ஆசிரியகலாசாலேயில் படித்தால் — என — ஆசைப்பட்டேன். திருவருள் வசத்தால் அந்த நற்பேறும் 1937 — 38ஆம் ஆண்டுகளில் எனக்குக் கிடைத்தது.*

*பண்டிதமணி சி. க. வின் தொண்டு, படிப்பிக்கும் ஆற்றல், கட்டுரை வன்மை, அருமையான வசன நடை, சொற்பொழிவு, நாவலர் பக்தி ஈழத்தில் பிரசித்தமானவை. மூன்ருவது கண் என்ற நூலிலே நான் அவற்றைப்பற்றி எழுதியிருக்கிறேன். அதை மீண்டும் எழுதவேண்டிய அவசியமில்லே. பண்டிதமணி என்னேப்பற்றி என்ன நினேக்கிருர் — என்ன எழுதினுர் என்பதையே எழுதுகிறேன்.*

# வாழ்த்து

**(சித்தாந்தசாகரம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை)**

*கனக. செந்திநாதன் சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த காலத்தில் இலக்கிய பாடத்திட்டம் பற்றி ஒரு பிரச்சினை வந்தது; இப்போது இந்துசமய பாடத் திட்டப் பிரச்சினை வந்தது போல. அப்பொழுது தேம்பாவணியில் ஒரு பகுதி ஆசிரிய மாணவர்களின் இலக்கிய பாடத்திட்டத்தில் ஒன்ருய் வந்தது. அது சைவாசிரிய மாணவர்க்கு வேண்டுவதொன்று அன்று என்று, அதனை நான் எதிர்த்தேன். இலக்கியப் போர் ஒன்று மூண்டது. அச் சந்தர்ப்பத்தில்;*

*பரமேசுரப் பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலையாருக்குத் திருநெல்வேலி சைவாசிரியப் பயிற்சிக் கலாசாலையில் இலக்கிய பாடமொன்று, முன் மாதிரிகையாகப் படிப்பித்துக் காட்ட வேண்டிய ஒரு தருணம் கிடைத்தது.*

"ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென"

*என்ற கம்பராமாயண அவையடக்கச் செய்யுளையும் — அதனை அப்படியே படியெடுத்துரைக்க முயன்றது தேம்பாவணி அவையடக்கச் செய்யுள் — அதனையும் சேர்த்து, இரு செய்யுள்களையும் படிப்பித்துக் காட்டும்படி ஆசிரிய மாணவர் ஒருவருக்கு ஆயத்தஞ் செய்துவைத்தேன். அவர் இரு செய்யுள்களின் பொழிப்பு, பதவுரை விளக்கம் என்றிவைகளை நடத்திப், பின் 'நன்கவி' 'புன்கவி' இயல்புகளைக் கம்பரில் எடுத்துக்காட்டி, அதன்மேல் மேற்காட்டிய செய்யுள்கள் எவ்வகையைச் சேர்ந்தவை என்று வினவி விரும்பியவாறு விடைபெற்றுக் கொண்டு, பிறகு அச்செய்யுள்கள் எங்கேயுள்ளவைகள்? ஆக்கியோர் யாவர்? என வினவித் தெரிவித்தார். பாடம் முடிந்தது. மறைமுகமாகப் பாட புத்தகம் விதிப்பவர்களைத் தொட்டுக் காட்டுவதாயிருந்தது. பாடம் முடிந்தபின் குறிப்புரை தொடங்கியது. ஆசிரிய மாணவர்கள் குறிப்புரை கூறினர்கள். அவர்களில் ஒருவர் கனக. செந்திநாதன்.*

*செந்திநாதன் கூறிய* **குறிப்புரை நுட்பமும் விவேகமும் படைத்ததாய் இருந்தது. அக்குறிப்புரையை டாக்டர். கு. சிவப் பிரகாசம்** *(பண்டித பயிற்சிக் கலாசாலை அதிபர்)* **பெரிதும்**

பாராட்டினர். அன்று தொடக்கம் செந்திநாதன் மேல் எனக்கு ஒரு கண் இருந்தது. அதனல் பயிற்சி முடிந்த பிறகும் செந்திநாதனின் தொடர்பு இன்றுவரை வளர்ந்து கொண்டே இருந்து வருகிறது.

நான் நவீன இலக்கிய உலகத்தையோ, ஜனநாயக உலகத்தையோ தீண்டாத மிகமிகப் பழமையான பெரியவர்களின் தொடர்பும் மதிப்பும் உள்ளவன். செந்திநாதன் அதற்கு எதிரானவர். இக்கால இலக்கிய உலகில் முழுகித் திளைத்தவர். அப்படியிருந்தும் எங்கள் தொடர்பு வளர்ந்து கொண்டேயிருக்கின்றது. அவர் என்னிடம் என்ன பெற்றுரோ நான் அறியேன். அவரிடம் நான் பெற்றவை அதிகம், செந்திநாதனைச் சந்திக்குந்தோறும் நவீன உலகு பற்றி விசாரிப்பேன். அவர் கணக்குப் போட்டு இந்த ஆண்டு வெளிவந்த கதைகள் இத்தனை; நாவல்கள் இத்தனை; நாடகம் இத்தனை; கவிதைகள் இத்தனை; அவற்றுள் உயர்தரமானவை இவை என்று சொல்லுவார். நான் கேட்டுக்கொள்வேன். நான் அவற்றை வாசித்துப்பார்க்க விரும்புகிறேன் என்று பெரும்பாலும் அவருக்குச் சொல்லுவதில்லை. சொன்னல் அவற்றையெல்லாம் கட்டிச் சுமந்துகொண்டு வந்துவிடுவார் என்ற பயத்தினலேதான் நான் சொல்வதில்லை.

செந்திநாதன் நவீன இலக்கிய உலகைத் தரிசிப்பதற்கு ஒரு தூரதிருஷ்டிக் கண்ணுடியாய் எனக்கு அமைந்திருந்தார். இப்போது அவர் வெளியிட்ட 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாய் அமைந்திருப்பது கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அதன் தலையங்கங்களைக் கண்ட மாத்திரத்திலேயே, புத்தகத்தையும் திரு. செந்திநாதனையும் என்மனம் வாழ்த்தத் தொடங்கி விட்டது.

குறித்த புத்தகம் உயர்தர வகுப்பு மாணவருக்கும், ஆசிரியர்களுக்கும், கல்விமான்களுக்கும் அரியதொரு விருந்தாயமைந்து பெருமதிப்பைப் பெறும் என்பது எனது நம்பிக்கை.

அன்றி இப்புத்தகத்தின் தொடர்பாக இன்னும் பல புத்தம் அவர் வாயிலாக வெளிவரலாம்.

கடவுள் திரு. கனக. செந்திநாதனுக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அருள்வாரராக!

# ஆத்ம சாந்தி

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

கந்தசஷ்டி நல்நாள் கனகசெந்தி நாதனிங்கு
நம்மைவிட் டங்குசென்ற நாள்.

திருமுருகன் தமிழ்ச்சங்கப் புலவன்; அகத்தியருக்குத் தமிழ் சொன்னவன்.

திருமுருகன் உறைவிடங்களுள் ஒன்முய், "உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்" என்று புகழ்ந்தோதப்படுவது திருச்செந்தூர். அது செந்தில் எனவும் செந்தி எனவும் வழங்கும்.

கந்தசஷ்டி விரதகாலம் விசேட புண்ணியகாலம். ஆணவ வடிவான சூரபத்மன், ஞானசக்தியான வேற்படையால் தீண்டப் பெற்றுச் சேவலும் மயிலுமான காலம் கந்தசஷ்டி காலம்.

காலமும் இடமும் அன்னையும் பிதாவும் போன்றவை. அவை, முதல் கரு உரி என்ற பொருட்பாகுபாட்டில் முதற் பொருள் என்று சிறப்பிக்கப்படுபவை; உரியான உயிர்ப் பொருள் பிறத்தற்குக் காரணமானவை.

தமிழ் ரசிக கனக செந்திநாதனுக்கு கந்தசஷ்டி காலத்தில், மேற்கதிச் செலவு அமைந்தது கிடைத்தற்கரியது.

"... ... ... ... ... ... ... ... ... ... ... ... செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"

என்பது திருமுருகாற்றுப் படையின் இருதய ஸ்தானம்.

இரசிகமணியின்
ஆத்மா
செந்தி முருகனின் செந்தமிழ்த் திருவடிக் கீழ்
அமைதி உறுவதாக.

சாந்தி! சாந்தி! சாந்தி!

16-11-77

[illegible]